பாடசாலை

# www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

You Tube

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10th Standard | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |


**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

# பொருளியல்

# 12

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

## மானவர்களுக்கான
## இலவச வழிகாட்டி

இந்த வழிகாட்டி அரசு பள்ளி மானவர்களுக்காக பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது.


## தொகுத்து வழங்குபவர்

ஆர். ரமேஷ் M.A.,B.Ed.,B.L

பொருளியல் முதுகலை ஆசிரியர்

அரசு மேல்நிலைப் பள்ளி, அரங்கல்துருகம்,

திருப்பத்தூர் மாவட்டம்

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


## 12-ம் வகுப்பு

# பொருளியல்

## பொருளடக்கம்


1. பேரியல் பொருளாதாரம் ....................................4
2. தேசிய வருவாய் ..................................................10
3. வேலைவாய்ப்பு மற்றும் வருமானக் கோட்பாடுள்.....16
4. நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள் .......................24
5. பணவியல் பொருளியல் .....................................31
6. வங்கியியல் .........................................................38
7. பன்னாட்டுப் பொருளியல் .................................45
8. பன்னாட்டு பொருளாதார அமைப்புகள் ................54
9. நிதிப் பொருளியல் ..............................................59
10. சுற்றுச்சூழல் பொருளியல் ..................................66
11. பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல் .........72
12. புள்ளியியல் முறைகள் மற்றும் பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம் ........79



அரசு மேல்நிலைப் பள்ளி, அரங்கல்துருகம்
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அத்தியாயம் - 1

# பேரியல் பொருளாதாரம்

சரியான விடையை தெரிவு செய்க :

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை
அ. சொத்து மற்றும் நலமும்
ஆ. உற்பத்தி மற்றும் நுகர்வு
இ. தேவையும் மற்றும் அளிப்பும்
**ஈ. நுண்ணியல் மற்றும் பேரியல்**

2. மேக்ரோ ( Macro ) என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார் ?
அ. ஆடம்ஸ்மித் ஆ. ஜே.எம்.கீன்ஸ்
**இ. ராக்னர் பிரிக்ஸ்** ஈ. காரல் மார்க்ஸ்

3. 'நவீன பேரியல் பொருளியலின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?
அ. ஆடம்ஸ்மித் **ஆ. ஜே.எம்.கீன்ஸ்**
இ. ராக்னர் பிரிக்ஸ் ஈ. காரல் மார்க்ஸ்

4. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?
அ. விலை கோட்பாடு
**ஆ. வருவாய் கோட்பாடு**
இ. அங்காடி கோட்பாடு
ஈ. நுண்ணியல் கோட்பாடு

5. பேரியல் பொருளாதாரம் என்பது ........... பற்றிய படிப்பு.
அ. தனிநபர்கள்
ஆ. நிறுவனங்கள்
இ. நாடு
**ஈ. மொத்தங்கள்**

6. ஜே.எம்.கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக.
அ. நாடுகளின் செல்வம்
**ஆ. பொது கோட்பாடு**
இ. முலதனம்
ஈ. பொது நிதி

7. பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து ................... ஆகும்.
அ. மொத்த விலைக் குறியீடு
ஆ. வானிபச் சூழல்
**இ. பண வீக்கம்**
ஈ. தேசிய வருவாய்

8. பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக.
அ. அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது.
ஆ. தடைகளை முறியடிப்பது
இ. வளர்ச்சியை அடைவது
**ஈ. மேலே கூறப்பட்ட அனைத்தும்**

9. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.
அ. உற்பத்தி மற்றும் பகிர்வு
ஆ. உற்பத்தி மற்றும் பரிமாற்றம்
**இ. உற்பத்தி மற்றும் நுகர்வு**
ஈ. உற்பத்தி மற்றும் சந்தையிடுகை.

10. ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது
அ. உற்பத்தி துறை
ஆ. நுகர்வு துறை
இ. அரசு துறை
**ஈ. மேலே கூறப்பட்ட அனைத்தும்**

11. எந்த பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமெ உள்ளது?
**அ. முதலாளித்துவ அமைப்பு**
ஆ. சமத்துவ அமைப்பு
இ. உலகமய அமைப்பு
ஈ. கலப்பு பொருளாதார அமைப்பு

12. பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு ................ ஆகும்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ. முதலாளித்துவ அமைப்பு
ஆ. உலகமயத்துவ அமைப்பு
இ. கலப்பு பொருளாதார அமைப்பு
**ஈ. சமத்துவ பொருளாதார அமைப்பு**

13. முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யா?
**அ. ஆடம்ஸ்மித்** ஆ. காரல் மார்க்ஸ்
இ. தக்கேரி ஈ. ஜே.எம்.கீன்ஸ்

14. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு ................ ஆகும்
அ. ரஷ்யா **ஆ. அமெரிக்கா**
இ. இந்தியா ஈ. சீனா

15. சமத்துவத்தின் தந்தையை கண்டுப்பிடி
அ. ஜே.எம்.கீன்ஸ் **ஆ. காரல் மார்க்ஸ்**
இ. ஆடம்ஸ்மித் ஈ. சாமுவேல்சன்

16. தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் ............... ஆகும்.
அ. முதலாளித்துவ பொருளாதாரம்
ஆ. சமத்துவ பொருளாதாரம்
இ. உலகமயத்துவ பொருளாதாரம்
**ஈ. கலப்புப் பொருளாதாரம்**

17. ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் ......... ஆகும்.
அ. உற்பத்தி **ஆ. இருப்பு**
இ. மாறிலி ஈ. ஓட்டம்

18. கீழ்வருவனவற்றுள் ஒட்ட மாறிலியை கண்டுபிடி
அ. பண அளிப்பு
ஆ. சொத்துக்கள்
**இ. வருவாய்**
ஈ. வெளி நாட்டு செலாவணி இருப்பு

19. இரு துறை மாதிரியில் உள்ள இருதுறைகளை குறிப்பிடுக.
**அ. குடும்பங்களும் நிறுவனங்களும்**
ஆ. தனியார் மற்றும் பொதுத் துறை
இ. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகள்
ஈ. நிறுவனங்களும் அரசும்

20. திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது ................ ஆகும்
அ. இருதுறை மாதிரி
ஆ. முத்துறை மாதிரி
**இ. நான்கு துறை மாதிரி**
ஈ. மேல் சொல்லப்பட்ட அனைத்தும்

## கீழ் கண்டவற்றுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி (2 மதிப்பெண்)

21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
- பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும்.
- 'பேரியல் பொருளாதாரம் என்பது உண்மைகள் மற்றும் கோட்பாடுகளை ஒருங்கிணைப்பது பற்றியதே ஆகும்' - டான் புஸ், பிஸ்சார், ஸ்டார்டிஸ்

22. பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.
பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்

23. பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?
'மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது' என ஏ.ஜே. பிரவுண் குறிப்பிட்டுள்ளார்.
(அல்லது)
மனித விருப்பங்களை பற்றியும், அவை நிறைவு செய்யப்படுவது பற்றியும் ஆராய்வது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



24. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.

வளர்ந்த, வளராத, முன்னேறாத, வளரும் பொருளாதார அமைப்புகள்

25. முதலாளித்துவம் என்றால் என்ன?

- உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும்.
- இலாபம் பெறுவதே முதன்மையான நோக்கம்.

26. பொருளாதார மாதிரியின் இலக்கனம் தருக.

- மாதிரி என்பது உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது.
- பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குவது ஆகும்.

27. வருமானத்தின் வட்ட ஓட்டம் - வரையறு.

- பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவது
- குடும்பங்கள், நிறுவனங்கள் அரசு மற்றும் நாடுகள் ஆகியவற்றிடையே வருவாய், பொருட்கள், பணிகள் ஆகியவற்றின் ஓட்டத்தை விளக்குவது.

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக. (3 மதிப்பெண்)

28. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தருக.

- ஒரு பொருளாதார அமைப்பின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை புரிந்து கொண்டு, அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவுகிறது.

- எதிர்கால பிரச்சினைகளைப் புரிந்துக்கொண்டு, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்க்கு உதவுகிறது.

- நடப்பு பிரச்சினைகளை அறிவியல் பூர்வமாக அறிய உதவுகிறது.

29. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.

1. வளர்ச்சி தீநிலை :

வளர்ந்த, வளராத, வளரும் பொருளாதார அமைப்பு

2. நடவடிக்கைகளின் முறை

முதலாலித்துவ, சமத்துவ, கலப்பு பொருளாதார அமைப்புகள்

3. நடவடிக்கைகளின் அளவு :

சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்

30. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.

1. தனியார் சொத்துரிமை

நிலம், உழைப்பு, மூலதனம், இயந்திரங்கள், சுரங்கம் போன்ற அனைத்து வளங்களும் தனி நபர்களுக்கு சொந்தமாக இருக்கும்.

2. இலாப நோக்கம்

அனைத்து பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே முக்கிய நோக்கமாக இருக்கும்.

3. போட்டியில் சுதந்திரம்

பொருட்கள் சந்தை மற்றும் காரணிகள் சந்தை இரண்டிலும் முழு சுதந்திரம் உண்டு.

4. விலை இயங்கும் முறை

தேவை மற்றும் அளிப்பு ஆகிய அங்காடி சக்திகளால் விலை இயங்கும் முறை கட்டுப்படுத்தப்படுகிறது.

5. அரசின் பங்கு

முதலாளித்துவத்தில் அரசின் பங்கு மிகக் குறைவாக இருக்கும். (ஏதேனும் மூன்று)

31. சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.

1. சிகப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம் :

அனைத்து முடிவுகளையும் அரசே எடுப்பதால், இது சிகப்பு நாடா நிலைக்கு கொண்டு செல்லும்.

2. ஊக்கமில்லாமை :

திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



எனவே, உற்பத்தி திறன் பாதிக்கப்படும்.

3. தெரிவு செய்வதில் சுதந்திரம் குறைவு :
பண்டங்கள் மற்றும் பணிகளை நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் நுகர்வோருக்கு இருக்காது

4. அதிகாரம் குவிதல் :
அரசே அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது. இது அதிகார துஷ்பிரயோகத்திற்கு வாய்ப்பாகவும் அமைகிறது.

32. கலப்பு பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.

1. சொத்து மற்றும் உற்பத்திச் சாதனங்களின் உரிமம்:
சொத்துக்களும் உற்பத்திச் சாதனங்களும் தனியார் மற்றும் பொதுத்துறைக்குச் சொந்தமாக இருக்கும்.

2. பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருக்கும் :
கலப்பு பொருளாதாரத்தில் தனியார் மற்றும் பொதுத்துறைகள் இணைந்திருக்கும்.

3. பொருளாதார திட்டமிடல் :
மைய திட்டமிடல் அதிகாரம் மூலம் அரசின் திட்டங்களை தனியார் துறையும் பொதுத்துறையும் மதித்து பின்பற்றும்.

4. பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு :
எதனை உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது போன்ற அடிப்படை பிரச்சினைகளை விலை இயக்க முறை மற்றும் அரசின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்படும்.

**பெட்டி செய்தி :**

- **உலகத்துவம் என்ற பதத்தை உருவாக்கியவர் மேன்பிரட்டிஸ்கர். ஆண்டு 2002**
- **உலகத்துவம், விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் என்றும் குறிப்பிடப்படுகின்றது.**

33. முதலாளித்துவம் மற்றும் சமத்துவத்தை வேறுபடுத்துக .

| முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|
| இது தடையில்லா பொருளாதாரம் அல்லது சந்தை பொருளாதாரம் என்றும் அழைக்கிறோம். | திட்டமிட்ட பொருளாதாரம் அல்லது கட்டளை பொருளாதாரம் என்றும் அழைக்கிறோம் |
| உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும் | அரசின் கட்டுப்பாடு அதிகமாக இருக்கும் |
| இலாபம் பெருவதே முக்கிய நோக்கம் | பொது நலமே முக்கிய நோக்கம் |
| முதலாளித்துவத்தின் தந்தை ஆடம்ஸ்மித் | சமத்துவத்தின் தந்தை கார்ல் மார்கஸ் |

34. இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.

இல்லங்கள், நிறுவனங்கள் என்ற இரு துறைகள் மட்டுமே காணப்படும்

1. இல்லத்துறை
- பொருட்கள் மற்றும் பணிகளை வாங்கும் ஒரே துறை இல்லத்துறை.
- நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்தி காரனிகளை நிறுவனத்துறைக்கு அளித்து வருவாயை பெறுகிறது.

2. நிறுவனத்துறை
- பொருட்கள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்து வருவாயை ஈட்டுகிறது.
- உற்பத்திக் காரணிகளுக்கு ஊதியம் வழங்குகிறது.

இரு துறை பொருளாதாரத்தில், உற்பத்தி மற்றும் விற்பனை சமமாகவும் வருவாய் மற்றும் பொருட்கள் வட்ட ஓட்டமாகவும் காணப்படும்.


$$Y = C + I$$



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in






கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி (5 மதிப்பெண்)

35. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.

1. தேசிய வருவாய்

தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதாரத்தின் அடிப்படை அம்சமாகும்.

2. பணவீக்கம்

பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

3. வாணிப சுழற்சி

வாணிப சுழற்சி மாற்றங்களான செழிப்பு, பின்னிறக்கம், மந்தநிலை மற்றும் மீட்பு ஆகியவற்றை தெறிந்துக்கொள்ள உதவுகிறது.

4. வறுமை மற்றும் வேலையின்மை

வளங்கள் நிறைந்த நாடுகளில் வறுமை மற்றும் வேலையின்மை மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவுகிறது.

5. பொருளாதார வளார்ச்சி

பேரியல் பகுப்பாய்வின் மூலம் பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்துக் கொள்ள முடியும்.

6. பொருளாதார கொள்கைகள்

பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

36. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.


- ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகும்.
- இந்த நடவடிக்கைகளின் தலையான நோக்கம் வளர்ச்சியை அடைவதாகும்.
- பரிமாற்ற பணி (Exchange Activity) யானது உற்பத்தி மற்றும் நுகர்வு பணிகளுக்கு உதவுகின்றன.
- இந்த நடவடிக்கைகள் பல்வேறு பொருளாதார மற்றும் பொருளாதாரமற்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகின்றன.
- பொருளாதார நடவடிக்கைகள் : போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின் கொள்கை மற்றும் பிற பணிகள்
- பொருளாதாரமற்ற நடவடிக்கைகள் : சுற்றுச்சூழல், ஆரோக்கியம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை, நெறிபடுத்துதல் போன்றவை.
- வெளிப்புற நடவடிக்கைகள் இறக்குமதி, ஏற்றுமதி, பன்னாட்டு உறவுகள், பன்னாட்டு முதலீடு, பன்னாட்டு மாற்று வருவாய் போன்றவை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in






37. முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் இவற்றின் இயல்புல்களை ஒப்பிடுக.

38. முதலாளித்துவ, சமத்துவ, கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.

**பொருளாதார அமைப்புகளை ஒப்பிடுதல்** ஏதேனும் 5 மட்டும்

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமைகள் | தனியர் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2 | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3 | மைய பிரச்சனை களின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்ட முறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4 | அரசின் சந்தை | உள்ளீடு கட்டுபாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5 | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமனிலையற்ற நிலை |
| 6 | நிறுவனத் தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7 | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாடுடன் சுதந்திரம் |
| 8 | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அத்தியாயம் 2

# தேசிய வருவாய்

சரியான விடையை தெரிவு சியோக.

1. உற்பத்திக் காரணியின் செலவின் அடிப்படையிலான NNP
**அ. தேசிய வருவாய்**
ஆ. உள் நாட்டு வருமானம்
இ. தலைவீத வருமானம்
ஈ. சம்பளம்

2. முதன்மைதுறை என்பது
அ. தொழில் ஆ. வியாபாரம்
**இ. விவசாயம்** ஈ. கட்டடம் கட்டுதல்

3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
அ. இரண்டு **ஆ. மூன்று**
இ. ஐந்து ஈ. நான்கு

4. எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
அ. வருவாய் ஆ. வரி
இ. செலவு **ஈ. வருமானம்**

5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும் ?
அ. செலவிடக்கூடிய வருமானம்
ஆ. தனி நபர் வருமானம்
இ.NNP
**ஈ. GNP**

6. .................. துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது.
**அ. கட்டடத்துறை** ஆ. விவசாயத்துறை
இ. பணித்துறை ஈ. வங்கித்துறை

7. மூன்றாம் துறை ................ எனவும் அழைக்கப்படுகிறது.
**அ. பனிகள்** ஆ. வருமானம்
இ. தொழில் ஈ. உற்பத்தி

8. ஒரு நாட்டின் ................ செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.
அ. தொழில் ஆ., விவசாயம்
**இ. பொருளாதாரம்** ஈ. நுகர்வு

9. ................ ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.
அ. உற்பத்தி
**ஆ. நாட்டின் மக்கள் தொகை**
இ. செலவு
ஈ. GNP

10. GNP = ........... + வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.
அ. NNP
ஆ. NDP
**இ. GDP**
ஈ. தனி நபர் வருமான்ம்

11. NNP என்பது
**அ. Net National Product**
ஆ. National Net Product
இ. National nNet Providemt
ஈ. Natoinal Provivident

12. மொத்த மதிப்பிலிருந்து ................ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்?
அ. வருமானம்
**ஆ. தேய்மானம்**
இ. செலவு
ஈ. முடிவடைந்த பொருட்களின் மதிப்பு

13. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது ------------
**அ. ஏப்ரல் 1 முதல் மார்ச் 31**
ஆ. மார்ச் 1 முதல் ஏப்ரல் 30



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

இ. மார்ச் 1 முதல் மார்ச் 16

ஈ. ஜனவரி 1 முதல் டிசம்பர் 31

14. NNP யிலிருந்து வெளி நாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு ................

அ. மொத்த தேசிய உற்பத்தி

ஆ. செலவிடக்கூடிய வருமானம்

**இ. நிகர உள்நாட்டு உற்பத்தி** ( NDP )

ஈ. தனி நபர் வருமானம்

15. உற்பத்திப் புள்ளியில் NNP யின் மதிப்பு ..................... என அழைக்கப்படுகிறது.

**அ. காரணி செலவில்** NNP

ஆ. சந்தை விலயில் NNP

இ. காரணி செலவில் GNP

ஈ. தலைவீத வருமானம்

16. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது ...............

அ. தனிநபர் வருமானம்

**ஆ. தலைவீத வருமானம்**

இ. பணவீக்க வீதம்

ஈ. செலவிடக்கூடிய வருமானம்

17. பணவீக்கத்திற்க்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு ............ என அழைக்கப்படுகிறது.

அ. பணவீக்க வீதம்

ஆ. செலவிடக்கூடிய வருமானம்

இ.GNP

**ஈ. உண்மை தேசிய வருவாய்**

18. கீழ்வருவனவற்றுல் எது ஒட்ட கருத்துரு?

அ. சட்டைகளின் எண்னிக்கை

ஆ. மொத்த சொத்து

**இ. மாத வருமானம்**

ஈ. பண அளிப்பு

19. PQLI என்பது ................ குறியீடு ஆகும்

அ. பொருளாதார வளர்ச்சி

**ஆ. பொருளாதார நலன்**

இ. பொருளாதார முன்னேற்றம்

ஈ.பொருளாதார மேம்பாடு

20. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் .................. லிருந்து வருகிறது

**அ. தனியர் துறை** ஆ. உள்துறை

இ. பொதுத் துறை ஈ. எதுவும் இல்லை

கீழ்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. தேசிய வருவாய் இலக்கணம் கூறுக.

- ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்திசெய்கின்றன.
- இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம் ஆகும் - ஆல்ஃபிரட் மார்ஷல்

22. GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.

சந்தை விலையில் GNP = சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்

23. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?

| NNP | NDP |
|---|---|
| ◆ வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம் சேர்க்கப்படுகிறது | ◆ வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம் சேர்க்கப்படுவதில்லை |
| ◆ NNP = GNP - தேய்மானம் | ◆ NDP = GDP - தேய்மானம் |

24. GNP க்கும் NNP க்கும் உள்ள தொடர்பினை எழுதுக.

- வெளி நாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம் GNP, NNP ஆகிய இரண்டிலும் சேர்க்கப்படுகிறது.
- GNP யிலிருந்து தேய்மானத்தின் மதிப்பை கழித்த பின் கிடைப்பது NNP.
- NNP = GNP - தேய்மானம்

25.தனிநபர் வருமானம் என்றால் என்ன?

◆ ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளிலிருந்து கிடைக்க பெரும் மொத்த வருமானம் தனிநபர் வருமானம் ஆகும்.

◆ அவை வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம்

26. GDP குறைப்பான் இலக்கணம் தருக.

◆ GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பண மதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

27.தேசிய வருவாய் கணக்கீட்டில் 'சுய நுகர்வு' எவ்வாறு சிரமத்தை தருகிறது?

◆ விவசாயிகள் தங்களின் சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர்.

◆ இவ்வாறு ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக (3 மதிப்பெண்)

28. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

◆ தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.

◆ தேசிய வருமானத்தை மக்கள் தொகையில் வகுக்க கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருவாய்}}{\text{மக்கள் தொகை}}$$

29.தனிநபர் வருமானத்திற்க்கும் செலவிடக் கூடிய வருமானத்திற்க்கும் உள்ள வித்தியாசம் என்ன?

| தனி நபர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|
| ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளிலிருந்து கிடைக்க பெரும் மொத்த வருமானம் தனிநபர் வருமானம் ஆகும். | தனி நபர்கள் நேர்முக வரியை செலுத்திய பின் நுகர்வுக்காக செலவிடக் கூடிய வருமானம் செலவிடக்கூடிய வருமானம் |
| தனிநபர் வருமானம் = தேசிய வருமானம் - (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம் ) + மாற்று செலுத்துதல்கள் | செலவிடக்கூடிய வருமானம் = தனி நபர் வருமானம் - நேர்முக வரிகள் |

30. காரணி செலவில் NNP - விவரி

◆ NNP என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும்

◆ காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்தல்கள் ஆகும்.

◆ காரணி செலவில் NNP = சந்தை விலையில் NNP - மறைமுகவரி + மானியம்

31. செலவு முறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக.

◆ ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

◆ தனிநபர் சுய நுகர்வு செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல், முதலீட்டு செலவு, மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைது செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக் கிடப்படுகிறது.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



GNP = C + I + G + ( X - M )

C - தனியார் நுகர்வு செலவு
I = தனியார் முதலீட்டு செலவு
G = அரசின் கொள்முதல் செலவு
X - M = நிகர ஏற்றுமதி

32. தேசிய வருவாய் கணக்கிடுதலில் 'இருமுறை கணக்கீட்டு பிரச்சனைக்கு என்ன தீர்வு ?

◆ ஒரு துறையின் வெளியீடு மற்றொரு துறையின் உள்ளீடாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இரு முறை கணக்கிட வாய்ப்புள்ளளது. இதற்க்கு இருமுறை கணக்கிடல் என்று பெயர்.

**தீர்வு :**

◆ இறுதி பொருட்களின் மதிப்பை கூட்டுவதன் மூலமும்,

◆ உற்பத்தியின் ஒவ்வொரு நிலையிலும் ஏற்பட்ட மதிப்பு கூட்டலை தொகுப்பதன் மூலமும் நாட்டு வருமானத்தை பெறலாம்.

◆ இதன் மூலம் இருமுறை கனக்கிடுதல் பிரச்சினையை தவிற்க்கலாம்.

33. தேசிய வருவாய் மற்றும் பொது நலன் ஆகியவற்றை பற்றி சுருக்கமாக எழுதுக.

◆ ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார நலனும் அந்நாட்டின் தேசிய வருமானத்தை பொருத்தே அமையும்.

◆ அதிக தலா வருமானம் உடைய நாடு, அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.

◆ தலா வருமானம் அதிகரித்தால் பொருளாதார நலனும் அதிகரிக்க வேண்டும் என்பது இல்லை.

◆ நுகர்வு பொருட்களை விட மூலதன பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்தால் பொருளாதார நலன் குறையும்

◆ இயற்கை வளங்களை மாசுபடுத்தி அதிக GDPயை பெற்றால் பொருளாதார நலன் குறையும்

34. தேசிய வருவாயின் பயன்களை பட்டியலிடுக.

1. தேசிய வருமானத்தில் பல்வேறு துறைகளின் பங்களிப்பை அறிய முடியும்.
2. பணவியல் மற்றும் பொது நிதிக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களை மதிப்பிடுவதற்க்கும் உதவுகிறது.
4. பொருளாதார மாதிரிகளை உருவாக்க உதவுகிறது.
5. தலா வருமானம் கணக்கிட உதவுகிறது.

கீழ்காணும் வினாக்களுக்கு விரிவக விடையளிக்கவும்

1. தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி

I. தேசிய வருமானத்தில் பல்வேறு துறைகளின் பங்களிப்பையும், முக்கியத்துவத்தையும் அறிய முடியும்.

II. தேசிய அளவிலான பணவியல் மற்றும் பொது நிதிக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.

III. திட்டமிடுதலுக்கும், திட்டங்களை மதிப்பிடுவதற்க்கும் உதவுகிறது.

IV. மொத்த நுகர்வு, உற்பத்தி, வருமானம், சேமிப்பு ஆகிய விவரங்களை அறிய உதவுகிறது.

V. குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க உதவுகிறது.

VI. மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிட உதவுகிறது.

VII. தலா வருமானம் கணக்கிட உதவுகிறது

VIII. வரி வருவாய், நிதி பற்றாக்குறை, கடன் போன்றவற்றை அறிய உதவுகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. தேசிய வருவாயை கணக்கிடும் முறைகளை விளக்குக.

◆ தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம்.

◆ அவை :

1. உற்பத்தி முறை
2. வருமான முறை
3. செலவு முறை

◆ இவற்றை சரியாக பயன்படுத்தி கணக்கிட்டால்

**உற்பத்தி = வருமானம் = செலவு**

இம்மூன்று மதிப்பும் சமமாக இருக்கும்.

**1. உற்பத்தி முறை :**

◆ உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும்.

◆ பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் கூட்டப்பட்ட மதிப்பின் கூட்டுத் தொகையே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

◆ **துறைகள் :**

- முதன்மை
- இரண்டாம் நிலை
- தயாரிப்பு
- துணை நிறுவனங்கள்

◆ இருமுறை கணக்கிடுதல் இம்முறையில் உள்ள மிகப்பெரிய சிக்கலாகும்.

**2. வருமான முறை :**

◆ உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தை கணக்கிடுவது வருமான முறை ஆகும்.

**கணக்கிடும் நிலைகள் :**

காரணிகள் வருவாய் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

**அவை :**

i. உழைப்பாளர் வருமானம்
ii. மூலதன வருமான்ம்
iii. கலப்பு வருமானம்

$$Y = w + r + i + \pi + (R - P$$

இதில்

w = கூலி , r = வடகை, i = வட்டி,
$\pi$ = இலாபம், R = ஏற்றுமதி,
P = இறக்குமதி

ஆகிய வருமானங்களின் கூட்டுத்தொகையே மொத்த நாட்டு வருமானமாகும்.

**3. செலவு முறை :**

◆ ஓர் ஆண்டில் நாட்டில் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

◆ **அவை :**

- தனி நபர் நுகர்வுச் செலவு ( C )
- தனியார் முதலீட்டு செலவு ( I )
- அரசின் கொள்முதல் செலவு ( G )
- நிகர ஏற்றுமதி ( X - M )

$$GNP = C + I + G + ( X - M )$$

3. தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

**1. மாற்றுச் செலுத்துதல்கள் :**

ஒய்வூதியம், உதவித்தொகை, மானியங்கள் போன்ற மாற்றுச் செலுத்துதல்கள் தேசியவருவாயில் சேர்பதில்லை.

**2. தேய்மானம் மதிப்பிடுவதில் சிக்கல் :**

தேய்மானம், விபத்து இழப்பீடு போன்றவற்றை சரியாக மதிப்பீடு செய்து தேசிய வருவாயிலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல.

**3. பணம் செலுத்தப்படாத சேவைகள் :**

◆ பெண்கள் வீட்டில் செய்யும் உணவு தயாரித்தல், துவைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை வளர்த்தல் போன்ற வேலைகளுக்கு எந்தவித

பண வருமானமும் பெறுவதில்லை.

◆ இத்தகைய மதிப்பு மிக்க பணிகள் தேசிய வருமானத்தில் சேர்க்கப்படுவதில்லை.

**4. சட்டவிரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம்:**

◆ சூதாட்டம், கடத்தல், சட்ட விரோதமாக மது தயாரித்தல், லஞ்சம் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் வருமானம் தேசிய வருமானத்தில் சேர்க்கப்படுவது இல்லை.

**5. சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் :**

◆ விவசாயிகள் தங்களின் சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர்.

◆ இவ்வாறு ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**6. மூலதன இலாபம் :**

◆ மூலதன சொத்துக்களை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது.

◆ தேசிய வருவாய் கணக்கீட்டில் மூலதன இலாபம் சேர்க்கப்படுவது இல்லை.

4. பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.

◆ சமூகக் கணக்கிடுதல் மூலமாகவும் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

◆ சமூகக் கணக்கிடுதல் பொருளாதார அறிஞர்களுக்கு கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.

◆ எதிர்கால பொருளாதார நிலையை துல்லியமாக கணிப்பதற்கும் உதவுகிறது.

◆ இம்முறையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் கீழ்கண்ட துறைகளாக பிரிக்கப்படுகிறது.

i. நிறுவனங்கள்

ii. குடும்பங்கள்

iii. அரசு

iv. வெளிநாட்டு வாணிபம்

v. மூலதன துறை

❖ **நிறுவனங்கள் :**
பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்கின்றன.

❖ **குடும்பங்கள் :**
பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்குகின்றன.

❖ **அரசு :**
அரசு பல்வேறு வழிகளில் நிதி திரட்டுகிறது. பாதுகாப்பு , பொது சுகாதாரம், கல்வி ஆகியவற்றை மக்களுக்கு வழங்குகிறது.

❖ **வெளிநாட்டு வாணிபம் :**
ஏற்றுமதி, இறக்குமதி, வெளி நாட்டு கடன், வெளி நாட்டு முதலீடு போன்றவை.

❖ **மூலதன துறை :**
சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அத்தியாயம் 3

# வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

1. நடப்பு கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது ......... எனப்படும்.
   அ) முழு வேலைவாய்ப்பு
   ஆ. குறைந்தளவு வேலைவாய்ப்பு
   இ. வேலைவாய்ப்பின்மை
   ஈ. வேலைக்கான வாய்ப்பு

2. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு ____.
   அ) இயங்கா சமுதாயம்
   ஆ) சமதர்ம சமுதாயம்
   இ) இயங்கும் சமுதாயம்
   ஈ) கலப்புப் பொருளதாரம்

3. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி
   அ) பூஜ்யம் ஆ) ஒன்று
   இ) இரண்டு ஈ) நேர்மறை

4. தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு ____.
   அ) குறைந்த அளவு வேலைவாய்ப்பு
   ஆ) பொருளாதாரம் எப்போதும் சம நிலையில் இருக்கும்
   இ) தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது
   ஈ) நிறை குறை போட்டி

5. J. B. சே ஒரு ____.
   அ) புதிய தொன்மை பொருளியலாளர்
   ஆ) தொன்மை பொருளியலாளர்
   இ) நவீன பொருளியலாளர்
   ஈ) புதிய பொருளியலாளர்

6. கீன்ஸின் கருத்துப்படி, முதலாளித்துவ பொருளதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது?
   அ) முழு வேலைவாய்ப்பு
   ஆ) தன் விருப்ப வேலையின்மை
   இ) தன் விருப்பமற்ற வேலையின்மை
   ஈ) குறைவு வேலைவாய்ப்பு

7. வேலைவாய்ப்பு பற்றி தொன்மை கோட்பாட்டின் மையக்கருத்து என்பது ____.
   அ) குறைந்து செல் விளைவு விதி
   ஆ) தேவை விதி
   இ) அங்காடி விதி
   ஈ) நுகர்வு விதி

8. கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது ____.
   அ) விளைவு அளிப்பு பற்றாக்குறை
   ஆ) விளைவு தேவை பற்றாக்குறை
   இ) இரண்டும் பற்றாக்குறை
   ஈ) எவையும் இல்லை

9. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது ____நெகிழ்வு ஆகும்.
   அ) தேவையின் ஆ) அளிப்பின்
   இ) மூலதனத்தின் ஈ) வட்டியின்

10. நவீன பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் ____ கோட்பாடு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.
   அ) கீன்ஸ் ஆ) சே (Say)
   இ) தொன்மையது ஈ) வேலைவாய்ப்பு

11. வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து ____ ஆகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

ஈ) பற்றாக்குறை வரவு செலவு



அ) தொகுத் தேவை
ஆ) தொகு அளிப்பு
**இ) விளைவுத் தேவை**
ஈ) இறுதிநிலை நுகர்வு விருப்பு

**12. தொகுத் தேவையின் கூறு ____ ஆகும்.**
அ) தனிநபர் தேவை
**ஆ) அரசுச் செலவு**
இ) ஏற்றுமதி மட்டும்
ஈ) இறக்குமதி மட்டும்

**13. மொத்த அளிப்பு சமம் ____.**
அ) C+I+G
ஆ) C+S+G+(X−M)
இ) C+S+T+(X−M)
**ஈ) C+S+T+Rf**

**14. தலையிடாக் கொள்கைக்குப் பதிலாக கீன்ஸின் கோட்பாடு ____ யை எடுத்துரைக்கிறது.**
அ) அரசுத் தலையீடின்மை
ஆ) உச்சஅளவுத் தலையீடு
**இ) சில சூழல்களில் அரசின் தலையீடு**
ஈ) தனியார் துறை தலையீடு

**15. கீன்ஸின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில், ____ பொருளாதார மந்த நிலைக்குக் காரணமாக உள்ளது.**
அ) குறைவான உற்பத்தி
ஆ) அதிகத் தேவை
இ) நெகிழ்வற்ற அளிப்பு
**ஈ) உற்பத்தித்திறன் ஒப்பிடும்போது மிகக் குறைந்தளவு மொத்தத் தேவை**

**16. தொன்மைக் கோட்பாடு ____ ஐ ஆதரிக்கிறது.**
**அ) சமநிலை வரவு செலவு**
ஆ) சமமற்ற வரவு செலவு
இ) உபரி வரவு செலவு
ஈ) பற்றாக்குறை வரவு செலவு

**17. _______ சமநிலையை கீன்ஸுடைய கோட்பாடு வலியுறுத்தியது.**
அ) மிகக்குறுகிய காலம்
**ஆ) குறுகிய காலம்**
இ) மிக நீண்ட காலம்
ஈ) நீண்ட காலம்

**18. தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டி வீதம் ____க்கான வெகுமதி.**
அ) முதலீடு ஆ) தேவை
இ) மூலதனம் **ஈ) சேமிப்பு**

**19. கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது ____ ஆகும்.**
**அ) வட்டி வீதம்**
ஆ) விளைவுத் தேவை
இ) தொகுத் தேவை
ஈ) தொகு அளிப்பு

**20. ஒரு பொருளாதாரத்தில் _______ இயக்கத்தை சே (Say) யின் விதி வலியுறுத்தியது.**
அ) தூண்டப்பட்ட விலைக் கருவி
**ஆ) தானியங்கும் விலைக் கருவி**
இ) தூண்டப்பட்ட தேவை
ஈ) தூண்டப்பட்ட முதலீடு

**கீழ்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.**

**1. "முழு வேலைவாய்ப்பு" வரையறு.**
- "முழு வேலைநிலை என்பது விருப்பமில்லா வேலையின்மை இல்லாமல் இருப்பது" என்று கீன்ஸ் கூறியுள்ளார்.

**2. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?**
- கிராமங்களில் மறைமுக வேலையின்மை மற்றும் பருவகால வேலையின்மை நிலவுகிறது.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

3. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.

◆ உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்கலிகமாக ஏற்படுகிறது.

4. தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக.

◆ பணியாளர்களின் திறன்கள் மற்றும் திறமைகள் குறைவு,

◆ தொழிற்சாலை மூடல்,

◆ தொழில் நஷ்டம்,

◆ புதிய நவீன இயந்திரங்களின் பயன்பாடு

5. சே விதியின் எடுகோள்களை பட்டியலிடுக.

◆ முழு வேலை நிலை நிலவும்.

◆ உழைப்பு மற்றும் பண்டங்களின் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவும்.

6. "விளைவுத் தேவை" என்றால் என்ன?

◆ விளைவுத் தேவை என்பது உற்பத்திச் செய்யப்பட்ட பொருள்களின் மூலம் தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கும் பணத்தின் அளவு ஆகும்.

◆ விளைவுத் தேவை தேசிய வருவாய்க்கு சமமாக இருக்கும்.

7. தொகு அளிப்பின் கூறுகள் யாவை?

தொகு அளிப்பின் நான்கு கூறுகள்

◆ மொத்த நுகர்வுச் செலவு (c)

◆ மொத்த தனியார் சேமிப்பு (s)

◆ நிகர வரிவசூல் (T)

◆ தனிநபர் வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரண தொகை ( Rf )

**AS = C+S+T+ Rf**

8. சே யின் அங்காடி விதியை எழுதுக.

அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும். - ஜே.பி.சே

## Part B

1. கீழ்க்காணுபவற்றை சுருக்கமாக விவரி.

அ. பருவ கால வேலையின்மை

ஆ. உடன்பாடில்லா வேலையின்மை

இ. படித்தவர் வேலையின்மை

அ.பருவ கால வேலையின்மை :

ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர்.

உதாரணம் :

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி).

ஆ. உடன்பாடில்லா வேலையின்மை :

◆ உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்கலிகமாக ஏற்படுகிறது.

இ. படித்தவர் வேலையின்மை :

◆ சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை. அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர்.

◆ இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை **என்று பெயர்.**

2. தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாட்டின் படி கூலிக் குறைப்பு


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**எவ்வாறு வேலையின்மைப் பிரச்சனைக்குத் தீர்வாக அமைந்தது என்பதை வரைபடம் மூலம் விளக்குக.**

◆ பேராசிரியர் A.C. பிகு கீழ்க்கண்ட சமன்பாட்டின் மூலம் விளக்குகிறார்

$$N = q . Y / W$$


N = தொழிலாளர்களின் எண்ணிக்கை.

q = கூலியின் மூலம் பெறப்பட்ட வருமானம்

Y = தேசிய வருமானம் ( முழு வேலைநிலை)

W = கூலி விகிதம்.

◆ கூலியை ( W ) குறைப்பதன் மூலம் வேலைவாய்ப்பை ( N ) உயர்த்தலாம்.




**வரைபட விளக்கம் :**

$S_L$ = உழைப்பின் அளிப்பு கோடு.

$D_L$ = உழைப்பின் தேவை கோடு.

◆ உழைப்பின் தேவைக்கோடும் உழைப்பின் அளிப்பு கோடும் E என்ற புள்ளியில் ஒன்றோடொன்று வெட்டும்.

◆ இந்த புள்ளி முழு வேலைவாய்ப்பை காட்டுகிறது.

◆ இங்கு கூலி w/p, முழு வேலை நிலை NF

◆ கூலியை w/p1 லிருந்து w/p ஆக குறைப்பதன் மூலம் வேலையின்மை மறைந்து முழு வேலைவாய்ப்பு NF நிலையை அடைந்து வேலையின்மை பிரச்சனைக்கு தீர்வாக அமக்கிறது.

**2. ஜே.பி.சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.**

1. அதிக உற்பத்திக்கும் வேலை யின்மைக்கும் வாய்ப்பில்லை
2. விலைக் கருவி தானாக இயங்குவதால் அரசின் தலையீடு இருக்காது.
3. பரிவர்தனைக்கு மட்டுமே பணம் உதவும்

**3. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளை கூறுக.**

குடும்பங்கள்,
நிறுவனங்கள்,
அரசு மற்றும்
வெளிநாட்டவர் ஆகியோர்
உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்குவதற்காக செய்கின்ற செலவு தொகை தொகு தேவை எனப்படும்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

கூறுகள் :

1. நுகர்வுத் தேவை ( C )
2. முதலீட்டுத் தேவை ( I )
3. அரசு செலவு ( G )
4. நிகர ஏற்றுமதி ( X - M)

AD = C+ I + G + ( X - M )


**4. தொகு அளிப்பு வரைபடம் மூலம் விளக்குக.**

ஒரு நாட்டில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு தொகு அளிப்பு எனப்படும்.

கூறுகள் :

1. மொத்த நுகர்வுச் செலவு (c)
2. மொத்த தனியார் சேமிப்பு (s)
3. நிகர வரிவசூல் (T)
4. தனிநபர் வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரண தொகை ( Rf )

AS = C+ S + T + RF




- Z நேர்கோடு பணக்கூலி மாறாமல் இருக்கும்போது உள்ள நிலையையும் $Z_1$ வளைக்கோடு பணக்கூலி மாறும் போது உள்ள நிலையையும் விளக்குகின்றன.
- $ON_f$ அளவில் பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகிறது.
- அதற்குப் பின்பு உழைப்பினை அதிகப்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த இயலாது.
- எனவே $N_f$ க்குப் பின்னர், தொகு அளிப்புக் கோடு செங்குத்தாக உள்ளது.
- எனவே தொகு அளிப்பு கோடானது வேலைவாய்ப்புக்கும், எதிர்பார்க்கும் வருமானத்திர்க்கும் இடையே உள்ள தொடர்பை பொருத்து அமையும்.

கீழ்காணும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும் ( 5 மதிப்பெண் )

**1. வேலையின்மைகளின் வகைகளை விவரி. ( ஏதேனும் ஐந்து )**

1. வாணிபச் சூழல் வேலையின்மை :
வாணிபச் சூழலின் கீழ்நோக்கிய பகுதியில், உற்பத்தி மற்றும் வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும். இது வாணிபச் சூழல் வேலையின்மை எனப்படும்.

2. பருவகால வேலையின்மை :
ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் கரும்பு, பருத்தி.

**3. தற்காலிக (அல்லது) உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை :**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிகமாக ஏற்படுவது.

**4. கற்றோர் வேலையின்மை :**

சிலநேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை. அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர்.

**5. தொழில் நுட்ப வேலையின்மை :**

புதிய தொழில்நுட்பம் உழைப்பை குறைப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். இதனால் தொழில்நுட்ப வேலையின்மை ஏற்படுகிறது.

**6. அமைப்புசார் வேலையின்மை**

சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது. உதாரணம் கைபேசியின் தேவை அதிகரித்ததால் கேமராவின் தேவை குறைந்துள்ளது.

**7. மறைமுக வேலையின்மை :**

தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும். உதாரணம் விவசாயத்துறை

## 2. சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.

1. கீன்ஸின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது

2. பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலை யின்மையைக் குறைக்காது.

3. தனிநபர் எதிர்பாராத சூழ்நிலைக்காகவும், வியாபாரி எதிர்கால நடவடிக்கைகாகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள் ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.

4. அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று சே விதி கூறுகிறது. ஆனால் கீன்ஸ் அதிக உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது என்கிறார்.

5. முதலாளித்துவ நாடுகளில் முழு வேலை வாய்ப்புக்கு சாத்தியமில்லை என கீன்ஸ் கூறுகிறார்.

6. அரசுத் தலையீடு அவசியம் என கீன்ஸ் கருதுகிறார்.

## 3. ADF மற்றும் ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.


**ADF மற்றும் ASF ன் சமநிலை :**

- ADF மற்றும் ASF சமநிலையை விளக்க குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.
- நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும்

www.Padasalai.Net www.CBSEtips.in



- முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன.




- மொத்த தேவை மற்றும் மொத்த அளிப்பு அணுகுமுறை இவ்வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

- தொகு தேவை மற்றும் தொகு அளிப்பு 'E' என்ற புள்ளியில் சமநிலையடைகிறது.

- இப்புள்ளியில் வேலைவாய்ப்பு No ஆக இருக்கும்.

- ON1 அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு N1R1, தொகு தேவை M1N1 ஆக உள்ளது.

- எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர்.

- சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்த பிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர்.

- ஏனெனில் No நிலைக்கு பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகு தேவை தொகு அளிப்பை விட குறைவாக இருக்கும்.

- N0 மற்றும் Nf க்கும் இடையே உள்ள வித்தியாசம் வேலை யின்மையைக் காட்டுகிறது.

- ஆகவே வேலை சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவை கருத்து முக்கிய பங்கு வகுக்கிறது.

**4. தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடை யிலான வேறுபாடுகளை விளக்குக.**





Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| வ. எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | பேரியல் அணுகுமுறை | நுண்ணியல் அணுகுமுறை |
| 4. | அரசு தலையீடு அனுமதிக்கப்படுகிறது. | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது |
| 5. | முதலாளித்துவம் முரண்பாடுகளைக் கொண்டது. | முதலாளித்துவம் சரியானது. |
| 6. | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பு வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது | சேமிப்பு மற்றும் முதலீடு வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. |
| 7. | வட்டி வீதம் மாறிக் கொண்டே உள்ளது | வட்டி வீதம் மாறாதது |
| 8 | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது |
| 9. | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அத்தியாயம் 4

# நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்

**சரியான விடையை தெரிவு செய்க.**

1. **சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது**
   **அ) C/Y** ஆ) C x Y
   இ) Y/C ஈ) C+Y

2. **இறுதி நிலை நுகர்வு நாட்டம் கூடினால்**
   **அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்**
   ஆ) நுகர்வுச் சார்பு மேல் நோக்கி இடம் பெயரும்
   இ) நுகர்வுச் சார்பு கீழ்நோக்கி இடம் பெயரும்
   ஈ) சேமிப்பு சார்பு மேலே தள்ளும்

3. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8 ஆக இருந்து, செலவிடக் கூடிய வருவாய் ₹1000 ஆக இருந்தால், நுகர்வு எவ்வளவு
   அ) ₹0.8 ஆ) ₹800
   **இ) ₹810** ஈ) ₹0.81

4. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8 Y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு?
   **அ) ₹0.8** ஆ) ₹800
   இ) ₹810 ஈ) ₹0.81

5. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8 Y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், சராசரி நுகர்வு நாட்டம் எவ்வளவு
   அ) ₹0.8
   ஆ) ₹800
   இ) ₹810
   **ஈ) ₹0.9**

6. **தேசிய வருவாய் உயரும் போது**
   **அ) APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.**
   ஆ) APC உயர்ந்து APC யின் மதிப்பைவிட்டு விலகிச் செல்லும்.
   இ) APC மாறாமல் இருக்கும்.
   ஈ) APC முடிவிலியை (INFINITY) நெருங்கிச் செல்லும்.

7. **ஒரு குறிப்பிட்ட வருவாய் அளவில், நுகர்வு அதிகரித்தால்**
   **அ) மொத்த தேவை உயரும்**
   ஆ) ஏற்றுமதி உயரும்
   இ) வரியின் மூலம் வரும் வருவாய் குறையும்
   ஈ) இறக்குமதி செலவு குறையும்

8. **குறைவான வட்டி வீதம்**
   அ) நுகர்வைக் குறைக்கும்
   ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்
   இ) சேமிப்பை ஊக்குவிக்கும்
   **ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்**

9. **இறுதி நிலை நுகர்வு விருப்பு =**
   அ) மொத்த செலவு / மொத்த நுகர்வு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

ஆ) மொத்த நுகர்வு/மொத்த வருவாய்
**இ) நுகர்வு மாற்றம் / வருவாய் மாற்றம்**
ஈ) மேற்காண் ஏதுமில்லை

**10. மொத்த வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு**
**அ) நுகர்வுச் சார்பு**
ஆ) சேமிப்பு சார்பு
இ) முதலீட்டுச் சார்பு
ஈ) மொத்த தேவைச் சார்பு

11. MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது
**அ) 1** ஆ) 2
இ) 0.1 ஈ) 1.1

**12. வருவாய் உயர்ந்தால், நுகர்வு**
அ) குறையும் ஆ) மாறாது
இ) ஏறி இறங்கும் **ஈ) உயரும்**

13. முதலீடு தன்னிச்சையானது என அனுமானிக்கப்பட்டால், AD யின் சாய்வை நிர்ணயிப்பது.
அ) இறுதி நிலை முதலீட்டு நாட்டம்
ஆ) செலவிடக்கூடிய வருவாய்
**இ) இறுதி நிலை நுகர்வு நாட்டம்**
ஈ) சராசரி நுகர்வு நாட்டம்

14. ____________ இடம் பெயர்ந்த பின்னர் ____________ எவ்வளவு மாறுகிறது என்பதை பெருக்கி கூறுகிறது.
அ) வருவாய், நுகர்வு
ஆ) வெளியீடு, முதலீடு
இ) முதலீடு, சேமிப்பு
**ஈ) மொத்த தேவை, வெளியீடு**

**15. பெருக்கியின் மதிப்பு =**
அ ) 1/(1-MPC) ஆ) 1/MPS
இ) 1/MPC **ஈ) அ மற்றும் ஆ**

16. MPC = 0.5 எனில், பெருக்கியின் மதிப்பு
**அ) 2** ஆ) 1/2
இ) 0.2 ஈ) 20

17. ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை
**அ) குறைக்கிறது**
ஆ) உயர்த்துகிறது
இ) மாற்றாது
ஈ) மாற்றும்

18. கீன்ஸின் கருத்துப்படி, முதலீடு MEC ஐயும் ____ சார்ந்தது.
அ) தேவையையும்
ஆ) அளிப்பையும்
இ) வருவாயையும்
**ஈ) வட்டி வீதத்தையும்**

19. மிகைப் பெருக்கி என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்.
அ) J.R. ஹிக்ஸ்
ஆ) R.G.D. ஆலன்
இ) கான்
ஈ) கீன்ஸ்

20. MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) ஆடம் ஸ்மித்
**ஆ) J.M. கீன்ஸ்**
இ) ரிகார்டோ
ஈ) மால்தஸ்

கீழ்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் தருக.

21. நுகர்வுச் சார்பு என்றால் என்ன?
வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே “நுகர்வு சார்பு” என்கிறோம்

$$C = f(Y)$$

இதில் C = நுகர்வு Y = வருமானம்
f = சார்பு


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**22. "நுகர்வு நாட்டம்" என்றால் என்ன?**

- வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே "நுகர்வு சார்பு" அல்லது "நுகர்வு நாட்டம்" என்கிறோம்
- நுகர்வு வருமானத்தை பொறுத்து அமையும்

**23. சராசரி நுகர்வு நாட்டம் (APC) வரையறு.**

வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும்.

$$APC = C/Y$$

**24. இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC) வரையறு.**

வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கிடையேயான வீதமே இறுதி நிலை நுகர்வு நாட்டம் ஆகும்

$$MPC = \Delta c / \Delta Y$$

**25. சேமிப்பு நாட்டம் (Propensity to Save) என்றால் என்ன?**

வருவாய்க்கும் சேமிப்புக்கும் உள்ள தொடர்பையே சேமிப்பு நாட்டம் எனப்படும்

$$S = f(Y)$$

**26. சராசரி சேமிப்பு நாட்டம் (APS) - வரையறு,**

வருமானத்திற்கும், சேமிப்பிற்கும் இடையேயான வீதமே சராசரி சேமிப்பு நாட்டம் எனப்படும்.

$$APS = S/Y$$

**27. இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) வரையறு.**

வருமான மாற்றத்திற்கும் சேமிப்பு மாற்றத்திற்கிடையேயான வீதமே இறுதி நிலை சேமிப்பு நாட்டம் ஆகும்.

$$MPS = \Delta S / \Delta Y$$

**28. பெருக்கி வரையறு.**

வருமான மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதமே பெருக்கி எனப்படும்

$$K = \Delta Y / \Delta I$$

**29. முடுக்கி வரையறு?**

தூண்டப்படுகின்ற முதலீட்டு மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விகிதமே முடுக்கி எனப்படும்.

$$\text{முடுக்கி } (\beta) = \Delta I / \Delta C$$

**கீழ்காணும் வினாக்களுக்கு ஓரிரு பத்தி அளவில் விடையளி**

**30. கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துக்களைக் கூறுக**

இவ்விதி மூன்று கருத்துக்களைக் கொண்டது.

1. வருமானம் உயரும்போது, நுகர்வு செலவும் அதிகரிக்கும். ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.

2. அதிகரித்த வருமானம் நுகர்வு செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.

3. அதிகரிக்கின்ற வருமானம் எப்போதும் நுகர்வு மற்றும் சேமிப்பு இரண்டையும் அதிகரிக்க செய்யும்.

**31. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.**

| வ.எ | தனிச்சையான முதலீடு | தூண்டப்படுகிற முதலீடு |
|---|---|---|
| 1. | தனிச்சையானது | திட்டமிடப்பட்டது |
| 2. | வருவாயை பொறுத்து நெகிழாதது | வருவாயைப் பொறுத்து நெகிழ்வது |
| 3. | நல நோக்கமுடையது. | இலாப நோக்கமுடையது. |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**32. நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.**

அக காரணிகள் :

1. முன்னெச்சரிக்கை நோக்கம்

எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது. (எ.கா) விபத்து, உடல் நலமின்மை.

2. எதிர்பார்க்கும் நோக்கம் :

எதிர்கால தேவைக்கான விருப்பம் எ.கா. வயதன கலம்

3. வானிப நோக்கம் :

வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்.

புற காரணிகள் :

1. வருமான பகிர்வு :

செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் நுகர்வு குறையும்

2. விலை அளவு :

விலை வீழ்ச்சியடையும்போது மக்கள் அதிகமாக நுகர்வார்கள் அதனால் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்

3. கூலி அளவு:

கூலி அதிகரிக்கும் போது நுகர்வு செலவு அதிகரிக்கும்

**33. முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.**

| | முடுக்கி | பெருக்கி |
|---|---|---|
| 1 | வழங்கியவர் ஜே.எம்.கிளார்க் | வழங்கியவர் ஆர்.எஃப்.கான் |
| 2 | தூண்டப்படுகின்ற முதலீட்டு மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விகிதமே முடுக்கி எனப்படும். | வருமான மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதமே பெருக்கி எனப்படும் |
| 3 | $K = \Delta Y / \Delta I$ | $\beta = \Delta I / \Delta C$ |

**34. மிகைப் பெருக்கி விளக்குக.**

- மிகைப் பெருக்கியை உருவாக்கியவர் ஜே.ஆர். ஹிக்ஸ்
- பெருக்கி மற்றும் முடுக்கியை இணைத்து உருவாக்கப்பட்டதே மிகை பெருக்கி அகும்
- பெருக்கியின் தாக்கமும் முடுக்கியின் தாக்கமும் இணைந்து செயல்படுவதல் இது நெம்புகோல் இயக்க விளைவு எனப்படும்.
- மிகைப் பெருக்கி தன்னிச்சை முதலீடு ( $I_A$ ) மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ( $I_P$ )ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.

$$Y = C + I_A + I_P$$

**35. பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.**

பெருக்கியின் கசிவுகள் :

1. பழைய கடன்களை திரும்ப செலுத்தல் :

அதிகரித்த வருமான பழைய கடன்களை திரும்ப செலுத்துவதற்காக பயன்படுமானால் MPC குறைந்து, பெருக்கியின் மதிப்பு தடைபடும்

2. செல்வத்தை வாங்குதல் :

அதிகரித்த வருமானம் நிலம், கட்டிடம் வாங்குவதற்காக பயன்படுத்தினால் பெருக்கியின் மதிப்பு பாதிக்கும்.

3. பண்டங்களையும் பணிகளையும் இறக்குமதி செய்தல்

பண்டங்களை இறக்குமதி செய்தால் பணம் நாட்டை விட்டு வெளியேறும். ஆதலால் இறக்குமதி பெருக்கியின் மதிப்பைக் குறைக்கும்.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

36. கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

கீன்ஸின் உளவியல் விதி:

வருவாய் உயரும்போது நுகர்வு அதிகரிக்கும். ஆனால் வருவாய் உயர்ந்த அளவுக்கு நுகர்வு அதிகரிக்காது.

கீன்ஸ் விதியின் அனுமானங்கள் :

1. மற்றவை மாறாது.
2. சுமூகமான சூழல் நிலவுகிறது.
3. முதலாளித்துவ பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது.

விதியின் கருத்துக்கள் :

இவ்விதி மூன்று கருத்துக்களைக் கொண்டது.


1. வருமானம் உயரும்போது, நுகர்வு செலவும் அதிகரிக்கும்.

2. அதிகரித்த வருமானம் நுகர்வு செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.

3. அதிகரிக்கின்ற வருமானம் எப்போதும் நுகர்வு மற்றும் சேமிப்பு இரண்டையும் அதிகரிக்க செய்யும்

அட்டவணை

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S = Y – C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |




Ox அச்சு வருமானம்

oy அச்சு நுகர்வு மற்றும் சேமிப்பு

C நுகர்வு சார்பு வளைக்கோடு

கருத்துரை 1

வருமானம் 120 லிருந்து 180 ஆக அதிகரிக்கும் பொழுது நுகர்வும் அதிகரிக்கின்றது

கருத்துரை 2

வருமானம் 180 லிருந்து 240 ஆக உயரும்போது, அதிகரித்த வருமானம் நுகர்வு மற்றும் சேமிப்பாக இரண்டு பகுதிகளாக பிரிகிறது.

கருத்துரை 3

வருமானம் 180 லிருந்து 240 உயரும்போது நுகர்வு மற்றும் சேமிப்பு இரண்டுமே அதிகரிக்கும்

37. நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.

அக காரணிகள் :

1. முன்னெச்சரிக்கை நோக்கம் :

எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக, கையில் ரொக்கமாக வைப்பது. (எ.கா) விபத்து, உடல் நலனின்மை.

2. எதிர்பார்க்கும் நோக்கம் :

எதிர்கால தேவைக்கான விருப்பம் (எ.கா) வயதான காலம்.

3. கணிக்கும் நோக்கம் :

விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.

4. முன்னேறும் நோக்கம் :

வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்.

5. வாணிப நோக்கம் :

வியாபாரத்தை முன்னேற்று வதற்கான நோக்கம்.

புற காரணிகள் :

1. வருமான பகிர்வு :

செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் வருமான பகிர்வு சம அளவில் இருந்தால் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும்.

2. விலை அளவு :

விலை வீழ்ச்சியடையும் போது, மக்கள் அதிகமாக நுகர்வார்கள்

3. கூலி அளவு :

கூலி அதிகரிக்கும்போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.

4. வட்டி வீதம் :

அதிக வட்டி விகிதம் பணத்தை சேமிக்க ஊக்கமளிக்கும் ஆகவே நுகர்வைக் குறைக்கும்.

5. நிதிக் கொள்கை :

அரசு வரியை குறைக்கும் போது செலவிடத்தக்க வருமானம் அதிகரித்து நுகர்வு அதிகாரிக்கும்.

38. பெருக்கி இயங்கும் வீதத்தினை விவரி.


பெருக்கி விளக்கம் :

வருமான மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதமே பெருக்கி எனப்படும்

$$K = \Delta Y / \Delta I$$

பெருக்கியின் மதிப்பு MPC யைப் பொருத்து அமையும்.

**K = 1 / 1 - MPC (அ) 1 / MPS**




பெருக்கி செயல்படும் விதம் :

அரசு ரூ.100 கோடி பொதுபணிக்காக செலவிடுகிறது எனில் அந்த ரூ.100 கோடி உழைப்பாளர்களுக்கு வருமானம். இங்கு MPC 0.8 எனில் ரூ. 80 கோடி நுகர்வுக்கும், மீதம் ரூ. 20 கோடியை சேமிக்கவும் செய்வர். இதில் நுகர்வு செலவு ஒரு சங்கிலி தொடர் போன்று சென்றுக்கொண்டே இருக்கும்.

ஆரம்ப முதலீடு ரூ. 100 கோடி எனில் வருமான மாற்றம் ரூ. 500 கோடியாக இருக்கும்.

உதாரணமாக

C = 100 + 0.8Y எனில்
முதலீடு ரூ. 100 அதிகரிக்கப்பட்டால் வருமான மாற்றம் ரூ.1000 ஆக இருக்கும். ........B புள்ளி

(Y = 100 + 0.8Y +100
0.2Y = 200
Y = 200 / 0.2
Y = 1000 )



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

முதலீடு ரூ.110 ஆக அதிகரிக்கப்பட்டால் வருமானம் 1050 கோடியாக அதிகரிக்கும். .......C புள்ளி

ஆகவே முதலீடு ரூ. 10 அதிகரித்தால் வருமனம் ரூ. 50 அதிகரிக்கும் இது பெருக்கியின் விளைவு ஆகும்.

**39. முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி.**

முடுக்கி விளக்கம் :

தூண்டப்படுகின்ற முதலீட்டு மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விகிதமே முடுக்கி எனப்படும்.

முடுக்கி ( $\beta$ ) = $\Delta I / \Delta C$


முடுக்கி கோட்பாடு செயல்படும் விதம்

1000 நுகர்வுப் பொருட்களை தயாரிப்பதற்கு 100 இயந்திரங்கள் தேவைப்படுகிறது.

10 வருடங்கள் அந்த எந்திரங்களின் வாழ்நாள். ஒவ்வொரு வருடமும் 10 எந்திரங்களை மாற்றியமைக்கப்படுகிறது.

நுகர்வு பொருட்களின் தேவை 10% (அதாவது 1000 லிருந்து 1100 ஆக) அதிகரித்தால் 10 இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும். எனவே மொத்த இயந்திர தேவை 20 ஆகும்.

ஆகவே ஒரு சிறிய நுகர்வு மாற்றம் அதிகப்படியான முதலீட்டு மாற்றத்திற்கு வழிவகுக்கிறது.




முடுக்கியின் செயல்பாடு

SS என்பது சேமிப்பு கோடு, II என்பது முதலீட்டு கோடு, $E_1$ புள்ளியில் பொருளாதாரம் $OY_1$ வருமானத்துடன் சமநிலையில் இருக்கிறது.

சேமிப்பும் முதலீடும் $OI_2$ ல் சமநிலையாக உள்ளது.

இவ்வரைபடத்தில் வெளிப்புற முதலீடு $I_2 I_3$ ஆகவும் தூண்டப்பட்ட முதலீடு $I_3 I_4$ ஆகவும் இருக்கிறது.

அதிகரித்த வருமானம் $Y_1 Y_2$ ஆனது பெருக்கியின் விளைவாலும் மற்றும் அதிகரித்த வருமானம் $Y_2 Y_3$ ஆனது முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகின்றது.

**40. மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தின் திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?**

| MEC | MEI |
|---|---|
| மூலதனத்தின் அளிப்பு விலையை பொருத்து அமையும் | மூலதனத்தின் தேவை மாற்றத்தை பொறுத்து அமையும் |
| ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொறு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தை காட்டுகிறது. |
| வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது. | வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| இது ஒரு "இருப்பு" கருத்து | இது ஒரு ஓட்டக் கருத்து |
| ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது | கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டிவீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது |

# அத்தியாயம் - 5
# பணவியல் பொருளியல்

**சரியான விடையை தெரிவு செய்க.**

1. ஆர்பிஐ ன் தலைமையகம் அமைந்துள்ள இடம்
   அ) டில்லி
   ஆ) சென்னை
   **இ) மும்பை**
   ஈ) பெங்களுரு

2. பணம் என்பது
   அ) உள்ளடக்க மதிப்பு இருந்தால் ஏற்றுக்கொள்ளப்படுவது
   ஆ) நிலையான வாங்கும் சக்தியை கொண்டது
   **இ) உள்ளவற்றில் அதிக நீர்மைத் தன்மை கொண்ட சொத்து ஆகும்.**
   ஈ) வளங்களை பங்கிட்டுக்கொள்ள தேவைப்படுகிறது.

3. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது
   **அ) மைய பணவியல் அமைப்பு**
   ஆ) மாநில அரசு
   இ) மைய அரசு
   ஈ) வங்கிகள்

4. M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்
   அ) அஞ்சலக அனைத்து வைப்புகள்
   **ஆ) அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்**
   இ) வங்கியின் கால வைப்புகள்
   ஈ) காகிதப்பணம்

5. இர்விங்ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு
   அ) 1908 ஆ) 1910
   **இ) 1911** ஈ) 1914

6. MV என்பது
   அ) பணத் தேவை
   **ஆ) சட்டபூர்வ பண அளிப்பு**
   இ) வங்கிப் பண அளிப்பு
   ஈ) மொத்த பண அளிப்பு

7. பணவீக்கம் என்பது
   **அ) விலைகள் அதிகரிப்பு**
   ஆ) விலைகள் குறைதல்
   இ) பணமதிப்பு அதிகரிப்பு
   ஈ) விலைகள் மாறாதிருத்தல்

www.Padasalai.Net www.CBSEtips.in



8. ______ பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது.
அ) தவழும் ஆ) நடக்கும்
இ) ஓடும் **ஈ) உயர்**

9. கூலி மற்றும் மூலப்பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலைமட்டம் அதிகரிப்பது ____ பணவீக்கம் ஆகும்.
**அ) செலவு உந்து**
ஆ) தேவை இழுப்பு
இ) ஓடும்
ஈ) தாவும்

10. பணவீக்கத்தின்பொழுது பயனடைபவர்கள் யார்?
**அ) கடன் பெற்றோர்கள்**
ஆ) கடன் வழங்கியோர்
இ) கூலி மற்றும் சம்பளம் பெறுவோர்
ஈ) அரசு

11. ____ என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.
**அ) எதிர் பணவீக்கம்**
ஆ) பணவாட்டம்
இ) தேக்கவீக்கம்
ஈ) மந்தம்

12. தேக்க வீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது
**அ) தேக்கம்**
ஆ) வேலைவாய்ப்பு
இ) உற்பத்தி
ஈ) விலை

13. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை ____ அழைக்கின்றோம்.
அ) பூரிப்பு
ஆ) பின்னிறக்கம்
இ) மீட்சி
**ஈ) வணிகச்சுழற்ச்சி**

14. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்.
அ) உயர்ந்தபட்சமாக
ஆ) மிக மோசமாக
**இ) மிக குறைந்தபட்சமாக**
ஈ) மிக நல்ல நிலையில்

15. “பரிவர்த்தனைகளில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக் கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம்“ என்ற இலக்கணத்தை வழங்கியவர்
**அ) கிரௌதர்**
ஆ) பிகு
இ) வாக்கர்
ஈ) பிரான்சிஸ்டி பேக்கான்

16. பற்று அட்டை என்பது ____ உதாரணம் ஆகும்.
அ) கட்டளைப்பண
ஆ) காகிதப்பண
**இ) நெகிழி பண**
ஈ) கடன் பண

17. ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பணத்தின் இந்த பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது.
அ) மதிப்பளவு
ஆ) மதிப்பின் நிலைக்கலன்
***இ) பரிவர்த்தனை கருவி***
ஈ) வருங்கால செலுத்தல்களுக்கான அடிப்படை

18. MV = PT என்ற சமன்பாட்டில், V என்பதும்
அ) வாணிபத்தின் அளவு
**ஆ) பணத்தின் சுழற்ச்சி வேகம்**
இ) ரொக்கப் பணத்தின் அளவு
ஈ) வங்கி மற்றும் கடன் பண அளவு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



19. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கப்படுவது
அ) தாவும் பணவீக்கம்
**ஆ) மிதமான பணவீக்கம்**
இ) உயர் பணவீக்கம்
ஈ) பணவாட்டம்

20. ________ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது.
அ) நடக்கும்
ஆ) ஓடும்
**இ) தவழும்**
ஈ) தாவும்

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதிலளிக்கவும்.

21. பணத்தின் இலக்கணம் வரைக.
"பணம் எதைச் செய்கிறதோ, அதுவே பணம்" என்று வாக்கர் கூறுகிறார்.

22. பண்டமாற்று என்றால் என்ன?
பொருட்களை பொருட்களுக்கு மாற்றிக் கொள்ளும் முறையே பண்டமாற்று முறை எனப்படும்

23. பண்டப்பணம் என்றால் என்ன?
ஒரு பண்டம் பணமாக பயன்படுத்தப்படுவது பண்டப்பணம் எனப்படும்.
எ.கா. விலங்கின் தோல், உப்பு, அரிசி, கோதுமை

24. பொன் திட்டம் என்றால் என்ன?
ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருப்பது பொன் திட்டம் எனப்படும்.

25. நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.
- இது காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும்.
- நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருக்கும்.
- எ.கா : ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை போன்றவை ஆகும்.

26. பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக.
"குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை" என்று கோல்பர்ன் கூறுகிறார்.

27. தேக்கவீக்கம் என்றால் என்ன?
தேக்க வீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும், வேலை வாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளி

28. உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக.
- தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகம் பணத்தின் மதிப்பினை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்டது.
- உலோக நாணயங்கள் பணமாக உருவாக்கப்பட்டன.
- இந்த நாணயங்கள் முழு மதிப்பு பணமாக இருந்து வந்தன.
- அந்நாணயங்களில் முக மதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன.

29. பண அளிப்பு என்றால் என்ன?
- ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளவே பண அளிப்பு ஆகும்.
- ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டின்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பாகும்.

◆ வட்டி விகிதம், விலைவாசி போன்றவற்றை நிர்ணயிப்பதில் பண அளிப்பு முக்கியப் பங்கு வகிக்கின்றது.

**30. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

1. ரொக்க வைப்பு விகிதம்
2. ரொக்க இருப்பு வைப்பு விகிதம்
3. ரொக்க இருப்பு விகிதம்
4. சட்டபூர்வ நீர்மை விகிதம்

**31. பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.**

**1. தவழும் பணவீக்கம் :**

பணவீக்கம் மிக குறைவான விகிதத்தில் இருக்கும்.

**2. நடக்கும் பண வீக்கம் :**

பணவீக்கம் ஒற்றை இலக்கத்தில், அதாவது 3% அல்லது 9% அளவில் இருக்கும்

**3. ஓடும் பணவீக்கம் :**

ஆண்டு பணவீக்க விகிதம் 10 முதல் 20 சதவிகிதத்திற்குள்இருக்கும்.

**4. தாவும் பணவீக்கம் :**

சமாளிக்க முடியாத அளவிற்கு இரண்டு அல்லது மூன்று இலக்க சதவிகிதத்தில் இருக்கும்.

**32. தேவை இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.**

**தேவை இழுப்பு பணவீக்கம் :**

அளிப்பு நிலையாக உள்ள நிலையில், பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகின்றன. இதுவே தேவை இழுப்பு பணவீக்கம்எனப்படும்.

**செலவு உந்து பணவீக்கம் :**

உற்பத்தி செலவு அதிகரிப்பதால் பொருட்களுக்கான விலை அதிகரிக்கும். இதுவே செலவு உந்து பணவீக்கம் எனப்படும்.

**33. பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.**

**மார்ஷலின் சமன்பாடு :**

மார்ஷலின் சமன்பாடு பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

$M = KPY$

M = பணத்தின் அளவு.

Y = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம்

P = பொது விலைமட்டம்

K = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒரு பகுதி.

**கீன்ஸின் சமன்பாடு**

$n = pk$

n = மொத்த பண அளிப்பு.

P = நுகர்ச்சி பொருட்களின் விலை மட்டம்.

K = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒரு பகுதி

**34. மீள் பணவீக்கம் பற்றி விளக்குக?**

◆ வேலைவாய்ப்பினை பாதிக்காத வகையில் கடன்களை கட்டுப்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தினை குறைத்து வருவது மீள் பணவீக்கம் ஆகும்.

◆ வேலையின்மையை ஏற்படுத்தாமலும் உற்பத்தி குறையாமலும் பண



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

வீக்கத்தை திருப்பும் செயல் முறையே மீள் பணவீக்கம் ஆகும்.

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அலவில் விடையளி

35. இர்விங்ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.

ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு விளக்கம் :

பண அளவு இரட்டிப்பாக்கும் பொழுது பொது விலை மட்டமும் இரட்டிப்பாகும், ஆனால் பண மதிப்பு பாதியாக குறையும். இதுவே ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு ஆகும்.

சமன்பாடு :

$$MV = PT$$

M = மொத்த (காகித) பண அளவு
V = பணத்தின் சுழற்சி வேகம்
P = பொது விலை மட்டம்
T = வாணிபத்தின் அளவு


$$MV = PT$$

பண அளிப்பு = பணத் தேவை

ஃபிஷரின் நவீன சமன்பாடு:

$$PT = MV + M^1 V^1$$

வரைபட விளக்கம் :




- வரைபடம் (A) மொத்த பண அளவில் ஏற்படும் மாறுதல் விலை மட்டத்தில் எவ்வாறு மாற்றத்தினை ஏற்படுத்துகிறது என்பதனை உணர்த்துகிறது.
- பண அளவு 0M ஆக இருக்கும்பொழுது விலைமட்டம் 0P யாக உள்ளது.
- பண அளவினை $0M_2$ என இரட்டிப்பாக்கும் பொழுது விலைமட்டமும் $0P_2$ என இரட்டிப்பாகும்.
- மேலும் பண அளவு $0M_4$ என நான்கு மடங்காக்கும்பொழுது விலைமட்டமும் $0P_4$ என நான்கு மடங்காகிறது.
- வரைபடம் (B) பணத்தின் அளவிற்கும் பணத்தின் மதிப்பிற்கும் உள்ள தலைகீழ் உறவினை விளக்குகிறது.
- பண அளவு OM ஆக உள்ளபொழுது பண மதிப்பு OI/P ஆக உள்ளது.
- பின்னர் பண அளவினை $0M_2$ என இரட்டிப்பாக்கும் பொழுது பண மதிப்பு $OI/P_2$ என பாதியாக குறைகிறது.
- தொடர்ந்து பண அளவினை $0M_4$ என நான்கு மடங்காக்கும் பொழுது பணமதிப்பு $OI/P_4$ என நான்கில் ஒரு பகுதியாக குறைகிறது.

36. பணத்தின் பணிகளை விளக்குக.

முதன்மை பணிகள் :

1. பணம் ஓர் பரிவர்த்தனை கருவி

◆ பணம் பொது ஏற்புத் தன்மையைக் கொண்டது.

◆ பொருட்களின் விற்பனை, கொள்முதல் என அனைத்து பரிவர்தனைகளிலும் பணம் இடயீட்டு கருவியாக செயல்படுகிறது.

2. பணம் ஓர் மதிப்பின் அளவுகோள்:

◆ பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்புகளை பண அலகில் விலைகளாக வெளிப்படுத்தப்படுகிறது.

◆ ஆகவே பணம் ஒரு பொது அளவுகோலாக பார்க்கப்படுகிறது.

இரண்டாம் நிலை பணிகள் :

1. பணம் ஒரு மதிப்பு நிலைக்கலன் :

◆ பணம் நீர்மைத் தன்மை கொண்டிருப்பதால், அதை எப்பொழுது வேண்டுமானாலும் சொத்துகளாகவும், சொத்துக்களை மீண்டும் பணமாகவும் மாற்றிக் கொள்ள இயலும்.

◆ ஆகவே பணம் மிக சிறந்த மதிப்பின் நிலைக்கலனாக செயல்படுகிறது.

2. பணம் வருங்கால செலுத்தல் களுக்கான ஓர் அடிப்படை :

◆ நவீன பொருளாதாரத்தில் கடன்களை பெறுவதையும் திரும்பச் செலுத்துவதையும் பணம் எளிதாக்குகிறது.

◆ அதாவது பணம் வருங்கால செலுத்துதல்களுக்கு இடையீட்டுக் கருவியாக செயல்படுகிறது.

3. பணம் வாங்குதிறனை மாற்றிக் கொள்ளும் ஒரு கருவி :

◆ பொருட்களின் பரிவர்தனை தூரப்பகுதிகளுக்கு இடையிலும், எல்லை கடந்தும் நடைபெருகிறது.

◆ இதனால் வாங்கும் திறனை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்க்கு மாற்ற பணம் உதவுகிறது.

37. ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை?

பணவீக்கத்திற்கான காரணங்கள் :

1. பண அளிப்பு உயர்வு :

காகித பண அளிப்பு உயர்வினால் மொத்த தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

2. செலவிடத் தகுந்த வருவாயில் உயர்வு :

மக்களின் செலவிடத் தகுந்த வருவாய் அதிகரிக்கும் பொழுது பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும். இதன் காரணமாக பணவீக்கம் எற்படுகிறது.

3. உயர்ந்து வரும் பொதுச் செலவுகள்

வளர்ச்சி மற்றும் சமுதாய நலத் திட்டங்களை அமல்படுத்துவதால் அரசின் பொதுச் செலவுகளின் அளவு கூடி பணவீக்கம் ஏற்படுகிறது.

4. நுகர்வோர் செலவு அதிகரித்தல் :

தவணை கொள்முதல், கடன் கொள்முதல் முறைகளால் நுகர்வு அதிகரித்து அதன் காரணமாக விலை அதிகமாகி பணவீக்கம் ஏற்படுகிறது.

5. மலிவு பணக் கொள்கை :

◆ மைய வங்கியின் மலிவுப் பணக்கொள்கை பொருளாதாரத்தில் கடன் அளவை அதிகப்படுத்தும்.

◆ இதனால் நுகர்வு அதிகரித்து விலைவாசி உயர்ந்து பணவீக்கத்தை ஏற்படுத்தும்.

பணவீக்கத்தின் விளைவுகள் :

அ. உற்பத்தியின் மீதான விளைவுகள் :

◆ மிதமான பணவிக்கம்,

www.Padasalai.Net www.CBSEtips.in



மிதமான விலைவாசி உயர்வினால் ஏற்படும் இலாபம் உற்பத்தி மீதான முதலீடுகளை அதிகரிக்கும்.

- இதனால் வேலைவாய்ப்பும் வருமானமும் அதிகரிக்கும்.
- அதேசமயம் உயர் பணவீக்கம் பணத்தின் மதிப்பினை குறைத்து சேமிப்பை குறைக்கும்.
- இதனால் மூலதன திரட்சி குறையும்.

ஆ. பகிர்வின் மீதான விளைவுகள் :


கடன் பெற்றோர் கடன் வழங்கியோர் :

பணவீக்க காலத்தில் கடன் பெற்றோர் ஆதாயமும், கடன் வழங்கியோர் இழப்பையும் சந்திக்கின்றனர்.

தொழில் முனைவோர்கள் :

தொழில் முனைவோர்களுக்கு பணவீக்கம் ஒரு வரமாகும்.

38. வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.




பூரிப்பு கட்டம் :

- பூரிப்பு நிலையில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்ச நிலையில் இருக்கும்.
- உற்பத்தி, பணக்கூலி, லாபம், வட்டி மற்றும் வங்கி கடன் தேவைகள் உயரும்

பின்னிறக்கம் :

- பொருளாதர நடவடிக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம்.
- உற்பத்தி, பணக்கூலி, லாபம், வட்டி குறைய துவங்கும்.
- அவநம்பிக்கைகள் தோன்ற ஆரம்பிக்கும்.
- இதன் காரணமாக முதலீடு குறைந்து உற்பத்தி, வருமானம் குறையும்.

மந்தம் :

- வணிகச் சுழற்ச்சியின் மிகமோசமான கட்டம் மந்தம் ஆகும்.
- நிறுவனங்கள் நட்டமடைந்து, மூடப்படுவதுடன் வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தும்.
- வட்டி, லாபம், கூலி ஆகியன மிக குறைந்த அளவில் இருக்கும்.

மீட்சி :

- வணிகச் சுழற்ச்சியின் மிகமோசமான கட்டம் மந்தம் ஆகும்.
- அரசின் தன்னிச்சை முதலீடுகள் மூலம் வேலைவாய்ப்பு அதிகரித்து வருமானம் உயர்ந்து பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும்.
- இதனால் தனியார் முதலீடுகள் மெதுவாக அதிகரித்து வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருவாய், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# அத்தியாயம் - 6

# வங்கியியல்

சரியன விடையை தெரிவு செய்க.

1. ஒரு வங்கி என்பது
   **அ) நிதி நிறுவனம்**
   ஆ) கூட்டு பங்கு நிறுவம்
   இ) தொழில்
   ஈ) சேவை நிறுவனம்

2. ஒரு வணிக வங்கி செய்யும் சேவை
   அ) வைப்புகளை ஏற்றுக் கொள்வது
   ஆ) கடன் வழங்குவது
   **இ) அ மற்றும் ஆ**
   ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

3. வணிக வங்கிகளின் பணிகளின் இருபெரும் பிரிவு
   அ) முதன்மைப் பணிகள்
   ஆ) இரண்டாம் நிலை பணிகள்
   இ) மற்ற பணிகள்
   **ஈ) மேற்சொன்ன அனைத்தும்**

4. வங்கிக் கடன் என்பது எதைக் குறிக்கிறது?
   அ) கடன் பணம்
   ஆ) முன்பணம்
   **இ) கடன் பணம் மற்றும் முன்பணம்**
   ஈ) கடன் பெறுதல்

5. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்
   **அ) கடன் மற்றும் முன்பண பெருக்கம்**
   ஆ) வருவாய்
   இ) செலவு
   ஈ) சேமிப்பு

6. வங்கியில்லா நிதிநிறுவனங்கள் ____ வைத்திருப்பதில்லை.
   **அ) வங்கி உரிமம்**
   ஆ) அரசு அங்கீகதாரம்
   இ) பணச்சந்தை அங்கீகாரம்
   ஈ) நிதி அமைச்சக அனுமதி

7. மைய வங்கி நாட்டின் ____ அதிகார அமைப்பு.
   **அ) பணவியல்**
   ஆ) நிதியியல்
   இ) கூலி
   ஈ) தேசிய வருவாய்

8. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது.
   அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
   ஆ) நபார்டு
   இ) ICICI
   **ஈ) இந்திய ரிசர்வ் வங்கி**

9. **கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது**
   **அ) மைய வங்கி**
   ஆ) வணிக வங்கிகள்
   இ) நிலவளவங்கிகள்
   ஈ) கூட்டுறவு வங்கிகள்

10. **வங்கி விகிதம் என்பது**
    **அ) முதல்நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது**
    ஆ) வட்டி விகிதம்
    இ) அந்நிய செலாவணி
    ஈ) வளர்ச்சி விகிதம்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11. ரெப்போ விகிதம் என்பதன் பொருள்
அ) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
**ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்**
இ) அந்நிய செலாவணி விகிதம்
ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம்

12. நெறிமுறை தூண்டல் என்பது
அ) உத்தமநிலைப் படுத்தல்
ஆ) உச்சநிலைப்படுத்தல்
**இ) தூண்டுதல் நடவடிக்கை**
ஈ) குறைவுநிலைப்படுத்துதல்

13. விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது.
அ) ஜூன் 3, 1963
ஆ) ஜூலை 3, 1963
இ) ஜூன் 1, 1963
**ஈ) ஜூலை 1, 1963**

14. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது
அ) ஜூலை 1962
ஆ) ஜூலை 1972
**இ) ஜூலை 1982**
ஈ) ஜூலை 1992

15. ஏற்றுமதி இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது?
அ) ஜூன் 1982
ஆ) ஏப்ரல் 1982
இ) மே 1982
**ஈ) மார்ச் 1982**

16. மாநில நிதிக் கழகம் எந்த சட்டத்தின் கீழ் துவங்கப்பட்டது?
**அ) இந்திய அரசு**
ஆ) தமிழக அரசு
இ) யூனியன் பிரதேசம்
ஈ) உள்துறை அரசு

17. பணவியல் கொள்கையை வடிவமைப்பது
அ) கூட்டுறவு வங்கிகள்
ஆ) வணிக வங்கிகள்
**இ) மைய வங்கிகள்**
ஈ) வெளிநாட்டு வங்கி

18. நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது.
அ) இ - வங்கி
**ஆ) இணைய வங்கி**
இ) ஆர்.டி.ஜி.எஸ்
ஈ) நெப்ட்

19. ஏ.டி.எம். (ATM) என்பதன் விரிவாக்கம் என்ன?
**அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்**
ஆ) சரி செய்து பணம் வழங்கும் இயந்திரம்
இ) தானாக பணம் வழங்கும் முறை
ஈ) எந்த நேரமும் பணம் (Any Time Money)

20. 2016ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?
**அ) ₹500 மற்றும் ₹1000**
ஆ) ₹1000 மற்றும் ₹2000
இ) ₹200 மற்றும் ₹500
ஈ) மேற்சொன்னவை அனைத்தும்

ஓரிரு வக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. வணிக வங்கிகள் என்பதனை வரையறு.
வணிக வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, வியாபார நிறுவனங்களுக்கு குறுகியகால கடனை அளிக்கும் ஒரு நிதி அமைப்பு ஆகும்.




Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**22. கடன் உருவாக்கம் என்றால் என்ன?**

- கடன்களையும் முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல்.
- மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது கடன் உருவாக்கம் ஆகும்.

**23. மைய வங்கி என்பதனை வரையறு.**

- அரசின் பணம், பண அளிப்பு, வட்டிவிகிதம் ஆகியவற்றை நிர்வகிக்கும் ஒரு அமைப்பு மைய வங்கி ஆகும்.
- மைய வங்கிகள் வணிக வங்கிகளை மேற்பாற்வை இடுகிறது.

**24. CRR மற்றும் SLR ஆகியவற்றினை வேறுபடுத்துக.**

| CRR | SLR |
|---|---|
| வணிக வங்கிகளின் வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை மைய வங்கியில் இருப்பாக வைப்பதைக் குறிக்கும். | வணிக வங்கிகள் தன்னிடமே இருப்பாக வைக்கவேண்டிய ரொக்கம், தங்கம் மற்றும் பத்திரங்கள் போன்ற நீர்மை தன்மை கொண்ட சொத்துக்களை குறிக்கும் |

**25. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு.**

மைய வங்கியானது பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் திரும்பப்பெறுவதும் வெளிச்சந்தை நடவடிக்கை எனப்படுகிறது.

**26. கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன?**

நாட்டின் பண அளிப்புச் சூழ்நிலைகளுக்கேற்ப கடன் நோக்கங்களை பட்டியலிட்டு வரையறை செய்வதன் மூலம் கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவது ஆகும்.

**27. விவசாய கடன் வழங்கும் துறையின் பணிகளை குறிப்பிடுக.**

- நிபுணத்துவம் பெற்ற அலுவலரை நியமித்து விவசாய கடன் தொடர்பான வினாக்களை ஆய்வு செய்வது.
- மைய அரசு, மாநில அரசு, மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் இதர வங்கி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.

## ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்

**28. வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை எழுதுக.**

- கடன் உருவாக்கம் என்பது கடன் மற்றும் முன்பண பெருக்கத்தினை குறிக்கும்.
- வழங்கப்படும் கடன் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.
- ஒவ்வொரு கடனும் புதிய வைப்பினை உருவாக்குகிறது.
- உதாரணம் : ஒருவர் வங்கியில் ரூ.1000 செலுத்தினால் 20% குறைந்தபட்ச ரொக்க இருப்பு ரூ.200 போக ரூ.800 கடனாக விண்ணப்பித்தவரின் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.
- ரூ.800ல் 20% போக ரூ.640 கடனாக விண்ணப்பித்தவரின் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.
- ரூ.640 ல் 20% போக ரூ.512 கடன் வழங்க தயார் நிலையில் இருக்கும்.

www.Padasalai.Net www.CBSEtips.in



ரூ.1000 + 800 + 640 + 512 +.... என்று செல்லும். இறுதியாக ரூ.500த்தினை அடையும்.

**29. வங்கியில்லா நிதியமைப்புகளைப் பற்றி சிறு குறிப்பு தருக.**

- ஒரு வங்கியில்லா நிதி நிறுவனம் என்பது முழு வங்கிக்கான உரிமம் கொண்டதும் அல்ல, மற்றும் மைய வங்கியால் கண்காணிக்கப்படுவதும் இல்லை.
- இவைகள் வைப்புகளைப் பெற்றுக்கொண்டு கடன்களை வழங்குகின்றது.
- மக்களின் சேமிப்பைத் திரட்டி முதலீட்டு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிக்கின்றது.
- இவைகள் கடன் பெற்று கடன் வழங்குகின்றன.
- இருவகைப்படும்
  1. பங்குச்சந்தை மற்றும் இதர நிதி நிறுவனங்கள்
  2. காப்பீட்டு நிறுவனங்கள் முதலீட்டு அமைப்புகள், யூனிட் டிரஸ்ட் Etc...

**30. கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கூறுக.**

கடன் கட்டுப்பாட்டு முறைகள்

**கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள்**

1. வங்கி வீதக் கொள்கை
2. வெளி சந்தை நடவடிக்கைகள்
3. மாறும் குறைந்தபட்ச வங்கி ரொக்க இருப்பு விகிதம்

**கடன் தன்மை கட்டுப்பாட்டு முறைகள்**

1. கடன் பங்கீடு
2. நெரடி நடவடிக்கைகள்
3. நெறிமுறை தூண்டல்
4. விளம்பரப்படுத்துதல்
5. நுகர்வொர் கடனை முறைப்படுத்துதல்
6. விளிம்பு நிலை தேவைத் தொகையை மாற்றுதல்

**31. நபார்டின் பணிகள் யாவை?**

- உற்பத்தி மற்றும் முதலீட்டுக்காக விவசாயம் மற்றும் ஊரக தொழில் நடவடிக்கைகளுக்கான மறுகடனை வழங்குகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு குறுகிய கால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.
- மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை வழங்குகிறது.
- விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான பங்கு மூலதனம் அல்லது கடன் பத்திரங்களை பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கும் நீண்ட கால கடனை அளிக்கிறது.

**32. இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.**

- இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது.
- சம உரிமை பங்குகள், முன்னுரிமை பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வங்குகிறது.
- வெளியிடப்பட்ட சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதியளிக்கிறது.
- இந்தியாவிலிருந்து வாங்கப்படும் தொழிற்துறை இயந்திரங்களுக்கான பணத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது.

**33. பணச்சந்தையையும், மூலதனச் சந்தையையும் வேறுபடுத்துக.**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| பணச் சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|
| 1. குறுகியகால நிதிக்கருவிகளை கையாளுகிறது. | நீண்டகால நிதிக்கருவிகளை கையாளுகிறது. |
| 2. அதிக நீர்மைத் தன்மையை கொண்டது | நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு தேவைப்படும் நிதியினை திரட்டுகிறது. |
| 3. கையாளப்படும் நிதிக்கருவிகள் அரசு பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள் | பயன்படுத்தப்படும் நிதிக்கருவிகள் கடன் பத்திரஙகள், சமபங்குகள், அந்திய செலாவணி முன்பேர வர்த்தகம் |

34. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.

பணமதிப்பு நீக்கம் :

பணமதிப்பு நீக்கம் என்பது குறிப்பிட்ட அலகிலான பணத்தின் மதிப்பை செல்லாது என அறிவிக்கும் செயலாகும்.

நோக்கங்கள் :

1. கருப்புப் பணத்தினை ஒழிப்பது.
2. இலஞ்சத்தை தடுப்பது.
3. தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது மற்றும்
4. கள்ளப் பணத்தினை தடுப்பது ஆகியன ஆகும்

ஒரு பக்க அளவில் பதில் தருக.

35. நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.

1. மூலதன திரட்சி :

- ஒரு நாட்டின் பொருளாதார வளர்சிக்கு இன்றியமையாதது மூலதன திரட்சி. இதில் வங்கிகள் முக்கிய பங்குவகிக்கின்றன.
- பொதுமக்களின் சேமிப்பினை வைப்புகளாக திரட்டி அவைகளை உற்பத்தி நோக்கத்திற்காக கடன்களாக வழங்குகின்றன.

2. கடன் உருவாக்கம் :

வங்கிகளின் கடன் உருவாக்கம் மூலம் உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம் விற்பனை ஆகியவை ஏற்றம் பெற்று விரைவான பொருளாதார வளர்ச்சியை கொண்டு வருகின்றது.

3. அதிக உற்பத்தித்திறனை கொண்ட முதலீட்டை நோக்கி பணத்தை முறைபடுத்தல் :

அதிக உற்பத்தித்திறன் கொண்ட துறைகளுக்கு கூடுதலாக முதலீட்டுக்கான கடனை வழங்குவதன் மூலம் முதலீட்டின் ஒட்டுமொத்த உற்பத்திக் கூடுகிறது.

4. சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல் :

வங்கிகள் சரியான தொழிலையும் சரியான நபர்களையும் தேர்ந்தெடுத்து கடன் வழங்குவதால் தொழிற்பெருக்கம் ஏற்பட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

5. அரசிற்கு நிதி வழங்குதல்

வனிக வங்கிகள் அரசிற்கு நீண்டகால மற்றும் குறுகியகால கடன்களை வழங்குகிறது.

6. வேலை வாய்ப்பினை உருவாக்குதல்

அதிக எண்ணிக்கையில் கிளைகள் திறக்கப்பட்டு கடன்பெருக்கத்தினை செய்வதால் வேலைவாய்ப்புகள் உருவாகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

36. வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.

முதன்மைப் பணிகள் :

1. வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்

பொதுமக்களால் செலுத்தப்படும் வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆகும்.

வைப்புகள் இரு வகைப்படும்

1. கேட்பு வைப்புகள்
2. கால வைப்புகள்

2. கடன் வழங்குதல் :

◆ தனி நபர்கள் மற்றும் வாணிபத்திற்க்கு கடங்களை வங்கிகள் வழங்குகின்றன.

◆ ரொக்கக் கடன், மாற்றுச் சீட்டு தள்ளுபடி, மிகைப்பற்று ஆகிய முறைகளில் கடன்களை வழங்குகிறது

இரண்டாம் நிலைப் பணிகள்

1. முகமைப் பணிகள் :

வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக இருந்து செய்யும் பணிகளை முகமைப்பணிகள் எனப்படுகிறது.

1. காசோலைகளை பணமாக்குதல்
2. வாடிக்கையாளரின் வருமானத்தை பெறுதல்
3. செலவுகளை செலுத்துகிறது

2. பொதுப் பயன்பாட்டு பணிகள் :

வங்கிகள் தன் வாடிக்கையா ளர்களுக்காக சில கூடுதல் பயன்பாடுகளை உருவாக்கும் இது பொதுப்பயன்பாட்டு பணிகள் என்கிறோம்.

1. பாதுகாப்பு பெட்டக வசதி
2. பயணக்காசோலைகளை வழங்குதல்
3. அந்நியச் செலாவணியை கையாளுதல் :

3. நிதியை மாற்றுதல்

◆ ஒரு வங்கியிலிருந்து மற்ற வங்கிக்கு நிதியை மாற்றுவதாகும்.

◆ காசோலைகள், தொலைபேசி மற்றும் மின்னனு பரிமாற்றங்கள் மூலம் நிதி மாற்றப்படுகிறது.

இதர பணிகள் :

1. பண அளிப்பு

பணப்புழக்க வேகத்தை அதிகரிப்பதன் மூலம் பண அளிப்பை அதிகரித்தல் ஆகும்.

2. கடன் உருவாக்கம் :

கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பண அளிப்பினையும் அதிகரித்து கடன் அளவினை அதிகரிப்பது கடன் உருவாக்கம் ஆகும்.

37. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

1. பண அதிகார அமைப்பு :

◆ இந்திய ரிசர்வ் வங்கி இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துகிறது.

◆ இதன்மூலம் நிதி நிலைத்தன்மை, பண வீக்கத்தை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றைச் செய்கிறது.

2. காகிதப் பண வெளியீடு :

அனைத்து வகையான காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும்.

3. வங்கி உரிமங்கள் வழங்குபவர்

வணிக வங்கிகள் வங்கித் தொழில் செய்ய மைய வங்கி உரிமம் வழங்குகிறது

4. அரசுக்கான வங்கி

◆ இது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கி ஆகும்.

◆ இது அரசுகளுக்கு குறுகியகால கடன்களை தருகிறது.

5. **வங்கிகளின் வங்கி**

◆ இது அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும்.

www.Padasalai.Net www.CBSEtips.in



◆ இது வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது.

6. கடைசிநிலைக்கடன் ஈவோன்

வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச் சிக்கல்கள் ஏற்படும் பொழுது, அச்சிக்களிலிருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.

7. தீர்வாக செயல்படுகிறது

வங்கிகளுக்கிடைய நடக்கும் பரிவர்த்தனைகளை தனது 14 தீர்வகங்களைக் கொண்டு சமன் செய்கிறது.

8. அந்நிய செலாவணி பாதுகாவலன்

இது அந்நிய செலாவணி இருப்புக்களை பாதுகாக்கும் பணி யினை செய்கிறது.

38. பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.

1. பணத்தின் நடுநிலைத் தன்மை

◆ பணத்தில் ஏற்படும் மாற்றமே அனைத்து பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கும் அடிப்படை காரணம் ஆகும்

◆ எனவே பொருளாதாரத்தில் பணம் நடுநிலை தன்மை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும்

2. விகித நிலைத் தன்மை

◆ பரிவர்த்தனை விகிதங்களில் நிலையற்ற தன்மை இருந்தால் செலுத்துச் சமநிலையில் சமனற்ற நிலையை உருவாக்கும்.

◆ ஆகவே பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவது நொக்கமாகும்

3. விலை நிலைத்தன்மை

◆ விலை நிலைத்தன்மை என்பது விலை மாறாமல் நிலையாக இருப்பதோ, விலைத் தேக்கமடைந்து இருப்பதோ அல்ல.

◆ ஒரு மிதமான விலையேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும்.

4. முழுவேலை வாய்ப்பு

◆ முழுவேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய குறிக்கோளாகும்.

◆ கீன்ஸின் பொதுக் கோட்பாடு என்ற நூல் முழுவேலைவாய்ப்பு குறிக்கோளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

5. பொருளாதார வளர்ச்சி

◆ பொருளாதார வளர்ச்சி என்பது நீண்டகாலத்தில் உண்மை தலா வருவாய் அதிகரித்து செல்லும் நடவடிக்கை ஆகும்.

◆ நீடித்த பொருளாதார வளர்ச்சி யினை ஏற்படுத்துவதே பணவியல் கொள்கையின் குறிக்கோளாகும்

6. செலுத்து சமநிலையில் சமநிலையை பேணுதல் :

◆ செலுத்து சமநிலையில் வரும் பற்றாக்குறை பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோள்களையும் பாதிக்கும்.

◆ ஆகவே பணவியல் கொள்கை செலுத்துச் சமநிலையில் சமமான நிலையினை பேனுவதை குறிக்கோளாக கொண்டிருக்கிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## அத்தியாயம் - 7

# பன்னாட்டுப் பொருளியல்

சரியான விடையை தெரிவு செய்க.

1. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ________.
   **அ) வெளிவாணிகம்**
   ஆ) உள்வாணிகம்
   இ) மண்டலங்களுக்கிடையான வாணிகம்
   ஈ) உள்நாட்டு வாணிகம்

2. கீழ்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது?
   அ) ஒரு பொருளின் மேம்பாட்டு கால கட்டம்
   ஆ) உற்பத்தி காரணிகளின் ஒப்பீட்டு விலை
   இ) அரசாங்கம்
   **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

3. பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத் திலிருந்து வேறுபடக் காரணம்.
   அ) வணிகக் கட்டுப்பாடுகள்
   ஆ) உற்பத்திக் காரணிகள் இடம் பெயர இயலாமை
   இ) நாடுகளின் கொள்கை வேறுபாடுகள்
   **ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

4. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படை காரணம்
   அ) ஒரு நாடு ஒரு குறிப்பிட்டப் பொருளையும் வேறு நாடு மற்றொரு பொருளையும் உற்பத்தி செய்ய விரும்புகிறது.
   **ஆ) உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது.**
   இ) பன்னாட்டு வாணிகம் லாப குவிப்பு வாய்பை அதிகப்படுத்துகிறது.
   ஈ) நாடுகளில் நிலவும் வட்டி வீதமும் வெவ்வேறு அளவில் உள்ளது.

5. புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?
   அ) முழுமைச் செலவு
   ஆ) ஒப்புமைச் செலவு
   **இ) உற்பத்திக் காரணிக் கோட்பாடு**
   ஈ) எதுவுமில்லை

6. பண மாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை
   அ) பண சந்தை
   **ஆ) அந்நிய செலாவணி**
   இ) பங்கு சந்தை
   ஈ) மூலதன சந்தை

7. கீழ்கண்ட எந்த பணமாற்று நிர்ணயமுறையில் சந்தை விசைகளான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கிறது.
   அ) மாறா பணமாற்று வீதம்
   **ஆ) மாறுகின்ற பண மாற்று வீதம்**
   இ) நிலைத்த பணமாற்று வீதம்
   ஈ) அரசு ஒழுங்காமைப்பும் முறை

8. ஏற்றுமதி நிகரம் என்பது
   (அ) ஏற்றுமதி × இறக்குமதி
   (ஆ) ஏற்றுமதி + இறக்குமதி





Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**இ) ஏற்றுமதி - இறக்குமதி**
ஈ) பணிகள் ஏற்றுமதி

9. கீழ்கண்டவர்களில் யார் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தவர்.
**அ) ஜேக்கப் வைனர்**
ஆ) G.S. டோரன்ஸ்
இ) எப்.டபில்யூ. டாசிக்
ஈ) ஜே.எஸ்.மில்

10. வாணிப வீதம் ________ பற்றி குறிப்பிடுகின்றது.
அ) பொருள் ஏற்றுமதி இறக்குமதி விகிதம்
ஆ) இறக்குமதி வழி விகிதம்
**இ) ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்**
ஈ) (அ) வும் (இ) யும்

11. சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியைவிட ________ஆக இருக்கும்.
**அ) அதிகமாக**
ஆ) குறைவாக
இ) கிட்டத்தட்ட சமமாக
ஈ) சமமாக

12. இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருத்தலை கீழ்கண்ட வழிகளில் எது சரி செய்யும்?
அ) சுங்கத் தீர்வையைக் குறைத்தல்
**ஆ) ஏற்றுமதி வரியை அதிகரித்தல்**
இ) ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல்
ஈ) இறக்குமதிக்கு ஊக்கமளித்தல்

13. அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள்
அ) புலனாகும் பொருட்கள் மட்டும்
ஆ) புலனாகாத பணிகள் மட்டும்
**இ) அ மற்றும் ஆ**
ஈ) பண்ட வாணிபம் மட்டும்

14. அயல்நாட்டுச் செலுத்துநிலை கூறுகள் கீழ் கண்டவைகளில் எவை?
அ) நடப்பு கணக்கு
ஆ) மைய வங்கி இருப்பு
இ) மூலதன கணக்கு
**ஈ) அ, ஆ, இ மூன்றும்**

15. வாணிபக் கொடுப்பல் நிலை அறிக்கையில்
**அ) பொருள் பரிவர்த்தனை மட்டும் பதிவாகிறது.**
ஆ) பொருள் மற்றும் பணிகள் பரிவர்த்தனைகள் பதிவாகிறது.
இ) மூலதனம் மற்றும் நிதி பரிவர்த்தனைகள் பதிவாகிறது.
ஈ) மேற்கண்ட அனைத்து பதிவாகிறது.

16. சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பயணம் தொடர்புடைய பரிவர்த்தனைகள் அயல்நாட்டு செலுத்துநிலையின் எந்த கணக்கின் கீழ் பதிவாகிறது?
அ) பொருள் வாணிகக் கணக்கு
**ஆ) பணிகள் வாணிக கணக்கு**
இ) பணபரிவர்த்தனை கணக்
ஈ) மூலதன கணக்கு

17. சுழற்சி அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமற்ற நிலைக்கான காரணம்
அ) வாணிக சுழற்சியின் மாறுபட்ட கால கட்டம்
ஆ) வருவாய் மற்றும் விலை தேவை நெகிழ்ச்சி நாடுகளுக்கிடையே வேறுபடுதல்
இ) நீண்டகால பொருளாதார மாற்றங்கள்
**ஈ) அ மற்றும் ஆ**

18. கீழ்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது?


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்
ஆ) வெளிநாட்டில் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்
**இ) வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது**
ஈ) முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவனத்தை வெளிநாட்டில் தொடங்குவது.

19. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை?
அ) வங்கி
**ஆ) அணு ஆற்றல்**
இ) மருந்து உற்பத்தி
ஈ) காப்பீடு

20. கோட்பாட்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன
அ) பொருளாதார வளர்ச்சி
ஆ) பன்னாட்டு வாணிப வளர்ச்சி
இ) வேலை வாய்ப்பு மற்றும் திறன் அதிகரித்தல்
**ஈ) மேற்கண்ட அனைத்தும்**

ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?
பன்னாட்டுப் பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகளை நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றி படிக்கும் ஒரு பாடப்பிரிவு ஆகும்

22. பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.
பொருட்கள் மற்றும் பணிகளை ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்துக் கொள்வது பன்னாட்டு வாணிகம் எனப்படும்

23. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிபிட்டுக.
- வேலைவாய்ப்பு அதிகரிக்கும்
- போக்குவரத்து வசதிகள் வளரும்
- பற்றாக்குறை வளங்கள் சமமாக பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது

24. பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம்ஸ்மித்துக்கும் டேவிட் ரிகார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?
**ஆடம் ஸ்மித் :** தனி அடக்க செலவில் பொருளுற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பதே பன்னாட்டு வாணிகத்திற்கான அடிப்படையாகும்
**டேவிட் ரிக்கார்டோ :** பொருட்களை உற்பத்தி செய்ய செலவழிக்கப்படும் செலவு வேறுபாடே பன்னாட்டு வாணிகத்திற்கான அடிப்படையாகும்

25. வாணிப வீதத்தினை விளக்குக.
ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையிலான விகிதமே வாணிப வீதம் எனப்படும்

26. வாணிப செலுத்துநிலை பற்றி நீவீர் அறிவது யாது?
ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பையே வாணிப செலுத்துநிலை என்கிறோம்

27. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?
ஒரு நாட்டின் பணத்தை மற்றொரு நாட்டின் பணத்திற்கு மாற்றும் விகிதமே



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



செலாவணி மாற்று வீதம் எனப்படும்.

3 மதிப்பெண் வினாக்கள்

**28. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக.**

1. தூய வாணிபக் கோட்பாடு
2. கொள்கை சச்சரவுகள்
3. பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்
4. பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குப்படுத்தும் நிறுவனங்கள்

**29. பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை எழுதுக**

| தொன்மை பன்னாட்டு வாணிபக் கோட்பாடு | புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு |
|---|---|
| உழைப்பு சார்ந்த மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது | பொது மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது |
| இது ஒரு காரணி மாதிரியாகும் ( உழைப்பு ) | இது இரு காரணி மாதிரியாகும் (உழைப்பு, மூலதனம்) |
| ஒப்புமை செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தி திறன் வேறுபாடுகளே காரணம் | உற்பத்தி காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடே காரணம். |

**30. மொத்த மற்றும் நிகர பண்ட பரிமாற்று வாணிப வீதத்தை சுருக்குமாக எழுதுக**

**மொத்த பண்டமாற்று வாணிப வீதம்**

மொத்த ஏற்றுமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்கும் மொத்த இறக்குமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்கும் இடையிலான விகிதத்தை 100 ஆல் பெருக்கக் கிடைக்கும் தொகையாகும்.

$$Tg = (Q_m / Q_x) \times 100$$

**நிகர பண்டமாற்று வாணிப வீதம்**

ஏற்றுமதி விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்கும் இடையிலான விகிதமே நிகர பண்டமாற்று வாணிப விதம் ஆகும்.

$$Tn = (P_x / P_m) \times 100$$

**31. வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டு செலுத்து நிலைக்குமிடையிலான ஏதேனும் மூன்று வேருபாடுகளை பட்டியலிடுக.**

| வாணிபக் கொடுப்பல் நிலை | அயல்நாட்டு செலுத்து நிலை |
|---|---|
| பண்டங்களின் ஏற்றுமதி இறக்குமதி மதிப்பு | பண்டங்கள், பணிகள், மூலதனம், பணம் ஆகியவற்றின் ஏற்றுமதி, இறக்குமதி மதிப்பு |
| பண்டங்களின் ஏற்றுமதி இறக்குமதி விவரங்கள் மட்டுமே கணக்கிடப்படும் அறிக்கை | இரட்டை பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கை |
| புலப்படும் வாணிகம் | புலப்படாத பணிகளையும் உள்ளடக்கி இருக்கும் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**32. இறக்குமதி பங்களவு என்றால் என்ன?**

- இறக்குமதி பங்களவு என்பது இறக்குமதி தொடர்பான அரசாங்கத்தின் கட்டுபாடு ஆகும்
- இறக்குமதி அளவை நிர்ணயிப்பது இறக்குமதி பங்களவு ஆகும்
- பங்களவு நிர்ணயித்து இறக்குமதியை கட்டுப்படுத்தலாம்

**33. மாறுகின்ற பண மாற்று வீதத்தின் பொருள் தருக**

- அந்நிய செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பண மாற்று வீதமாகும்.
- இதை மிதக்கும் பண மாற்று வீதம் என்றும் அழைக்கலாம்.

**34. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக**

1. விற்பனையை விரிவுப்படுத்துதல்
2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்
3. வாணிப பரவலாக்கம்
4. போட்டி இடர்களை குறைத்தல்

**5 மதிப்பெண் வினாக்கள்**

**35. உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்க**

| உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|
| ஒரு நாட்டிற்குள் நடைபெறும் வாணிகம் | பல நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிகம் |
| உழைப்பு மற்றும் மூலதனம் ஒரு நாட்டிற்குள் தடையில்லாமல் இடம்பெயரும் | உழைப்பு மற்றும் மூலதனம் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக் குட்பட்டது. |
| பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதும் இல்லை | தடைகள் காணப்படுகின்றன. எ.கா. சுங்கவரி |
| விற்றல் வாங்கலில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத் தப்படுகிறது. | பல நாட்டு பணங்கள் பயன்படுத் தப்படுகின்றன |
| புவி அமைப்பு மற்றும் கால நிலை சூழல் ஒரே மாதிரி இருக்கும் | புவி அமைப்பு மற்றும் கால நிலை வேறுபடும் |
| வாணிப மற்றும் நிதி நடைமுறைகள் ஒரே மாதிரியானவை | வாணிப மற்றும் நிதி நடைமுறைகள் வேறுபடும் |
| மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அரசின் கொள்கைகளில் வேறுபாடில்லை | வேறுபாடு இருக்கும் |

**36. ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி.**

**கோட்பாடு விளக்கம்:**

- இரு பண்டங்களை உற்பத்தி செய்வதில் செய்யப்படும் முழுச் செலவுகளில் இரு நாடுகளிடையேயான வேறுபாடே ஒப்புமைச் செலவு எனப்படும். - ரிக்கார்டோ
- எந்த பொருளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய இயலாத நாடு மற்ற நாட்டின் பொருளுற்பத்தி செலவுடன் ஒப்பிட்டு மிக உயர்வான உற்பத்தி செலவுள்ள பொருள் உற்பத்தியை நிறுத்திவிட்டு அவற்றை இறக்குமதி செய்து பலனடையலாம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




எடுகோள்கள்:

1. இரண்டு நாடுகள் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றன.
2. கூலிச் செலவு மட்டுமே உற்பத்தி செலவாகும்.
3. உழைப்பாளர்களனைவரும் சமமான திறன் பெற்றவர்கள்.
4. தொழில் நுட்பத்தில் மாற்றமில்லை
5. நிறைவு போட்டி நிலவுகிறது
6. அரசின் தலையீடு இல்லை

## ஒப்புமைச் செலவு

*(ஒரு அலகு உற்பத்தி செய்ய தேவைப்படும் அழைப்பின் அளவு)*

| நாடு | துணி | கோதுமை | உள்நாட்டு பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மூட்டை கோதுமை = 1.2 மீட்டர் துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மூட்டை கோதுமை = 0.88 மீட்டர் துணி |




- துணி மற்றும் கோதுமையை உற்பத்தி செய்ய இந்தியா 170 அலகு உழைப்பையும், அமெரிக்கா 220 அலகு உழைப்பையும் பயன்படுத்த வேண்டிவரும்.
- பன்னாட்டு வாணிகத்தை அனுமதித்தால் ஒரு மூட்டை கோதுமையை அமெரிக்காவிடம் கொடுத்து 90 அலகு உழைப்பு தேவைப்படுகிற ஒரு மீட்டர் துணியை வாங்கிவிட முடியும்.
- இதனால் இந்தியாவிற்க்கு 10 அலகு உழைப்பு மிச்சம்.
- இதே போன்று அமெரிக்கா துணி ஒரு மீட்டர் 100 அலகில் உற்பத்தி செய்து 1 மூட்டை கோதுமையை பெருகிறது. இதனால் அமெரிக்காவுக்கு 20 அலகு உழைப்பு மிச்சப்படுவதையே பன்னாட்டு வாணிகத்தின் பலன் எனலாம்.

திறனாய்வு :

1. உழைப்பு செலவு உற்பத்தி செலவில் ஒரு பகுதிதான். எனவே, இக்கோட்பாடு உண்மையை பிரதிபலிக்கவில்லை
2. பல்வேறு நாட்டுத் தொழிலாளிகள் ஒரே அளவு திறன் பெற்றவர்கள் அல்லர்.

### 37. புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும்.

கோட்பாடு :

மூலதன இருப்பை அதிகம் கொண்ட நாடு மூலதனப் பண்டங்களையும், உழைப்பு இருப்பை அதிகம் கொண்ட நாடு உழைப்பை அதிகம் பயன்படுத்தும் பண்டங்களையும் ஏற்றுமதி செய்யும்.

எடுகோள்கள் :

1. இரண்டு நாடுகள் இரண்டு உற்பத்தி காரணிகளை பயன்படுத்தி இரண்டு விதமான பொருட்களை உற்பத்தி செய்கிறது.
2. நாடுகள் வெவ்வேறு அளவுகளில் உற்பத்தி காரணிகளை பெற்றுள்ளது.
3. இரண்டு நாடுகளும் ஒரே இயல்பான தேவையை பெற்றுள்ளன.




Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

| விவரங்கள் | இந்தியா | அமெரிக்கா |
|---|---|---|
| உழைப்பின் அளிப்பு | 50 | 24 |
| மூலதனத்தின் அளிப்பு | 40 | 30 |
| மூலதன உழைப்பு விகிதம் | 40/50 = 0.8 | 30/24 = 1.25 |

மேற்கண்ட அட்டவணையில் அமெரிக்காவின் மூலதன உழைப்பு விகிதமான 1.25 இந்தியாவின் 0.8 விட அதிகமக இருக்கிறது.

ஆகவே




- மூலதன மிகுதி நாடு அதிக மூலதனத்தால் உற்பத்தியாகும் பொருள்களை ஏற்றுமதி செய்யும்.
- உழைப்பு மிகுதி நாடு அதிக உழைப்பினால் தயாரிக்கும் பொருள்களை ஏற்றுமதி செய்யும்.

குறைபாடுகள்

1. நாடுகளில் உற்பத்தி காரணிகளின் இருப்பளவு காலத்திற்கேற்றாா் போல மாறலாம்.
2. உற்பத்திக் காரணிகளின் திறன் நாடுகளுக்கிடையே வேறுபடலாம்.

38. ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிப வீத வகைகளை விவரி.

1. ஒற்றைக் காரணி வாணிப வீதம்.

ஏற்றுமதி விலை குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதி விலைக் குறியீட்டெண்ணுக்கும் இடையான விகிதத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்தி தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண்ணின் மதிப்பினால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே ஒற்றைக் காரணி வாணிப வீதமாகும்.

$$T_f = (P_x / P_m) F_x$$

$T_f$ = ஒற்றைக்காரணி வாணிப வீதம்

$P_x$ = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

$P_m$ = இறக்குமதி விலை குறியீட்டெண்

$F_x$ = ஏற்றுமதிக்கு பொருள் உற்பத்தி செய்யும் தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண்.

இரட்டைக் காரணி வாணிப வீதம் :

$$T_{ff} = (P_x / P_m) (F_x / F_m)$$

$T_{ff}$ = ஒற்றைக்காரணி வாணிப வீதம்

$P_x$ = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

$P_m$ = இறக்குமதி விலை குறியீட்டெண்

$F_x$ = ஏற்றுமதிக்கு பொருள் உற்பத்தி செய்யும் தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண்.

$F_m$ = இறக்குமதி பொருள் உற்பத்தி செய்யும் நாட்டில் அத்துறையின் உற்பத்திதிறன் குறியீட்டெண்.

39. அயல்நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகளை அட்டவணை வடிவில் விளக்குக.

நடப்பு கணக்கு:

பன்னாட்டு பண்ட பரிவா்த்தனைகள், பன்னாட்டுப் பணி பரிவா்த்தனைகள், உற்பத்திக்காரணி வருவாய் மற்றும் பரிசுத் தொகை பரிவா்த்தனைகள் இந்த கணக்கின் கீழ் பதியப்படுகிறது.

மூலதன கணக்கு:

வெளிநாட்டுக் கடன் அந்நிய முதலீடு பன்னாட்டு பண சந்தை விற்றல் வாங்கல் பரிவா்த்தனைகள் இந்த கணக்கின் கீழ் பதியப்படுகிறது.

www.Padasalai.Net www.CBSEtips.in



மையவங்கி நிதி சொத்து

கையிருப்பு கணக்கு:

- இந்த கணக்கின் கீழ் தங்கத்தின் இருப்பு, வெளிநாட்டுப் பணம், சிறப்பு எடுப்புரிமை ஆகியவை பதியப்படுகிறது.
- நடப்பு மற்றும் மூலதன கணக்கில் உபரி எழுந்தால் கையிருப்பு கணக்கில் சேர்க்கப்படும்.
- பற்றாக்குறை விழுந்தால் கையிருப்பிலிருந்து எடுத்து செலவிடப்படும்.

**40. அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரி.**

சுழற்சி சமனற்ற நிலை:

- வாணிப சுழற்சியின் விளைவாக எழும் அயல் நாட்டு செலுத்து சமனற்ற நிலையை சுழற்சி சமனற்ற நிலை என்கிறோம்.
- காரணங்கள்

1. நாடுகள் வாணிப சுழற்சியின் வெவ்வேறு கட்டங்களிலிருப்பது.
2. நாடுகளுக்கிடையே தேவை நெகிழ்வு அளவு மாறுபடுவது.

நீண்ட கால சமனற்ற நிலை:

- நாடுகள் பொருளாதார வளர்ச்சி படிநிலைகளில் முன்னேறும்பொழுது நீண்டகால தலைகீழ் மாற்றங்கள் நிகழ்வதால் உண்டாகும்.
- உதாரணம்: ஒரு நாட்டின் உள்நாட்டு முதலீடு உள்நாட்டு சேமிப்பைவிட கூடுதலாக இருக்கும்.

கட்டமைப்பு சமனற்ற நிலை:

- நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையே கட்டமைப்பு சமனற்ற நிலையாகும்.
- உதாரணம் உற்பத்தி வளங்கள் தீர்ந்து போதல்

**41. பண மாற்று வீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக.**

1. நிலையான பணமாற்று வீதம்

- ஒரு நாட்டின் அரசு, மைய வங்கியின் மூலம் பணமாற்று வீதம் நிர்ணயித்தால் அதை மாறாத பணமாற்று வீதம் என்கிறோம்.

2. நிலையற்ற பண மாற்று வீதம்


அந்நிய செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பண மற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பண மாற்று வீதம் ஆகும்.

சமநிலை பணமாற்று வீதம் நிர்ணயித்தல்

சமநிலை பணமாற்று வீதம் பொது விலை நிர்ணய கோட்பாட்டின் படி நிர்ணயமாகிறது.

விளக்கம்

அந்நிய செலாவணிக்கான தேவை அளவும் அளிப்பு அளவும் சமமாகும் அளவில் சமநிலை பணமாற்று வீதம் நிர்ணயமாகும்.




- OY அச்சு பண மாற்று வீதம்,
- OX அச்சு அந்நிய செலாவணிக்கான தேவை மற்றும் அளிப்பு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



◆ E என்ற புள்ளியில் அந்நிய செலாவணி தேவை வளைகோடு அளிப்பு வளைகோட்டை வெட்டுகிறது. இங்கு பணமாற்று வீதம் சமநிலையை அடைகிறது.

◆ தேவையும் அளிப்பும் OQ என்ற அளவில் $OP_2$ என்ற பண மாற்றுவிதமே சமநிலை பணமாற்று வீதமாகும்.

**42. பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.**

1. பன்னாட்டுப் பொருளாதாரத்தில் அன்னிய நேரடி முதலீடு முக்கிய பங்கு வகிக்கிறது.
2. வெளிநாட்டு நேரடி மூலதனம் நாட்டின் வேலைவாய்ப்பு அளவினை அதிகரிக்கும்.
3. வெளிநாட்டு நேரடி மூலதனம் புதிய இயந்திரங்கள், புதிய தொழில் நுட்பம் ஆகியவற்றை கொண்டுவருகிறது.
4. புதிய தொழில் மேலான்மை முறைகளை அறிமுகப்படுத்தும்.
5. ஏற்றுமதி செய்து ஈட்டிய அந்நிய செலாவணி இறக்குமதி மீது செலவழிக்க போதவில்லையென்றால் வெளிநாட்டு நேரடி மூலதனத்தைக் கொண்டு ஈடு செய்ய முடியும்.
6. லாபத்தின் ஒரு பகுதியை மறுமுதலீடு செய்வதன் மூலம் தொழில்வளம் பெருகும்.

ஆகவே

7. வெளிநாட்டு நேரடி மூலதனம் அந்நிய செலாவணி பற்றாக்குறையை போக்கி, வேலை வாய்ப்பை உருவாக்கி, பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதி கரிக்கும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அத்தியாயம் - 8

# பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்

சரியான விடையை தெரிவு செய்க

1. பன்னாட்டு பண நிதியம் கீழ்க்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது.
அ) பான்டுங்மாநாடு
ஆ) சிங்கப்பூர் மாநாடு
**இ) பிரிட்டன் வூட்ஸ் மாநாடு**
ஈ) தோஹா மாநாடு

2. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
**அ) வாஷிங்டன் டி.சி**
ஆ) நியூ யார்க்
இ) வியன்னா
ஈ) ஜெனிவா

3. ஐபிஆர்டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது.
அ) பன்னாட்டு பணநிதியம்
**ஆ) உலக வங்கி**
இ) ஆசியான்
ஈ) பன்னாட்டு நிதி கழகம்

4. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்
**அ) தாள் தங்கம்**
ஆ) பங்களவுகள்
இ) தன் விருப்ப ஏற்றுமதி தடைகள்
ஈ) இவை ஏதுமில்லை

5. நீண்டகாலக் கடன் வழங்கும் நிதி நிறுவனம்
**அ) உலக வங்கி**
ஆ) பன்னாட்டுப் பண நிதியம்
இ) உலக வர்த்தக அமைப்பு
ஈ) பிரிக்ஸ்

6. **கீழ்கண்ட நாடுகள் எது சார்க் அமைப்பின் உறுப்பினர் இல்லை?**
அ) இலங்கை
**ஆ) ஜப்பான்**
இ) வங்காளதேசம்
ஈ) ஆப்கானிஸ்தான்

7. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்க்கண்ட இதன் துணை அமைப்பாகும்.
அ) பன்னாட்டுப் பண நிதியம்
**ஆ) உலக வங்கி**
இ) சார்க்
ஈ) சியான்

8. காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் போன்றவை ________ உடன் தொடர்புடையவை.
**அ) வணிகம் சார் சொத்துரிமை**
ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்
இ) காட்ஸ்
ஈ) NAMA

9. உலக வர்த்தக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம்
**அ) சிங்கப்பூர்**
ஆ) ஜெனிவா
இ) சியாட்டில்
ஈ) டோஹா



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. ஆசியான் கூட்டங்கள் ________ ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.
அ) 2 **ஆ) 3**
இ) 4 ஈ) 5

11. கீழ்கண்டவைகளில் எது SAARC உறுப்பினர் நாடு அல்ல?
அ) பாகிஸ்தான்
ஆ) ஸ்ரீலங்கா
இ) பூடான்
**ஈ) சீனா**

12. சார்க் உச்சி மாநாடு ________ ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகிறது.
**அ) 2** ஆ) 3
இ) 4 ஈ) 5

13. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
**அ) ஜகார்த்தா**
ஆ) புது டெல்லி
இ) கொழும்பு
ஈ) டோக்கியோ

14. பிரிக் (BRIC) என்ற சுருக்கச் சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு
**அ) 2001** ஆ) 2005
இ) 2008 ஈ) 2010

15. ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு
அ) 1965 **ஆ) 1967**
இ) 1972 ஈ) 1997

16. பத்தாவது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜூலை 2018ல் நடைபெற்ற இடம்
அ) பீஜிங்
ஆ) மாஸ்கோ
**இ) ஜோகனஸ் பர்க்**
ஈ) பிரசிலியா

17. புதிய மேம்பாடு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது
**அ) பிரிக்ஸ்**
ஆ) டபிள்யூ.டி.ஓ
இ) சார்க்
ஈ) ஆசியான்

18. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு
அ) சீனா
ஆ) ஜப்பான்
இ) இந்தியா
**ஈ) வடகொரியா**

19. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு
அ) 1985
**ஆ) 1988**
இ) 1992
ஈ) 1998

20. பெனிலக்ஸ் (BENELUX) என்பது இதன் வடிவமாகும்.
அ) தடையற்ற வர்த்தக பகுதி
ஆ) பொருளாதார ஒன்றியம்
இ) பொது சந்தை
**ஈ) சுங்கவரி ஒன்றியம்**

## 2 மதிப்பெண் வினாக்கள்

21. சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.

- பன்னாட்டு பண நிதியத்தில் கையிருப்பாக உள்ள உறுப்பு நாடுகளின் பணமே சிறப்பு எடுப்புரிமை ஆகும்.
- இது தாள் தங்கம் என அழைக்கப்படுகிறது.
- இது IMF இன் கட்டளைப் பணமாகும்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**22. ஆசியானின் இரண்டு நோக்கங்களை குறிப்பிடுக**

- பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி மற்றும் பண்பாட்டு மாற்றத்தை துரிதப்படுத்துவது
- ஐ.நாவின் கொள்கைகளை கடைபிடித்து தென்கிழக்காசிய பகுதியில் அமைதி மற்றும் உறுதியான அரசியல் சூழ்நிலையை மேம்படுத்துவது

**23. ஐபிஆர்டி யின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களை சுட்டிக் காட்டுக**

- வங்கி இருப்பில் உள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குவது
- கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது
- ஈட்டுறுதி வழங்கி கடன் பெற்று தருவது

**24. பொது சந்தை வரையறு**

புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக் காரணிகள் இடம்பெயர்வுக்காக அமைக்கும் அமைப்பே பொது சந்தை ஆகும்

**25. தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?**

- ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பு நாடுகளுக்கிடையே வாணிகத் தடைகளை குறைக்க அல்லது தடையற்ற வாணிகம் செய்ய ஒத்துழைக்கும் பகுதி ஆகும்
- எ.கா. SAFTA, EFTA

**26. எங்கு மற்றும் எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவங்கப்பட்டது.**

- இது டிசம்பர் 8, 1985 நேபாள நாட்டின் காட்மாண்டை தலைமைச் செயலகமாகக் கொண்டு அமைக்கப்பட்டது.

**27. உலக வங்கி குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடுக.**

- பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு
- பன்னாட்டு நிதிக் கழகம்

## 3 மதிப்பெண் வினாக்கள்

**28. பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்களைக் குறிப்பிட்டுக்க.**

- தடையற்ற வாணிக பகுதி (SAFTA, EFTA)
- சுங்கவரி ஒன்றியம் ( BENELUX )
- பொது சந்தை ( ECM )
- பொருளாதார ஒன்றியம் ( European Economic Union )

**29. வாணிக ஒத்துழைப்பு தொகுதிகள் என்றால் என்ன?**

- சில நாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிற நாட்டு பொருளாதாரத்துடன் தங்களுடைய பொருளாதாரத்தை இணைத்து புதிய வாணிக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன.
- சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத் தொகுதிகள் பரஸ்பர நல்லிணக்கத்திற்க்கு உதவுகிறது.
- எ.கா. தடையற்ற வாணிக பகுதி, பொருளாதார ஒன்றியம்

**30. ஐஎம்எஃப் ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.**

1. அடிப்படை கடன் வசதி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. விரிவாக்கத் திட்ட நிதி வசதி
3. ஈடு செய் நிதி வசதி

**31. பல தரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?**

◆ பன்னாட்டு வாணிக ஒத்துழைப்பு தொகுதிகள், பன்னாட்டு வாணிகத்தில் ஒரே குழுவாக ஒன்றிணைந்து செயல்பட நாடுகளின் கூட்டமைப்பு தடையற்ற வாணிக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு செயல்படுவார்கள்.

◆ இந்த ஒப்பந்தம் மற்ற வகை வாணிக ஒப்பந்தங்களை விட வலுவானதாகும்.

**32. பிரிக்ஸ் மாநாடு 2018 ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக**

◆ 10 வது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜூலை 2018 இல் நடைபெற்றது

◆ உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகப் பிரச்சனைகள், உலகளாவிய அரசு நிர்வாகம், பகிரத்தக்க வளமை, நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

**33. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.**

◆ தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்

◆ உறுப்பு நாடுகளின் பொதுவான பிரச்சனைகளை தீர்வு காணுதல்

◆ உறுப்பு நாடுகளுக்கிடை யிலான உறவை மேம்படுத்துதல்

◆ வறுமை ஒழிப்பு திட்டங்களின் மூலம் ஏழ்மையை ஒழிப்பது

◆ பயங்கரவாத செயல்களை தடுப்பது

**34. ஆசியான் அமைப்பின் சாதனைகளிப் பட்டியலிடுக.**

**ஆசியானின் பணிகள் :**

1. உறுப்பினர் நாடுகளுக்கிடையில் தடையற்ற பொருள், பணிகள் மற்றும் மூலதன போக்குவரத்துக்கான வழிமுறைகளை உருவாக்குகிறது.
2. ஒரு உறுப்பு நாட்டு விற்பனையாளர் மற்ற எல்லா உறுப்பு நாடுகளிலும் விற்க தடையற்ற அனுமதி அளிக்கும் பணியையும் செய்கிறது.
3. உறுப்பு நாடுகளுக்கு சந்தை மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை பெற்றுத் தருவது.
4. தொழில் மற்றும் வணிகம் உள்ளிட்ட பல துறைக்கான ஒத்துழைப்பை வளர்த்தல்

## 5 மதிப்பெண் வினாக்கள்

**35. பன்னாட்டு பண நிதியத்தின் நோக்கங்களை விளக்குக**

1. உறுப்பு நாடுகளிடையே பன்னாட்டு பரிவர்தனையில் பணவியல் ஒத்துழைப்பை மேம்படுத்துவது
2. பன்னாட்டு வாணிபம் வேகமாகவும் சமசீராகவும் வளர உதவுவது
3. உறுப்பு நாடுகள் பண மதிப்பிறக்கம் செய்வதை தடுத்து நாணய மாற்று விகிதம் நிலையாக இருக்க செய்தல்
4. உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவணிக் கட்டுபாடுகளை குறைத்தல் அல்லது நீக்குதல்
5. பன்னாட்டு நீர்மைப் பிரச்சினைக்கு தீர்வு காணுதல்

**36. உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.**

**1. உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி :**

◆ உறுப்பு நாடுகளுக்குட்பட்ட

பகுதிகளின் மறுகட்டமைப்பு மற்றும் மற்றும் மேம்பாட்டுக்கு உதவி செய்கிறது.

◆ பின்தங்கிய நாடுகளில் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு உதவுகிறது.

2. பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி :

◆ உறுப்பு நாடுகள் அனைத்தும் நீண்டகால வளர்ச்சியடைய உதவும் பணியை வங்கி செய்கிறது.

◆ இதனால் உறுப்பு நாடுகள் அயல்நாட்டு செலுத்துநிலை சமநிலையை அடையும்.

3. கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்

◆ முக்கிய திட்டங்களுக்கு கடன் வழங்குவது.

◆ கடன் பெற ஈட்டுறுதி வழங்குகிறது.

4. வெளிநாட்டு தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளிக்கிறது:

◆ வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்கள் மூலம் உறுப்பு நாடுகளுக்கு கடன் வழங்க ஈட்டுறுதிகள் வழங்கி வெளிநாட்டு மூலதனதுக்கு ஊக்கமளிக்கிறது.

5. தொழில் நுட்ப சேவைகள் :

◆ உலக வங்கி நிபுணர்களை கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

37. இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் WTO- ன் பங்கினை விவாதிக்க.

1. இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் இடு பொருட்கள், உதிரி பாகங்கள் மற்றும் இயந்திரங்கள் இந்தியாவுக்கு குறைவான விலையில் அதிகாமாக கிடைத்துள்ளது.

2. நாடுகளுடன் தனித்தனியே ஒப்பந்தம் போடாமல் பல நாடுகளில் இந்தியா பொருட்களை விற்பனை செய்ய முடிகிறது.

3. குறைந்த செலவில் உயர்வகை தொழில்நுட்பம் கிடைத்துள்ளது.

4. பன்னாட்டு பரிவர்த்தனை தொடர்புள்ள புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.

5. பரந்த சந்தை தகவலிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் பலனடைகின்றனர்.

38. குறிப்பு எழுதுக: அ) சார்க் ஆ) ப்ரிக்ஸ்

அ ) சார்க்

◆ தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்காக துவக்கப்பட்ட அமைப்பு தெற்காசிய மண்டல ஒத்துழைப்பு அமைப்பு ஆகும்.

◆ இது டிசம்பர் 8, 1985 நேபாள நாட்டின் காட்மாண்டை தலைமைச் செயலகமாகக் கொண்டு அமைக்கப்பட்டது.

◆ வங்கதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய எட்டு உறுப்பு நாடுகளாகும்.

ஆ) பிரிக்ஸ் நாடுகள் :

◆ பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, மற்றும் தென் ஆப்பிரிக்கா, ஆகிய விரைவாக வளர்ந்து வரும் நாடுகளின் சுருக்கப்பெயர்.

◆ தலைநகரம் ஷாங்காய், சீனா.

◆ உலகளாவிய அரசு நிர்வாகம், பகிரத்தக்க வளமை நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

www.Padasalai.Net www.CBSEtips.in



# அத்தியாயம் 9

# நிதிப் பொருளியல்

1. நவீன அரசு எனப்படுவது
அ) தலையிடா அரசு
ஆ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு
**இ) நலம் பேணும் அரசு**
ஈ) காவல் அரசு

2. கீழ்வருவனவற்றுள் தனியார் நிதியின் பண்புகளில் இல்லாதது.
அ) வருமானம் செலவு சமம்
ஆ) இரகசியம்
இ) வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமித்தல்
**ஈ) விளம்பரப்படுத்துதல்**

3. வரி கீழ்க்காணும் குணங்களைக் கொண்டது.
அ) கட்டாயத் தன்மை
ஆ) பிரதிபலன் கருதாமை
இ) வரி மறுப்பு ஒரு குற்றம்
**ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்**

4. ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?
அ) சமத்துவம் விதி
ஆ) நிச்சயத்தன்மை விதி
இ) வசதி விதி
**ஈ) எளிமை விதி**

5. கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க.
i. மாநில பட்டிலிலோ, இணைப்பு பட்டியலிலோ குறிப்பிடப்படாத வரியை விதிப்பதற்கு மைய அரசுக்கு தனி உரிமையில்லை.
ii. அரசியலமைப்பு சில வரிகளை மைய அரசு பட்டியலில் இருந்து மாநில அரசு பட்டியலுக்கு மாற்ற வசதி செய்கிறது.
அ) (i) மட்டும்
**ஆ) (ii) மட்டும்**
இ) இரண்டும்
ஈ) ஏதுமல்லை

6. GST இதற்கு சமம்?
**அ) விற்பனை வரி**
ஆ) தொழிற்குழும வரி
இ) வருமான வரி
ஈ) உள்ளாட்சி வரி

7. இந்த நன்மையை நேர்முக வரி கொண்டிருக்கவில்லை.
அ) சமத்துவம்
**ஆ) வசதி**
இ) நிச்சயத்தன்மை
ஈ) நாட்டுப் பற்று

8. கீழ்வருவனவற்றுள் எது நேர்முக வரி?
அ) கலால் வரி
**ஆ) வருமான வரி**
இ) சுங்க வரி
ஈ) சேவை வரி

9. கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை?
அ) தனிநபர் வருமான வரி
ஆ) நிறுவன வரி
**இ) விவசாய வருமான வரி**


அரசு மேல்நிலைப் பள்ளி, அரங்கல்துருகம்
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

ஈ) கலால் வரி

10. அரசின் வருவாய் வரவு (Revenue Receipts) கணக்கில் சேராதது.

அ) வட்டி

ஆ) இலாபம் மற்றும் இலாப ஈவு

இ) கடன்களைத் திரும்பப் பெறுதல்

**ஈ) சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்**

11. வருவாய் செலவு (Revenue Expenditure) வருவாய் வருவாயைவிட (Revenue receipts) அதிகமாக இருந்தால், அது

**அ) வருவாய் பற்றாக்குறை**

ஆ) நிதிப்பற்றாக்குறை

இ) வரவு செலவு பற்றாக்குறை

ஈ) அடிப்படைப் பற்றாக்குறை (Primary deficit)

12. மொத்தச் செலவு, கடன் அல்லாத மொத்த வருவாயை விட அதிகமாக இருந்தால், அது

**அ) நிதிப்பற்றாக்குறை**

ஆ) வரவு செலவு திட்ட பற்றாக்குறை

இ) முதன்மை பற்றாக்குறை

ஈ) வருவாய் பற்றாக்குறை

13. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது

**அ) பொருளாதார முன்னேற்றம்**

ஆ) பொருளாதார நிலைத்தன்மை

இ) பொருளாதார சமத்துவம்

ஈ) வேலைவாய்ப்பு உருவாக்குதல்

14. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பதன் பொருளாவது

அ) அரசின் செலவை விட அரசின் வருவாய் அதிகம்.

ஆ) அரசின் நடப்புக்கணக்குச் செலவு நடப்புக்கணக்கு வருவாயை விட அதிகம்.

**இ) அரசின் மொத்தச் செலவு மொத்த வருவாயைவிட அதிகம்.**

ஈ) மேலே கூறியவற்றில் எதுவும் இல்லை.

15. பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும் முறை

அ) கடனை மாற்றுதல்

ஆ) மூழ்கும் நிதி

இ) பகுதியாகச் செலுத்துதல்

**ஈ) இவை அனைத்தும்**

16. பொதுக்கடனை மாற்றுதல் என்பது

அ) பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாக புதிய கடன் பத்திரங்களை மாற்றுதல்

**ஆ) அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல்**

இ) குறுகியகால பத்திரங்களுக்குப் பதிலாக நீண்ட கால பத்திரங்களைத் தருதல்

ஈ) மேற்கூறிய அனைத்தும்

17. பட்ஜெட் என்ற பதம் ஃப்ரென்ஞ்ச் வார்த்தையாகிய (Bougette) விலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள்

**அ) சிறிய பை**

ஆ) பெரிய பெட்டி

இ) காகிதங்கள் அடங்கிய பை

ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

18. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும்?

அ) வருவாய் பற்றாக்குறை

ஆ) வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை

**இ) நிதிப் பற்றாக்குறை**

ஈ) முதன்மைப் பற்றாக்குறை

www.Padasalai.Net www.CBSEtips.in



19. நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது?
அ) இந்திய அரசின் நிதியினை
**ஆ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்**
இ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல்
ஈ) மேற்கூறப்பட்ட எதுவுமில்லை

20. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி.
i) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப் படுகிறது
ii) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்
அ) (i) மட்டும்
ஆ) (ii) மட்டும்
**இ) இரண்டும்**
ஈ) இரண்டும் இல்லை

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

21. "பொது நிதி" வரையறு.
"அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும், கொள்கைகளையும், ஆராய்வதே பொது நிதியியல் ஆகும்." என்று ஆடம் ஸ்மித் கூறுகிறார்.

22. "பொது வருவாய்" என்றால் என்ன?
பொது வருவாய் என்பது அனைத்து மூலங்களின் வழியாக அரசு பெறும் வருமானத்தைக் குறிக்கும்.

23. "வரி", "கட்டணம்" வேறுபடுத்து

| வரி | கட்டணம் |
|---|---|
| வரி என்பது அரசுக்கு கட்டாயமாக செலுத்தக் கூடியதாகும் | கட்டணம் என்பது வரியைப் போல் கட்டாயம் செலுத்தக் கூடியது அல்ல. |
| வரியைச் செலுத்த மறுப்பது தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். | அரசானது சில சேவையைச் செய்வதற்காக கட்டணங்களை வசூலிக்கிறது. |

24. "பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம்" குறிப்பு வரைக.
- இந்திய அரசு 1987 - 88 ல் பூஜ்ய வரவு செயல்த்திட்டத்தை தாக்கல் செய்தது.
- ஒவ்வொரு செலவினமும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும்.

25. நேர்முக வரிக்கு இரு உதாரணங்கள் தருக.
- வருமான வரி
- நிறுவன வரி

26. GST யின் கூறுகள் யாவை?
- CGST - மத்திய சரக்கு மற்றும் சேவை வரி
- SGST - மாநில சரக்கு மற்றும் சேவை வரி
- IGST - மாநில அரசுகளுக்கிடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும்.

27. "பொதுக்கடன்" என்பதன் பொருள் யாது?
அரசானது தனிநபர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிடம் கடன்கள் பெறுவது பொது கடன்கள் எனப்பெறும்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

28. வரி விதிப்பு விதிகளை விவரிக்க
1. செலுத்தும் திறன் பற்றிய விதி
- மக்களின் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்ப வரி விதிக்க வேண்டும்.
- ஏழைகளை ஒப்பிடும் போது செல்வந்தர்கள் அதிக வரி செலுத்துவது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. வசதி விதி :

வரி வசூலிக்கும் முறை மற்றும் வரி செலுத்தும் காலம் மக்களின் வசதிக்கேற்ப அமைய வேண்டும்.

3. சிக்கன விதி :

◆ அரசு வரிகளை வசூலிப்பதற்கு பணம் செலவிடுகிறது.

◆ ஆகவே, வசூலிக்கும் செலவுகள் குறைவாக இருக்கும் வரிகளை மட்டுமே அரசு விதிக்க வெண்டும்.

**29. தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளை எழுதுக.**

1. பகுத்தறியும் தன்மை :

◆ பொது மற்றும் தனியார் நிதி இரண்டும் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டவை.

◆ குறைந்த செலவில் அதிக நலத்தை பெறுவதே முக்கிய நோக்கம் ஆகும்.

2. வளங்களின் பயன்பாடு :

◆ தனி மற்றும் பொது துறைகள் வரையறுக்கப் பட்ட வளங்களையேக் கொண்டுள்ளது.

◆ உத்தம அளவில் வளங்களைப் பயன்படுத்த முனைகிறது.

3. நிர்வாகம் :

◆ நிர்வாகத் திறனானது அரசு மற்றும் தனியாரின் செயல்திறனைப் பொருத்து அமைகிறது.

◆ நிர்வாகத்தில் செயல்திறன் இன்மை காணப்பட்டால் நட்டங்கள் ஏற்படும்.

**30. நவீன அரசின் பணிகள் யாவை?**

1. பதுகாப்பு :

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அழிவிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதே அரசின் முக்கியப் பணியாகும்.

2. நீதி :

நீதியை பரிபாலனம் செய்தல் மற்றும் தகராறுகளை தீர்த்தல் அகியவை அரசின் பனியாகும்.

3. சமூக நலன் :

நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக கல்வி, சமூக பாதுகாப்பு, உடல் நலம் போன்றவற்றை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும்.

**31. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.**

1. வரி என்பது அரசுக்கு கட்டாயமாக செலுத்தக்கூடிய ஒன்றாகும்.

2.வரி செலுத்துவோர் அரசிடம் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் செலுத்த வேண்டும்.

3. ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது ஆகும்.

**32. நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.**

| நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|
| நேரடியாக அரசுக்கு செலுத்துவதாகும். | மறைமுகமாக அரசுக்கு செலுத்துவதாகும். |
| வருமானம் மற்றும் செல்வத்தின் மீது விதிக்கப்படுவது | பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படுவது |
| மற்றவர் மீது மாற்ற முடியாது. | மற்றவர் மீது மாற்றி விடக் கூடியது. |
| வளர் வீத வரி | தேய்வீத வரி |

**33. முதன்மைப் பற்றாக்குறை என்றால் என்ன?**

◆ முதன்மை பற்றாக்குறை என்பது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்துதலை கழித்த பின் உள்ள பற்றாக்குறையாகும்.

◆ அரசின் உண்மையான சுமையை காட்டும்

www.Padasalai.Net www.CBSEtips.in



◆ முதன்மைப் பற்றாக்குறை (PD) = நிதிப்பற்றாக்குறை (FD) - வட்டி செலுத்துதல் (IP)

34. பொதுக்கடனை திரும்ப செலுத்துவதற்கான மூன்று முறைகளைக் கூறுக.

1. கடனை மாற்றுதல் :

◆ பழைய கடனை புதிய கடனாக மாற்றப்படுவது.

◆ அதிக வட்டி கொண்ட பொதுக் கடன் குறைவான வட்டி கொண்ட பொதுக்கடனாக மாற்றப்படுகிறது.

2. வரவு செலவு திட்ட உபரி :

◆ உபரி வரவு செலவு திட்டத்தில் உள்ள உபரியை, கடனை திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும்.

3. பகுதியாகச் செலுத்துதல் :

◆ அரசு பொதுக்கடனை சம வருடாந்திர தவணைகளாக செலுத்துகிறது.

◆ இது பொதுக் கடனைச் செலுத்தும் மிக சுலபமான முறையாகும்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

35. பொது நிதியின் எல்லைகளை விளக்குக.

1. பொது வருவாய் :

பொது வருவாய் என்பது வருவாயைப் பெறக்கூடிய முறைகளான வரி மற்றும் வரியில்லா வருமானங்கள் பற்றி விளக்குகிறது.

2. பொதுச் செலவு :

இப்பகுதி அரசின் பொது செலவுகள், அதன் விளைவுகள் மற்றும் அதனை கட்டுப்படுத்துதல் போன்றவற்றை விளக்குகிறது.

3. பொதுக்கடன் :

பொதுக்கடன் என்ற பகுதியில் உள்நாடு மற்றும் வெளிநாட்டின் மூலம் பெறக்கூடிய கடன்களுக்கான வளங்களைப் பற்றி படிக்கிறது.

4. நிதி நிர்வாகம் :

அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றி படிக்கிறது.

5. நிதிக் கொள்கை :

வரிகள், மானியங்கள், பொதுக்கடன் மற்றும் பொதுச் செலவு ஆகியவைகள் நிதிக்கொள்கையின் கருவிகளாகும்.

36. மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை?

1. பரந்து காணப்படுதல் :

◆ எல்லா நுகர்வோர்களும் அவர்கள் ஏழை அல்லது பணக்காரர்களாக இருந்தாலும் மறைமுக வரிகளை செலுத்த வேண்டும்.

◆ மறைமுக வரியை அனைவரும் செலுத்துகின்றனர்.

2. சமத்துவம் :

◆ ஆடம்பர பொருட்கள் மீது அதிக வரி சுமத்தப்படுகிறது.

◆ ஆகவே மறைமுக வரி சமத்துவ விதியின் அடிப்படையில் அமைகிறது.

3. சிக்கனத் தன்மை :

◆ உற்பத்தியாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும் வரியை வசூலித்து அரசுக்கு செலுத்துவதால் வசூலிப்பதற்கான செலவு குறைகிறது.

4. உடலுக்கு தீங்கான பொருட்களின் நுகர்வை குறைக்கிறது :

◆ அரசானது உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்கள் மீது மறைமுக வரியை அதிகமாக விதிக்கிறது.

◆ எ.கா. புகையிலை, மது போன்றவை மீதான வரி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. வசதியானது :

◆ நுகர்வோர் பண்டங்களை வாங்கும்போது மறைமுக வரியை விலையுடன் சேர்த்து செலுத்திவிடுவதால், வரி செலுத்துவதை உணர்வதில்லை.

37. கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக.

1. மூழ்கும் நிதி :

◆ கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்துவது "மூழ்கும் நிதி" என்பர்.

◆ அரசு ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையை இந்நிதியில் செலுத்துகிறது.

2. கடனை மாற்றுதல் :

◆ பழைய கடனை புதிய கடனாக மாற்றப்படுவது.

◆ அதிக வட்டி கொண்ட பொதுக் கடன் குறைவான வட்டி கொண்ட பொதுக்கடனாக மாற்றப்படுகிறது.

3. வரவு செலவு திட்ட உபரி :

◆ உபரி வரவு செலவு திட்டத்தில் உள்ள உபரியை, கடனை திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும்.

4. பகுதியாகச் செலுத்துதல் :

◆ அரசு பொதுக்கடனை சம வருடாந்திர தவணைகளாக செலுத்துகிறது.

◆ இது பொதுக் கடனைச் செலுத்தும் மிக சுலபமான முறையாகும்.

5. கடன் மறுப்பு :

◆ அரசு ஏற்கனவே செலுத்துவதாக உறுதியளித்த கடனை மறுப்பது கடன் மறுப்பு ஆகும்.

◆ அரசு கடனை திரும்ப செலுத்தாது, அதனை அழிப்பதாகும்.

38. நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை? விளக்குக.

1. வரி விதித்தல் :

◆ வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது.

◆ வரிகள் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கும்.

◆ பணவீக்கத்தை கட்டுப்படுத்த வரியை அதிகப்படுத்த வேண்டும்.

◆ மந்த காலத்தில் வரிகள் குறைக்கப்படவேண்டும்.

2. பொதுச் செலவு :

◆ பொதுச் செலவு மக்களின் கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும்

◆ இதனால் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது.

3. பொதுக்கடன் :

◆ அரசு, கடன் மூலம் பொது மக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது.

◆ பின்னர் மக்களுக்கு திரும்ப வட்டியோடு செலுத்தப்படுகிறது.

39. கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக.

1. சுதந்திரம் :

◆ ஒவ்வொரு அரசும் வருவாய் ஆதாரங்கள், வரி விதிப்பதற்கான அதிகாரம், பணத்தை கடன் வாங்குவது மற்றும் செலவினை சமாளிப்பது போன்றவை பற்றி தன்னாட்சி பெற்றிருக்க வேண்டும்.

2. சமத்துவம் :

◆ மாநிலங்கள் நியாயமான வருவாய் பங்கினை பெறும் வண்ணம் வளங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும்.

3. ஒரே மாதிரியான தன்மை :

ஒவ்வொரு மாநிலமும்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

கூட்டாட்சி நிதிக்கு சம வரி செலுத்துதல்களை செய்ய வேண்டும்.

4. போதுமான வளங்களைப் பெற்றிருத்தல் :

◆ மத்திய மற்றும் மாநில அரசுகள், அவற்றின் பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் போதுமான அளவில் வளங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

5. நிதி வசதி :

◆ கூட்டரசு நிதி முறையில், மத்திய மற்றும் மாநில அரசுகள் புதிய வரி ஆதாரங்களை தங்களது நிதி தேவைக்கேற்றவாறு பெருக்கி கொள்ள முடியும்.

40. வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பலவகை பற்றாக்குறைகளை விளக்குக.

1. வருவாய் பற்றாக்குறை :

◆ அரசின் வருவாய் செலவினம், வருவாய் வரவை விட அதிகமாக இருந்தால் அது வருவாய் பற்றாக்குறை எனப்படும்.

◆ வருவாய் பற்றாக்குறை = மொத்த வருவாய் செலவினம் - மொத்த வருவய் வரவுகள்

2. வரவு செலவு திட்டப் பற்றாக்குறை:

◆ வருவாய் மற்றும் மூலதனக் கணக்குகளின் மொத்த வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியே வரவு செலவு திட்ட பற்றாக்குறையாகும்.

◆ வரவு செலவு திட்ட பற்றாக்குறை = மொத்த செலவு - மொத்த வரவு

3. நிதிப் பற்றாக்குறை :

◆ நிதிப் பற்றாக்குறை என்பது வரவு செலவு பற்றாக்குறையைவிட அதிகமானது.

◆ நிதி பற்றாக்குறை = வரவு செலவு திட்ட பற்றாக்குறை - அரசின் அங்காடி கடன்களும் ஏனைய பொறுப்புக்களும்

4. முதன்மை பற்றாக்குறை :

◆ முதன்மை பற்றாக்குறை என்பது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்துதலை கழித்த பின் உள்ள பற்றாக்குறையாகும்.

◆ முதன்மைப் பற்றாக்குறை = நிதிப்பற்றாக்குறை - வட்டி செலுத்துதல்

41. அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான

1. மக்கள் தொகை வளர்ச்சி :

◆ மக்கள் தொகை வளர்ச்சியினால் கல்வி, ஓய்வூதியம், சமூக பாதுகாப்பு மற்றும் உடல்நலம் போன்றவற்றால் பொதுச்செலவு அதிகமாகிறது.

2. பாதுகாப்புச் செலவு :

◆ இராணுவ தளவாடங்களை நவீனமயமாக்குவதால் இராணுவ செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது.

3. அரசு மானியங்கள்:

◆ இந்திய அரசானது பல இனங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.

◆ மானியங்களுக்கான தொகை மிக அதிகமாக இருப்பதால் பொதுச் செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது.

4. கடன் சேவைகள் :

◆ அரசானது அதிகமான அளவில் உள்நாடு மற்றும் அயல்நாடுகளில் கடன் பெற்றுள்ளன.

◆ அரசு அக்கடனை திருப்பி செலுத்துவதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது.

5. வளர்ச்சித் திட்டங்கள் :

◆ அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்க மேற்கொள்கிறது தேவைப்படுகிறது.

◆ இந்த வளர்ச்சி திட்டங்களுக்கு அதிக செலவாகிறது.

www.Padasalai.Net www.CBSEtips.in



## அத்தியாயம் - 10

# சுற்றுச்சூழல் பொருளியல்

1. "என்வைரான்மென்ட்" (Environment) என்ற வார்த்தை ________ என்ற பொருள் கொள்ளும் எந்த பிரஞ்ச் வார்த்தையிலிருந்து தோன்றியது?
   அ) என்வைரான்
   ஆ) என்வைரான்ஸ்
   **இ) என்வைரோனியோ**
   ஈ) என்வைர்

2. "உயிர்சார்" (biotic) என்ற வார்த்தையின் பொருள் என்ன?
   **அ) உயிர் வாழ்வன**
   ஆ) உயிரற்றவை
   இ) பருப்பொருள்
   ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

3. சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி?
   அ) அயனோஸ்பியர்
   ஆ) லித்தோஸ்பியர்
   **இ) பையொஸ்பியர்**
   ஈ) மெஸ்ஸீ[லீஸ்பியர்

4. "பொருள்சார் சமநிலை அணுகுமுறையை" நிறுவியவர் யார்?
   அ) தாமஸ் மற்றும் பிக்கார்டி
   **ஆ) ஆலன் நீஸ் மற்றும் ஆர்.வி. அய்யர்ஸ்**
   இ) ஜோன் ராபின்சன் மற்றும் ஜெ.எம். கீன்ஸ்
   ஈ) ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட் சேம்பாலின்

5. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை ________?
   அ) சந்தைப் பொருட்கள்
   **ஆ) சந்தையிடா பொருட்கள்**
   இ) இரண்டும்
   ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

6. தூய பொதுப்பொருட்களில், நுகர்ச்சி என்பது ________.
   அ) போட்டி உடையது
   **ஆ) போட்டியற்றது**
   இ) இரண்டும்
   ஈ) மேற் சொன்ன எதுவுமல்ல

7. சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படை கருத்துக்களில் ஒன்றும், சந்தை தோல்விக்கு காரணமானதும் ________ ஆகும்.
   அ) நேர்மறை புற விளைவுகள்
   **ஆ) எதிர்மறை புற விளைவுகள்**
   இ) இரண்டும்
   ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

8. வெளிக் காற்றுமாசுவுக்கு ________ காரணமாகும்.
   அ) சூடாக்குவதும் சமைப்பதும்
   ஆ) பாரம்பரிய அடுப்புகள்
   **இ) மோட்டார் வாகனங்கள்**
   ஈ) மேற்கண்ட அனைத்தும்

9. கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது.
   **அ) மோட்டார் வாகனங்கள்**
   ஆ) தொழில் செயற்பாடுகள்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இ) நிலையாக எரிபொருள் எரிக்கும் கருவிகள்
ஈ) மேற்சொன்ன எதுவிமில்லை

10. பின்வரும் எது உலக வெப்பமயமாதலுக்கு காரணம்?
அ) பூமியின் ஈர்ப்பு விசை
ஆ) ஆக்ஸிஜன்
இ) மையநோக்கு விசை
**ஈ) வெப்பநிலை அதிகமாதல்**

11. பின்வரும் எந்த ஒன்று புற ஊதாக் கதிர்களிலிருந்து மனிதர்களை பாதுகாக்கிறது?
அ) UV - A
ஆ) UV - C
**இ) ஓசோன் படலம்**
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

12. உலக வெப்பமயமாதல் ________ என்றும் குறிப்பிடப்படுகிறது.
அ) சூழலியல் மாறுபாடு
**ஆ) பருவநிலை மாறுபாடு**
இ) வளிமண்டல மாறுபாடு
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

13. பின்வரும் எந்த ஒன்று உலக வெப்பமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு?
**அ) கடல் மட்டம் உயர்தல்**
ஆ) மழைப் பொழிவு மாறுதல்
இ) பாலைவனம் அதிகரித்தல்
ஈ) மேற்சொன்ன அனைத்தும்

14. சத்துக்களை அதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது?
**அ) யூட்ரோபிகேசன்**
ஆ) சத்துக்களை கட்டுப்படுத்துதல்
இ) செறிவூட்டல்
ஈ) சிஸ்டோஸ்மியாசிஸ்

15. மண்மாசுவிற்கு முதல்நிலை காரணம்
அ) பூச்சியை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்
ஆ) நில மேம்பாடு
இ) விவசாய நிலங்கள் வழியாக
**ஈ) இரசாயன உரங்கள்**

16. வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது?
**அ) மரம் வெட்டும் தொழில்**
ஆ) இயற்கை வன அழிவு
இ) நிலத்தை சமப்படுத்துதல்
ஈ) தட்பவெப்பநிலை சமப்படுத்துதல்

17. மின்னணு கழிவுகள் ________ என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்றன.
அ) திடக் கழிவுகள்
ஆ) குப்பைக் கழிவுகள்
**இ) இ - கழிவுகள்**
ஈ) மருத்துவமனைக் கழிவுகள்

18. அமிலமழைக் ________ விளைவுகளில் ஒன்று.
**அ) காற்று மாசு**
ஆ) நீர் மாசு
இ) நில மாசு
ஈ) ஒலி மாசு

19. நீடித்த வளர்ச்சி (அல்லது) வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் ________
அ) 2020
ஆ) 2025
**இ) 2030**
ஈ) 2050

20. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது?
அ) சிந்துகங்கை
ஆ) வட இந்தியா
இ) கங்கை
**ஈ) மேற்கூறிய அனைத்தும்**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

21. சுற்றுச்சூழல் என்பதன் பொருள் கூறுக.

சுற்றுச் சூழல் என்பது, நம்மை சுற்றியுள்ள அனைத்து நிலைமைகள், சூழ்நிலைகள், உயிர்கள், அல்லது உயிர் தொகுப்பு ஆகியவைகளை குறிப்பிடுவது ஆகும்.

22. சூழலியல் என்றால் என்ன?

உயிரினங்களுக்கிடையேயான பரஸ்பர உறவும், அவைகளின் சுற்றுச்சூழலையும் பற்றி படிக்கும் இயல் ஆகும்.

23. தலா (per capita) கரியமில வாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை?

சீனா, அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, ஜப்பான

24. சுற்றுச்சூழல் பொருட்கள் என்றால் என்ன? உதாரணம் கூறு.

- சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை சந்தையிடா பொருட்கள் ஆகும்.
- உதாரணம் : தூய்மையான காற்று, பொது பூங்காக்கள், ஆறுகள், மலைகள், கடற்கரை போன்றவையாகும்.

25. ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.

- ஒலித்தடைகளை ஏற்படுத்துதல்
- போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு
- ஒலி பெருக்கிகளைக் கட்டுப்படுத்துதல்

26. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.

நிலம் மற்றும் நீர் உள்ளடக்கிய பூமி மற்றும் வளிமண்டலத்தில் தற்போது அதிகரிக்கும் வெப்ப நிலையையே புவி வெப்பமயமாதல் என்கிறோம்.

27. விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.

- ஒரு விதை உரம் கலந்த களி மண்ணால் மூடிவைக்கப்பட்டு உலர்த்தப்படுகிறது
- பிறகு எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைக்கலாம்.
- இதுவே விதை பந்து ஆகும்

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

28. பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாக கூறு.

- மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கை யிலுள்ள மற்ற உயிரினங்களுடனும், உயிரற்ற பொருட்களுடனும் இணைந்துள்ளதால் அவனது வாழ்க்கை முறையை சுற்றுச்சுழலே பெருமளவு தீர்மானிக்கிறது.
- அனைத்துவிதமான உற்பத்திக்கும் ஆதாரம் இயற்கையே ஆகும்.
- இயற்கையே மூலப்பொருட்களை வளங்குகிறது, அவை உற்பத்தி செய்யப்பட்டு நுகர்வுக்கு செல்கிறது.

29. பொருள்சார் சமநிலை அணுகு முறையின் பொருள் குறிப்பிடுக.

- பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையே யான தொடர்பினை விளக்க ஆலன் நீஸ் மற்றும் ஸி.க்ஷி. அய்யர்ஸ் "பொருள்சார் சமநிலை அணுகுமுறை"யை வகுத்துள்ளனர்.
- அனைத்துவிதமான உற்பத்திக்கும் ஆதாரம் இயற்கையே ஆகும்.
- இயற்கை மூலப்பொருட்களை வளங்குகிறது, அவை உற்பத்தி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

செய்யப்பட்டு நுகர்வுக்கு செல்கிறது.

- கழிவுகளை இயற்கையில் கொட்டுகின்றனர்.
- அவை மறுசுழற்ச்சி செய்யப்படுகின்றன.
- மீண்டும் இறுதி கழிவுகள் இயற்கை சூழலிலேயே கலக்கப்படுகின்றன.
- இதனால் மூலப்பொருட்கள் தரம் குறையும். உற்பத்தி செலவு அதிகரிக்கும்

**30. பல்வகையான காற்று மாசுகளை விளக்குக.**

உட்புற காற்று மாசு :

- மனிதர்கள் வசிப்பிடத்திற்குள் தீங்குவிளைவிக்ககூடிய அசுத்தங்கள் காற்றில் கலந்திருப்பதை உட்புற காற்று மாசு என்கிறோம்.

எ.கா. திட எரிபொருட்களைக் கொண்டு சமையல் செய்வது.

வெளிப்புற காற்று மாசு :

- காற்று மண்டலத்தில் திட, திரவ, அல்லது காற்று வடிவ அசுத்தங்கள் கலந்திருப்பதே வெளிப்புற காற்றுமாசு என்கிறோம்.
- எ.கா. தொழிற்சாலைகள், மோட்டார் வாகனங்கள் வெளியிடும் புகை

**31. நீர்மாசுக்கான காரணங்கள் யாவை?**

1. கழிவு நீர் மற்றும் தேவையற்ற நீர் வெளியேற்றம் :

- சாக்கடைத் தண்ணீர், கழிவு நீர் குப்பைகள், விவசாயக் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுவதால் நீர் மாசடைகிறது.

திடக் கழிவுகள் குவித்தம் :

- திடப்பொருள் கழிவுகளை நீர் நிலையில் கொட்டுதல், நீர் நிலையுடன் கலந்துவிடுமாறு விட்டுவிடுதல்.

அமில மழை :

காற்று மாசுவினால் அமில மழை ஏற்பட்டு நீர் மாசு எற்படுத்துகின்றது.

புவி வெப்பமடைதல் :

புவி வெப்பமடைதல் காரணமாக நீரின் வெப்பநிலை அதிகரித்து நீர்வாழ் உயிரினங்களைப் பாதிக்கிறது.

**32. இ- கழிவுகள் என்பதன் பொருள் தருக.**

- தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் E- கழிவுகள் எனப்படும் மின்னணுக் கழிவுகள் ஏற்படுகின்றன.
- குளிர்சாதனப் பெட்டிகள், AC, கைபேசி, கணினிகள் போன்றவற்றை மின்னணுச் சாதனங்கள் ஆகும்.
- கணினிகள், VCR, DVD போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை கழிக்கும்போதோ அல்லது மறுசுழற்சி செய்யும்போதோ E - கழிவுகள் தோன்றும்.

**33. நில மாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களை குறிப்பிடுக.**

நில மாசு :

“கழிவுகளைக் கொட்டுவதால் நிலம் தரக்குறைவாக மாறும் சுற்றுச்சூழலில் கொட்டப்படும் பல திட, திரவ, வாயுப் பொருட்கள் நிலத்தின் தன்மையை கொடுத்துவிடுதல் நிலமாக ஆகும்”.

நிலமாசுவிற்கான காரணங்கள் :

காடுகளை அழித்தல் :

காடுகளை அழித்து நிலமாக மாற்றுவது சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முக்கிய காரணியாகும்.

விவசாய நடவடிக்கைகள் :

விவசாயிகள் அதிக நச்சுத் தன்மைக் கொண்ட உரம் மற்றும் பூச்சி மருந்துகளை பயன்படுத்துகின்றனர். இதனால் நிலம் மாசு அடைகின்றது.

www.Padasalai.Net www.CBSEtips.in


சுரங்கத் தொழில்கள்:
கனிமங்களை வெட்டி எடுக்கும் போது நிலம் மாசு அடைகின்றது.


34. குறிப்பு வரைக :
அ) பருவநிலை மாற்றம்
ஆ) அமில மழை

(அ) பருவநிலை மாற்றம் :
வளிமண்டலத்தில் பசுமைக் குடில் வாயுக்களின் அளவுகள் வளர்ந்துகொண்டே செல்வதால் நீண்ட காலத்தில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளே 'கால நிலை மாற்றம்' எனப்படும்.

(ஆ) அமில மழை :
- காற்று மாசுவின் விளைவே அமில மழை ஆகும்.
- தொழிற்சாலை, வாகனங்கள், போன்றவற்றின் மூலம் வெளியிடும் வாயுக்கள்.

ஐந்து மதிபெண் வினாக்கள்

35. மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.
- சுற்றுச்சூழல் தரம் என்பது சுற்றுச்சூழல் பண்புகளின் தொகுப்பாகும்.
- உற்பத்தி முறைக்குள் உள் நுழையும் எந்த ஒன்றும் பிறகு வெளியேறித்தான் ஆகவேண்டும் - இயற்பியல் விதி




- இவிதியை ஆதாரமாக கொண்டு சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்க்குமான தொடர்பை இவ்வரைப்படத்தில் விளக்கப்பட்டுள்ளது.
- இயற்கை வளங்களின் குறைவும் தேசிய வருமானத்தில் இயற்கை வளங்களின் பங்களிப்பும் தற்பொழுதுள்ள தேசிய வருவாய் கணக்கீட்டில் அளவிடப்படுவதில்லை.

36. புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.
புற விளைவுகள் இலக்கணம் :
- தனி நபர்களின் நுகர்ச்சி அல்லது உற்பத்தி ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக இதில் தொடர்பில்லாத மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு அல்லது பயன் புற விளைவுகள் எனப்படும்.

நேர்மறை நுகர்ச்சி புறவிளைவு
- ஒருவருடைய நுகர்வு மற்றவருக்கு சாதகமான விளைவினை ஏற்படுத்தும்
- உதாரணம் : ஒரு சிலர் ஏற்பாடு செய்த தனியார் பாதுகாப்பு மற்றவர்களுக்கும் செலவில்லாமல் பாதுகாப்பை ஏற்படுத்துவது.

எதிர்மறை நுகர்ச்சி புறவிளைவு
- ஒருவருடைய நுகர்வு மற்றவருக்கு பாதகமான விளைவினை ஏற்படுத்தும்
- உதரணம் : ஒருவர் ஒலிபெருக்கியை அதிக சத்தத்தில் பாடவிடுகிறார்
- அதனால் அருகில் உள்ளவருக்கு ஒலி மாசு தொந்தரவினை ஏற்படுத்துகிறது.

நேர்மறை உற்பத்தி புற விளைவு


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- ஒருவருடைய உற்பத்தி மற்றொருவருக்கு சாதகமான விளைவினை ஏற்படுத்துவது.
- உதாரணம் ஒருவர் தேனி வளர்ப்புத் தொழில் செய்கிறார்.
- அருகில் மற்றொருவர் பழ மரங்களை வளர்த்து வருகிறார்.
- அவருக்கு தேனிக்களால் ஏற்படும் மகரந்த சேர்க்கை காரணமாக அதிகமான பழ விளைச்சலும் வருமானமும் கிடைப்பது.

**எதிர்மறை உற்பத்தி புறவிளைவு**

- ஒருவருடைய உற்பத்தி மற்றவருக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவது.
- தொழிற்சாலைகளில் வெளியேறும் காற்று மாசு மற்றவற்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

## 37. நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

**விளக்கம்:**

இப்பொழுதுள்ள சந்ததியினருக்கு மட்டுமன்றி, எதிர்காலச் சந்ததியினருடன் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடான நீடித்த நிலையான மேம்பாடு எனப்படும்.

**முக்கியத்துவம் :**

தற்பொழுதுள்ள தலைமுறை, முன்னோர் விட்டு சென்ற இயற்கை வளங்களை முழுவதுமாக பயன்படுத்தாமல் பின்வரும் சந்ததினருக்கு விட்டுச் செல்ல வேண்டும்.

**நோக்கங்கள் :**

1. எல்லா வடிவங்களிலும் எல்லா இடத்திலும் வறுமையை ஒழித்தல்.
2. பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் பாலின சமன்பாட்டை சாதித்தல்.
3. குடிநீரும் சுகாதாரமும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.
4. நாடுகளுக்குள்ளேயும், நாடுகளுக்கு இடையேயும் உள்ள சமமின்மையை அகற்றுதல்.
5. நீடித்த நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வினை உறுதிப்படுத்துதல்.
6. தட்வெப்ப மாற்றங்களையும் அவற்றின் தாக்கங்களையும் குறைத்தல்.
7. சமுத்திரங்கள், கடல்கள், கடல் வளங்கள் ஆகியவறை பாதுகாத்தல்.
8. நீடித்த, நிலையான வளர்ச்சிக்காக உலக ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல்.

## 38. காற்று மாசுபடுதலின் வரைவிலக்கணம் கூறி, காற்று மாசுபடுதலின் காரணங்களை விளக்குக.

**இலக்கணம் :**

"சுற்றுச்சூழல் சொத்து, தாவரங்கள், உயிரிகள் மற்றும் மனித இனம் ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கும் அளவுக்கு காற்று மண்டலத்தில் திட, திரவ அல்லது காற்று வடிவப் பொருள் கலந்திருப்பதையே காற்று மாசுபடுதல்"

**காரணங்கள்**

**1. வாகனங்கள் வெளியிடும் புகை**

வாகனங்கள் கரியமில வாயு கலந்த புகையை வெளியிடுவதால் வளிமண்டலத்தில் ஆக்ஸிஜன் அளவு குறைந்து காற்று மாசடைகிறது.

**2. தொழிற்சாலை வெளியேற்றும் புகை**

தொழிற்சாலைகள் வெளியிடும் புகை காற்று மண்டலத்தை அசுத்தமாக்குகிறது.

**3. இயற்கை காரணங்கள்**

எரிமலை, காட்டுத்தீ, தூசு புயல் ஆகியவற்றால் காற்று மாசடைகிறது.

**4. வீட்டு நடவடிக்கைகள்**

சமயலுக்கு பயன்படும் விறகு, கொசு கொல்லி, வாசனை திரவியங்கள் ஆகியவை காற்றில் நச்சு கலக்க காரணமாகிறது.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# அத்தியாயம் 11

# பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல்

1. "வளர்ச்சியுடன் கூடிய மறுபகிர்வு" கீழ்கண்ட எந்த அணுகுமுறையின் புகழ்பெற்ற முழக்கம் இது
   அ) பழமையான அணுகுமுறை
   **ஆ) புதிய பொது நல அணுகுமுறை**
   இ) தொழில் அணுகுமுறை
   ஈ) இவற்றில் எதுவுமில்லை

2. பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாதவை எது?
   அ) வளர்ந்த நாடுகளை பற்றியது
   ஆ) படிப்படியான மாற்றம்
   இ) எண்களின் அடிப்படையில் அமைந்தது
   **ஈ) விரிவான கருத்து**

3. கீழ்க்கண்டவற்றுள் எவை பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்?
   **அ) வறுமையின் நச்சு சுழற்சி**
   ஆ) பெரும் நுகர்வை அதிகப்படுத்துதல்
   இ) தொழில்சாலைகள் வளர்ச்சி
   ஈ) அதிக அளவில் நகர்மயமாதல்

4. கீழ்க்கண்டவற்றுள் எந்த பொருளாதாரம் சாராத காரணி, பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது?
   அ) இயற்கை வளங்கள்
   **ஆ) மனிதவளங்கள்**
   இ) மூலதன உருவாக்கம்
   ஈ) பன்னாட்டு வாணிபம்

5. பொருளாதார வளர்ச்சி..................ஐ அளவிடுகிறது.
   அ) உற்பத்தித் திறன் வளர்ச்சி
   ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு
   **இ) உற்பத்தி அதிகரிப்பு**
   ஈ) இவை எதுவுமில்லை

6. அளிப்பு பக்கத்திலிருந்து இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியின்படி ஏழைநாடுகள் ஏழையாகவே இருக்கின்றன. ஏனென்றால்
   அ) சேமிப்பு குறைவாகவே உள்ளது
   ஆ) முதலீடு குறைவாகவே உள்ளது
   இ) திறன் மிக்க அரசு இல்லை
   **ஈ) அ மற்றும் ஆ**

7. கீழ்கண்ட எந்த திட்டத்தில், வேளாண்மை மற்றும் கிராமப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது?
   அ) மக்கள் திட்டம்
   ஆ) பாம்பே திட்டம்
   **இ) காந்தியத் திட்டம்**
   ஈ) விஸ்வேசுவரய்யா திட்டம்

8. கீழ்கண்ட திட்டங்களை அவை முன்மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலகிரம வரிசைப்படி தொகுத்து விடையைத் தேர்ந்தெடுக்கவும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



i) மக்கள் திட்டம்
ii) பாம்பே திட்டம்
iiii) ஜவஹர்லால் நேரு திட்டம்
iv) விஸ்வேசுவரய்யா திட்டம்
அ) i) ii) iii) iv)
**ஆ) iv) iii) ii) i)**
இ) i) ii) iv) iii)
ஈ) ii) i) iv) iii)

9. எம். என். ராய் வழங்கியத் திட்டம் கீழ்கண்டவைகளில் எது?
அ) காங்கிரஸ் திட்டம்
**ஆ) மக்கள் திட்டம்**
இ) பாம்பே திட்டம்
ஈ) இவை எதுவுமில்லை

10. சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு
**அ) பிரான்சு**
ஆ) ஜெர்மனி
இ) இத்தாலி
ஈ) ரஷ்யா

11. குறுகிய காலத் திட்டத்தின் இன்னொரு பெயர்.
**அ) கட்டுப்படுத்தும் திட்டம்**
ஆ) கட்டுபாட்டை நீக்கும் திட்டம்
இ) சுழல் திட்டம்
ஈ) சுழற்சியற்ற திட்டம்

12. நீண்டகாலத் திட்டத்தின் மற்றொரு பெயர்
அ) மேம்பாட்டுத் திட்டம்
ஆ) மேம்பாடு இல்லா திட்டம்
**இ) முன்னோக்குத் திட்டம்**
ஈ) முன்னேக்கமற்ற திட்டம்

13. நீண்ட காலத்திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் ________ மாற்றமாகும்.
அ) நிதி
ஆ) வேளாண்மை
இ) தொழில்
**ஈ) கட்டமைப்பு**

14. சர்வோதாயத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார்?
அ) மஹாத்மா காந்தி
**ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்**
இ) எஸ். என். அகர்வால்
ஈ) எம். என். ராய்

15. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு ________
**அ) 1950**
ஆ) 1951
இ) 1947
ஈ) 1948

16. "அடிமைத்தனத்திற்கான பாதை" என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?
**அ) பிரடெரிக் ஹேயக்**
ஆ) ஜெ. ஆர். ஹிக்ஸ்
இ) டேவிட் ரிக்கார்டோ
ஈ) டி.ஆர். மால்தஸ்

17. முன்னோக்குத் திட்டத்தின் மற்றொருப் பெயர் ________.
அ) குறுகிய கால திட்டமிடல்
ஆ) நடுத்தரக்காலத் திட்டமிடல்
**இ) நீண்ட காலத் திட்டமிடல்**
ஈ) இவை எதுவுமில்லை

18. நிதி ஆயோக் கீழ்க்கண்ட எதன் மூலமாக அமைக்கப்பட்டது?
அ) குடியரசு தலைவரின் அவசர ஆணை
ஆ) குடியரசு தலைவரின் சுற்றறிக்கை



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**இ) அமைச்சரவைத் தீர்மானம்**

ஈ) இவை எதுவுமில்லை

19. நிதி ஆயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம்.

அ) National Institute for Transport in India

ஆ) National Institute for Trade in India

இ) National Institute for Tomorrow's India

ஈ) National Institute for Transforming India

20. சட்டப்பூர்வமாக நிதி ஆயோக்கின் தலைவராக கீழ்க்கண்ட எந்தப் பதவியில் உள்ள ஒருவர் செயல்படுவார்?

**அ) பிரதமர்**

ஆ) குடியரசுத் தலைவர்

இ) உதவி குடியரசுத் தலைவர்

ஈ) நிதி அமைச்சர்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

21. பொருளாதார முன்னேற்றம் வரையறு.

- நாட்டில் பொருளாதார கட்டமைப்பில் நிகழும் நல்ல மாற்றங்களை முன்னேற்றம் எனலாம்.
- விரைவான வளர்ச்சி, வருவாய் ஏற்றத்தாழ்வை குறைத்தல், வறுமை ஒழிப்பு இவையும் பொருளாதார முன்னேற்றமாகும்.

22. பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக.

நாட்டின் மொத்த உற்பத்தி, தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி, மக்கள் நலன், சமூக குறியீடுகள்

23. பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக.

| பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|
| வளர்ந்த நாடுகளின் பொருளாதார பிரச்சனைகளை கையாளுகிறது. | வளரும் நாடுகளின் பிரச்சனைகளைக் கையாளுகிறது |
| எண்ணிக்கை அடிப்படை யிலானது | எண்க்கை மற்றும் தர அடிப்படை யிலானது. |
| குறுகிய எல்லையுடையது | விரிவான பொருள் கொண்ட சொல்<br>முன்னேற்றம் = வளர்ச்சி + மாற்றம் |

24. மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்புடன் நிகர வெளிநாட்டு வருமானமும் சேர்க்கப்பட்டதே மொத்த நாட்டு உற்பத்தி ஆகும்.

25. பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.

ராபின்ஸ் கூற்றுப்படி, பொருளாதாரத் திட்டமிடல் என்பது "தனியார் உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது". ஆகும்.

26. பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகளை பட்டியலிடுக.

பொது சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு மற்றும் வீட்டு வசதி ஆகியவை ஆகும்.

27. நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.

- ஜனவரி 1, 2015 அன்று அமைச்சரவை குழுவின்


தீர்மானத்தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப்பட்டது.

- இந்திய பிரதமரே நிதி ஆயோக் தலைவரானார்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

**28. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுப்படுத்து.**

வறுமையின் நச்சு சுழற்சி :




- வறுமையின் நச்சு சுழற்சி தேவைப்பக்கத்திலிருந்தும், அளிப்பின் பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது.

அளிப்பு பக்கம்

- குறைவன உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு குறைந்து முதலீடு குறைந்து உற்பத்தி திறன் குறைந்து வருமானமும் குறைகிறது.

தேவை பக்கம்

- குறைவான உண்மை வருமனம் காரணமாக தேவை குறைந்து முதலீடு குறைந்து உற்பத்தி திறன் குறைந்து வருமனத்தை குறைக்கும்.

**29. பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?**

- மனித வளம்
- தொழில் நுட்ப அறிவு
- அரசியல் சுதந்திரம்
- சமூக அமைப்பு
- ஊழலற்ற நிர்வாகம்
- முன்னேற்றம் அடைவதற்கான விருப்பம்
- சூதாட்ட முதலாளித்துவம்

**30. வறுமையின் நச்சு சுழற்சியை எப்படித் தடுப்பது?**

- அளிப்பு பக்கத்தில் வறுமையின் நச்சு சுழற்சி குறைவான சேமிப்பு மற்றும் குறைவான முதலீட்டினால் ஏற்படுகிறது.
- ஆகவே பின்தங்கிய நாடுகளில் முதலீட்டையும், மூலதன ஆக்கத்தையும் அதிகரிக்க வேண்டும்
- தேவை பக்கத்தில் வறுமை நச்சு சுழற்சியை உடைத்தெரிய, நர்க்ஸ் சரிசம வளர்ச்சி உத்தியை பரிந்துரை செய்கிறார்.
- அனைத்துத் தொழில்களின் சரிநிகர் சமமான வளர்ச்சியின் மூலம் தேவையின் பக்கத்தில் இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியைத் தடுக்க முடியும்.

**31. இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுக.**

எம். விஸ்வேஸ்வரய்யா (1934) :

- தனது ஆலோசனையாக பத்தாண்டுத் திட்டமொன்றை அவர் எழுதிய "இந்திய பொருளாதார திட்டமிடல்" என்ற புத்தகத்தில் விளக்கியுள்ளார்.

ஜவஹர்லால் நேரு (1938) :

- "தேசியத் திட்டக்குழு" ஒன்றை அமைத்தார்.
- இரண்டாம் உலகப் போர் காரணமாக நேருவின்

www.Padasalai.Net www.CBSEtips.in



முயற்சிகள் நின்றுவிட்டன.

பாம்பே திட்டம் (1940) :
மும்பையின் முன்னணி தொழிலதிபர்கள் 15 ஆண்டுகளுக்கான பாம்பே திட்டம் என்ற திட்டத்தை 1938 ல் முன்மொழிந்தனர்.

எஸ்.என். அகர்வால் (1944) :
இவர் "காந்தியத் திட்டம்" என்ற திட்டத்தை 1944ல் வழங்கினார்.

எம்.என்.ராய் (1945):
மக்கள் திட்டம் என்பதை வடிவமைத்தார்

ஜெயப்பிரகாஷ் நாரயணன் (1950) :
இவர் "சர்வோதயத் திட்டம்" ஒன்றை முன்மொழிந்தார்.

**32. திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகளை விவரி.**

1. வேளாண்மையை அகற்றுதல் :
பின்தங்கிய நாடுகளில் வேலையின்மை மற்றும் மறைமுக வேலையின்மையை அகற்ற திட்டமிடல் அவசியமாகும்.

2. வேளாண்துறை மற்றும் தொழிற்துறை முன்னேற்றம் :

- வேளாண் துறை வளர்ச்சியினால் தொழில் துறைக்கு தேவையான மூலப்பொருள் கிடைக்கும்.
- இதனால் வேளாண்மையுடன் தொழில்துறையும் வளரும்.

திட்டமிடல் வறுமையையும் ஏற்றத் தாழ்வையும் குறைக்கும் :
திட்டமிடல் பின்தங்கிய நாடுகளின் நாட்டு வருமானம் மற்றும் தலா வருமானத்தை அதிகரிக்க செய்து வறுமையையும், ஏற்றத்தாழ்வுகளை குறைக்கச் செய்கிறது.

**33. செயல்பாட்டுத் திட்டமிடலுக்கும் அமைப்புமுறைத் திட்டமிடலுக் குமிடையேயான வேறுபாடுகளை எழுதுக.**

செயல்பாட்டுத் திட்டம்
ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதார சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல் பணிகள் திட்டமிடலாகும்.

கட்டமைப்பு திட்டமிடல்
பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களை செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்புத் திட்டமிடலாகும். இத்திட்டமிடல் பெரும்பாலும் பின்தங்கிய நாடுகளில் காணப்படுகிறது.

**34. நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?**

1. கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி
2. நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்
3. பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்
4. தொலை நோக்கு மற்றும் காட்சித் திட்டமிடல்
5. நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்
6. உகந்ததாக்குதல்
7. சச்சரவுத் தீர்த்தல்
8. வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

**35. பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்.**

1. இயற்கை வளங்கள் :

- முன்னேற்றத்திற்கு தேவைப்படும் அளவுக்கு ஒரு நாடு இயற்கை வளங்களை பெற்றிருக்க வேண்டும்.
- வளங்கள் பற்றாக்குறையாக உள்ள



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



நாடு விரைவாக முன்னேற இயலாது

- இந்தியாவில் அதிக அளவில் இயற்கை வளங்கள் பெற்றிருப்பினும் முன்னேற்றம் குறைந்த நாடாக உள்ளது.

2. மூலதன உருவாக்கம் :

- மூலதனம் பொருளாதாரத்தின் அனைத்துச் செயல்பாட்டிற்கும் அடிப்படையானதாகும்.
- தொழிலாளர்களின் உற்பத்தி திறனை உயர்த்தி வருமானத்தை அதிகரிக்க மூலதன ஆக்கம் உதவுகிறது.

3. சந்தையின் அளவு :

சந்தை அளவானது பெரிய அளவில் இருந்தால் கூடுதலான உற்பத்தி, அதிக வேலைவாய்ப்பு மற்றும் தேசிய தலா வருமான உயர்வு ஆகியவற்றைத் தூண்டி பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுகிறது.

4. விற்பனைக்குரிய உபரி :

- வேளாண் துறையில் குடும்பத்திற்கான நுகர்வுத் தேவையை விட கூடுதலாக செய்யப்படும் உற்பத்தியை விற்பனைக்குரிய உபரி என்கிறோம்.
- இதனை சந்தையில் விற்று வருமானம் ஈட்டலாம்.

5. பன்னாட்டு வாணிகம் :

பன்னாட்டு வாணிகத்தில் சாதகமான சூழ்நிலை இருந்தால் ஒரு நாடு போதுமான அளவு அந்நிய செலவாணியை கையிருப்பில் வைக்க முடியும்.

36. பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி.

1. மக்களாட்சி மற்றும் சர்வாதிகார திட்டம்

மக்களாட்சி திட்டம் :

திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயல்படுத்தலில் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் திட்டமிடலே மக்களாட்சித் திட்டமிடல் ஆகும்.

சர்வாதிகாரத் திட்டம் :

சர்வாதிகாரத் திட்டமிடலில் நுகர்வு, பரிவர்தனை மற்றும் விநியோகம் ஆகிய அனைத்தும் அரசு கட்டுப்பாட்டிலிருக்கும்.

2. மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடல்

மைய திட்டம் :

- திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக் குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- திட்டகுழுவே திட்டம் தீட்டும்.

பரவலாக்கப்பட்ட திட்டம் :

உள்ளூர் அமைப்புகள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள், திட்டங்களைத் தீட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை செய்யும்.

3. வழிகாட்டும் திட்டமிடல் மற்றும் தூண்டும் திட்டமிடல்

வழிகாட்டும் திட்டம் :

திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி, செயல்படுத்தினால் அது வழிகாட்டுதல் திட்டம் ஆகும்.

தூண்டும் வாணிகம் :

திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை பல்வேறு நிதியியல் மற்றும் பணவியல் வழிமுறைகள் மூலம் மக்களால் மேற்கொள்ளப்படுவதே தூண்டும் திட்டமிடல் என்கிறோம்.

4. குறுகிய, நடுத்தர, நீண்டகால திட்டமிடல்

குறுகிய காலத் திட்டம் :

ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகிய



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



காலத் திட்டம் ஆகும்.

நடுத்தரத் திட்டம் :

மூன்றிலிருந்து ஏழு ஆண்டு காலத்தில் முடிவடையும் திட்டங்கள் நடுத்தரக் காலத்திட்டங்கள் ஆகும்.

நீண்டகால திட்டம் :

பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டங்கள் நீண்டகாலத் திட்டமிடல் ஆகும்.

5. பணிகள் திட்டமிடல் மற்றும் கட்டமைப்புத் திட்டமிடல்

பணிகள் திட்டம் :

பொருளாதார சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல் பணிகள் திட்டமிடலாகும்.

கட்டமைப்பு திட்டம் :

பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களை செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்புத் திட்டமாகும்.

37. திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்.

1. தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை :

- தன் விருப்பம் போல் செயல்பட இயலாததால் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது.
- திட்டமிட்ட பொருளாதாரத்தில் சிக்கலான முடிவுகளை மத்திய திட்டக்குழு எடுக்கிறது.
- இது நுகர்வோர், உற்பத்தியாளர் மற்றும் பனியாளர்களை கட்டுப்படுத்துகிறது.

2. தன் முனைப்புக் குறைதல் :

மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில் நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்துதல் மற்றும் புதுமைகளை புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது.

அ) தனியார் உரிமை இல்லாதது, இலாப நோக்கை குறைத்து தொழில் முனைவோர் திறம்பட முடிவு எடுப்பதையும், இடர் எதிர்நோக்குதலையும் குறைக்கிறது.

ஆ) திட்டமிடல் பொருளாதாரத்தில் அனைவருக்கும் சமமான பலன் வழங்கப்படுவதால் எவரும் இடர்பாடுகளை ஏற்று புதிய நிறுவனத்தை துவக்க முன்வர மாட்டார்கள்

இ) உயர் பதவியில் உள்ள அலுவலர்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் போக்கு திட்டமிடலில் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.

3. அதிகமான நிர்வாகச் செலவு

திட்டமிடலில் செலவிடும் தொகை அடையவுள்ள பலனைவிட அதிகமாக இருக்கிறது.

4. முன்கணிப்பதில் உள்ள சிரமங்கள்

திட்டமிடல் நாடுகளில் நுகர்வு மற்றும் உற்பத்தி அளவுகளை துல்லியமாக முன்கூட்டியே நிர்ணயிப்பது கடினம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# அத்தியாயம் 12

# புள்ளியியல் முறைகள் மற்றும் பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம்

1. 'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' (Statistics) என்ற வார்த்தை .......... ஆகும்.
   அ) ஒருமை
   ஆ) பன்மை
   **இ) ஒருமை மற்றும் பன்மை**
   ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

2. புள்ளியியல் எண்விவரங்களை பற்றி படிக்கும் பயன்பாட்டுக் கணிதத்தின் ஒரு சிறப்புப் பகுதி என்று கூறியவர் யார்?
   அ) ஹோராஸ் செக்ரிஸ்ட்
   ஆ) ஆர்.ஏ.ஃபிஷர்
   இ) யாலன்சூ
   **ஈ) போடிங்ட்டன்**

3. இரண்டாம்நிலை விவரங்களுக்கான ஆதாரம் .................. .அ) வெளியிடப்பட்ட விவரங்கள்
   ஆ) வெளியிடப்படாத விவரங்கள்
   இ) மேற்சொன்ன இரண்டில் ஒன்று
   **ஈ) அ மற்றும் ஆ**

4. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது .................. .
   **அ) முதல்நிலை விவரம்**
   ஆ) இரண்டாம் நிலை விவரம்
   இ) வெளியிடப்பெற்ற விவரம்
   ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

5. நேர்கோட்டு உறவினை கொண்டிருக்கும் இரு மாறிகளின் உறவினை அளவினை அளக்கும் முறைக்கு ................ பெயர்.
   அ) சரிவு
   ஆ) அச்சுவெட்டு
   **இ) உடன்தொடர்புக் கெழு**
   ஈ) ஒட்டுறவுச் சமன்பாடு

6. X மற்றும் Y மாறிகள் இரண்டும் ஒரே திசையில் மாறினால், உடன்தொடர்புக்கெழு எவ்வாறு இருக்கும்?
   **அ) நேர்மறையாக**
   ஆ) எதிர்மறையாக
   இ) 0
   ஈ) 1

7. ஒரு சிதறல் விளக்கப்படத்தில் ஒரு மாறி அதிகரித்துச் செல்லும்பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால் உடன் தொடர்புக்கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும்?
   அ) முழு நேர்மறையாக
   ஆ) முழு எதிர்மறையாக
   **இ) எதிர்மறையாக**
   ஈ) 0

8. உடன்தொடர்புக் கெழு $\gamma$-ன் அளவு எந்த எல்லைக்குள் இருக்கும்.
   அ) 0 மற்றும் 1
   ஆ) -1 மற்றும் 0
   **இ) -1 மற்றும் 1**
   ஈ) -0.5 மற்றும் 0.5

9. ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில் பயன்படுத்தியவர்.
   அ) நியூட்டன்

www.Padasalai.Net www.CBSEtips.in



ஆ) பியர்ஸன்
இ) ஸ்பியர்மேன்
**ஈ) கால்டன்**

10. ஒட்டுறவு பகுப்பாய்வுவின் நோக்கம்?
**அ) ஒரு காரணியின் மதிப்பினைக் கொண்டு அடுத்து காரணியின் மதிப்பினை கண்டறிவது.**
ஆ) சிதறல் விளக்கப்படத்தில் உள்ள புள்ளிகளுக்கு பதிலாக கோட்டினை வரைவது
இ) இரு மாறிகளும் எந்த அளவுக்கு உறவு கொண்டுள்ளன என்பதை தெரிந்து கொள்வதற்கு
ஈ) சாரா மாறியின் எதிர்பார்க்கப்படும் மதிப்பினை தெரிந்து கொள்ள சார்பு மாறியின் மதிப்பினை அளித்தல்.

11. சார்பு மாறியின் மதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக சாரா மாறிகளை பயன்படுத்தும் செயலுக்கு ................. பெயர்.
அ) உடன் தொடர்புக் குழு
ஆ) சரிவு
**இ) ஒட்டுறவு**
ஈ) பிழைக் கருத்து

12. $Y + 2 - 0.2X$ எனில், Y அச்சு வெட்டு .............. ஆகும்.
அ) −2
**ஆ) 2**
இ) 0.2x
ஈ) மேற்சொன்ன அனைத்தும்

13. $Y = \beta_0 + \beta_1 x$ என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் Y என்பது ......... .
அ) சாரா மாறி
**ஆ) சார்பு மாறி**
இ) தொடர்ச்சி மாறி
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

14. $Y = \beta_0 + \beta_1 x$ என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் x என்பது ......... .
**அ) சாரா மாறி**
ஆ) சார்பு மாறி
இ) தொடர்ச்சி மாறி
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

15. பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு?
அ) பொருளியல் மற்றும் புள்ளியியல்
ஆ) பொருளியல் மற்றும் கணிதம்
**இ) பொருளியல், கணிதம், மற்றும் புள்ளியியல்**
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

16. பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர்?
அ) ஃபிரான்ஸி கால்டன்
**ஆ) ராக்னர் ஃபிரிஸ்க்**
இ) கார்ல் பியர்சன்
ஈ) ஸ்பியர்மேன்

17. பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள் .................. .
**அ) புள்ளிவிவரம்**
ஆ) பொருட்கள்
இ) புள்ளியியல்
ஈ) கணிதம்

18. U என்பது ............... .
அ) விலகல்
ஆ) திட்டப்பிழை
**இ) பிழைக் கருத்து**
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

19. U என்பது எதைக் குறிக்கிறது?
**அ) விடுபட்ட காரணிகள்**
ஆ) திட்டப் பிழை
இ) பிழை
ஈ) தொடர்ச்சியற்ற காரணி

20. பொருளாதார அளவையியல் என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு?



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) 3 பாடங்கள்
ஆ) நான்கு பாடங்கள்
இ) 2 பாடங்கள்
ஈ) 5 பாடங்கள்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

**21. புள்ளியியல் என்றால் என்ன?**

புள்ளியியல் என்பது மதிப்பீடுகளை மற்றும் நிகழ்தகவுகளைப் பற்றிய அறிவியல் - போடிங்க்டன்

**22. புள்ளியியலின் வகைகள் யாவை?**

- விவரிப்பு புள்ளியியல்.
- உய்த்துணர்வு புள்ளியியல்.

**23. உய்த்துணர் புள்ளியியல் என்றால் என்ன?**

கூறுவின் விவரங்களை பகுப்பாய்வு செய்து அதன் பண்பினை அறிந்து கொள்வதன் மூலம் **முழுத் தொகுப்பின் விவரங்களுக்கான** பண்புகளை அறிந்து கொள்வது உயித்துணர்வு புள்ளியியல் எனப்படும்.

**24. புள்ளிவிவர வகைகள் யாவை?**

- புள்ளி விவரங்கள் இருவகைப்படும். அவை :
- இயல்பின் அடிப்படையில்
1. அளவு விவரங்கள்
2. பண்பு விவரங்கள்
- ஆதாரத்தின் அடிப்படையில்
1. முதல் நிலை விவரங்கள்
2. இரண்டாம் நிலை விவரங்கள்

**25. உடன் தொடர்பு என்பதனை வரையறு.**

உடன் தொடர்பு பகுப்பாய்வு என்பது **இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு மாறுகின்றன** என்பதை பற்றி கணக்கிடுவது ஆகும். - சர் ஃபிரான்சிஸ் கால்டன்

**26. ஒட்டுறவு என்பதனை வரையறு.**

- ஒட்டுறவு என்பது சராசரியை நோக்கித் திரும்பிச் செல்லுதல் ஆகும்.
- ஒட்டுறவு என்பது இரு மாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்குகின்றது.
- ஒரு மாறியின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் மற்ற மாறியின் மதிப்பில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே ஒட்டுறவு ஆகும்.

**27. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?**

- பொருளாதார அளவையியல் என்பது பொருளியல், புள்ளியியல் மற்றும் கணிதம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைப்பாகும்.
- { பொருளியல் + புள்ளியியல் + கணிதம் } + எண் வடிவ புள்ளி விவரங்கள் = பொருளாதார அளவையியல்

**28. புள்ளியியலின் தந்தை பற்றி சிறு குறிப்பு வரைக.**

- தாவரவியல் அறிஞரான ரெனால்டு பிஷர் புள்ளியியலின் தந்தை ஆவார்.
- இவர் புள்ளியியலில் அடிப்படை நெறிமுறைகளை ஏற்படுத்தினார்.
- இவர் கடந்த கால நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்தார்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

**29. புள்ளியியலின் பணிகள் யாவை?**

1. புள்ளியியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.
2. இது பரந்த விவரங்களை சுருக்கித் தருகிறது.
3. இது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
4. இது எடுகோள்களை



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது.

5. இது மதிப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.

6. கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது.

**30. பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினை காண். 14, 22, 9, 15, 20, 17,12, 11**

| வ. எண் | X | $X - \bar{X}$ | $(X - \bar{X})^2$ |
|---|---|---|---|
| 1 | 14 | (14 − 15) − 1 | 1 |
| 2 | 22 | (22 − 15) 7 | 49 |
| 3 | 9 | (9 − 15) − 6 | 36 |
| 4 | 15 | (15 − 15) 0 | 0 |
| 5 | 20 | (20 − 15) 5 | 25 |
| 6 | 17 | (17 − 15) 2 | 4 |
| 7 | 12 | (12 − 15) − 3 | 9 |
| 8 | 11 | (11 − 15) − 4 | 16 |
| N =8 | ΣX = 120 | $\Sigma(X - \bar{X}) = 0$ | $\Sigma(X - \bar{X})^2 = 140$ |

$$\bar{X} = \frac{\Sigma X}{N}$$

$$\bar{X} = 120 / 8 = 15$$

$$\sigma = \sqrt{\left(\frac{\Sigma(x-\bar{x})^2}{n}\right)} \qquad \sigma = \sqrt{140/8}$$

$$\sigma = \sqrt{17.5} \qquad \sigma = 4.18$$

**31. பல்வகையான உடன் தொடர்புகளை கூறி விளக்குக.**

1. மாறிகளுக்கு இடையேயான உறவின் திசை அடிப்படையில் :

அ ) நேர்மறை உடன்தொடர்பு : இரு மாறிகளின் மதிப்புகளும் ஒரே திசையில் நகர்ந்து செல்லும்.

ஆ) எதிர்மறை உடன்தொடர்பு : இரு மாறிகளின் மதிப்புகள் எதிர் எதிர் திசையில் நகர்ந்து செல்லும்.

2. பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்:

அ ) எளிய உடன்தொடர்பு : ஒரு நேரத்தில் இரு மாறிகளை மட்டும் எடுத்துக் கொள்வது.

ஆ ) பன்முக உடன்தொடர்பு : இரண்டிற்கும் மேற்பட்ட காரணிகளை ஒரு சேர எடுத்துக்கொள்வது.

இ ) பகுதி உடன்தொடர்பு : இரண்டிற்கும் மேற்பட்ட காரணிகளை எடுத்துக்கொண்டாலும் அவற்றில் இரு காரணிகள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது.

3. பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளும் மாறிகளின் மாறும் விகித அடிப்படையில் :

அ) நேர்கோட்டு உடன் தொடர்பு இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் ஒரே அளவாக இருப்பது.

ஆ ) வளைகோட்டு உடன்தொடர்பு இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் ஒரே அளவாக இல்லாமல் இருப்பது.

**32. ஒட்டுறவுப் பகுப்பாய்வின் பயன்களை கூறுக.**

1. ஒட்டுறவு என்பது இரு மாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்குவதற்கு பயன்படுகிறது.

2. தனித்த மாறியின் குறிப்பிட்ட மதிப்பிற்க்கு சார்பு மாறியின் மதிப்பு எவ்வளவு என்பதை ஊகம் செய்ய உதவுகிறது.

3. நேர்கோடு அல்லாத தொடர்புகளையும் ஆய்வு செய்வதால் இதன் பயன்பாடு விரிவடைந்துள்ளது.

4. இது அதிகம் மேற்கணக்கீட்டிற்கு பயன்படுத்தப்படுகின்றது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

33. பொருளாதார அளவையியலின் நோக்கங்களை கூறுக.

1. பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல் மூலமாக அறிந்து விளக்குவதற்கு உதவுகின்றது.

2. மாறிகளுக்கு இடையேயுள்ள பழைய மற்றும் நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிரூபிப்பதற்கு உதவுகின்றது.

3. புதிய கோட்பாடுகளையும் புதிய உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகின்றது.

4. எடுகோள்களை சோதனை செய்யவும், முழுத்தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது.

34. பொருளாதார மாதிரியிலிருந்து பொருளாதார அளவையியல் மாதிரியினை வேறுபடுத்துக.

| பொருளாதார மாதிரி | பொருளாதார அளவை மாதிரி |
|---|---|
| *1. கணித பொருளியல் மாதிரிகள் பொருளாதார கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக் கப்படுகிறது.* | *பொருளாதார அளவையியல் மாதிரிகள் கோட்படுகளின் நம்பகத்தன்மையை அறிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சோதனை செய்யப்படுகிற* |
| *2. புள்ளியியலில் இருக்கும் ஒட்டுறவு மாதிரியில் பிழைக் கருத்து இல்லை* | *இதில் பிழை கருத்து உள்ளடக்கி யிருக்கிறது.* |

35. இந்தியாவில் புள்ளியியல் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவத்தை விவாதி.

மத்திய புள்ளியியல் அலுவலகம் (CSO)

இதன் முக்கியப் பணி நாடு முழுவதிலும் நடைபெறும் புள்ளிவிவர சேகரிப்புகளை ஒருங்கிணைப்பது மற்றும் அவற்றினை பரிசோதிப்பதும், தர மேம்பாட்டினை உறுதிப்படுத்துவதும் ஆகும்.

தேசிய மாதிரி கூறெடுத்தல் அலுவலகம் (NSSO) :

புள்ளியியல் பணியைப் பொறுத்தவரை இது மிகப் பெரிய அமைப்பாகும்.

அ) **திட்ட அமலாக்கத் துறை**

ஆ ) தேசிய புள்ளியியல் குழு இவைகளும் புள்ளிவிவர விசரணைகளை மேற்கொண்டுள்ளது

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

36. புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.

புள்ளியியலின் இயல்புகள் :

1. புள்ளியியலில் அறிவியல், கலையியல் ஆகிய இரண்டின் தன்மைகளும் கலந்திருக்கின்றன.

2. புள்ளியியல் ஒரு முறைப்படுத்தப்பட்ட தொகுப்பாகும்.

3. இது விவரங்களை பகுத்தாய்ந்து, அதன் அடிப்படையில் கோட்பாடுகளை உருவாக்கவும், உருவாக்கப்பட்ட கோட்பாடுகளை சோதனை செய்து துல்லியமாக முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது.

புள்ளியியலின் பரப்பு :

1. பொருளியலில் புள்ளியியல் :

எடுகோள்களை உருவக்குவது, விவரங்களை திரட்டுவது, வகைப்படுத்துவது, பகுப்பாய்வு செய்வது, முடிவுகளை எடுப்பது, கொள்கைகளை வகுப்பது என புள்ளியியல் பொருளியலில் இரண்டற கலந்துள்ளது.

2. தொழிலில் புள்ளியியல் :

தொழிற்சாலைகளில் பொருட்களின்

தரத்தை சோதிக்க பயன்படுகிறது.

3. புள்ளியியலும் வணிகமும் :
உற்பத்தியும் சந்தையிடலும் ஒருசேர நடப்பதில்லை. உற்பத்தியை முன்கூட்டியே திட்டமிட புள்ளியியல் உதவுகிறது.

4. புள்ளியியலும், கல்வியியலும்
மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய கல்விக்கான தேவையை கண்டறிவதில் புள்ளியியல் மிகப்பெரிய பங்கினை வகிக்கின்றது.

5. புள்ளியியலும், திட்டமிடலும்

- அனைத்து அரசுத் துறைகளும் சிறப்பாக இயங்கும் பொருட்டு திட்டமிடலின் அடிப்படை யிலே செயல்படுகிறது.
- இந்தியாவின் மைய, மானில மற்றும் உள்ளூர் அரசுகள் திட்டமிடலின் அடிப்படையிலேயே செயல்படுகிறது.

37. பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக.

| X | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

| ட.எண் | X | Y | (X-A)=dx A = 30 | (Y-A)=dy A = 26 | dx2 | dy2 | Dxdy |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 23 | 18 | 7 | 8 | 49 | 64 | 56 |
| 2 | 27 | 22 | 3 | 4 | 9 | 16 | 12 |
| 3 | 28 | 23 | 2 | 3 | 4 | 9 | 6 |
| 4 | 29 | 24 | 1 | 2 | 1 | 4 | 2 |
| 5 | 30 | 25 | 0 | 1 | 0 | 1 | 0 |
| 6 | 31 | 26 | 1 | 0 | 1 | 0 | 0 |
| 7 | 33 | 28 | 3 | 2 | 9 | 4 | 6 |
| 8 | 35 | 29 | 5 | 3 | 25 | 9 | 15 |
| 9 | 36 | 30 | 6 | 4 | 36 | 16 | 24 |
| 10 | 39 | 32 | 9 | 6 | 81 | 36 | 54 |
| N= 10 | ΣX= 311 | ΣY= 257 | Σdx= 11 | Σdy= -3 | Σdx2 =215 | Σdy2 =159 | Σdxdy =175 |

$[\bar{X}] = \Sigma x / n = 311/10 = 31.1$

$[\bar{Y}] = \Sigma x / n = 257/10 = 25.7$

$$\therefore r = \frac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$$

$$r = \frac{10X175 - (11X - 3)}{\sqrt{(10X215) - 11^2}\sqrt{(10\,X159) - (-3^2)}}$$

$$r = \frac{1750+33}{\sqrt{2150-121}\sqrt{1590-9}}$$

$$r = \frac{1783}{\sqrt{2029}\sqrt{1581}}$$

$$r = \frac{1783}{45.04\ X\ 39.76`}$$

$$r = \frac{1783}{1790.79`}$$

**r = 0.9955**

38. பின்வரும் விவரங்களிலிருந்து Y மீது X மற்றும் X மீது Y ஆகியவற்றினை கண்டறிக.

| Y | 45 | 48 | 50 | 55 | 65 | 70 | 75 | 72 | 80 | 85 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | 25 | 30 | 35 | 30 | 40 | 50 | 45 | 55 | 60 | 65 |

| X | Y | $d_x$=X−45 | $d_y$= Y−65 | $d_x^2$ | $d_y^2$ | $d_xd_y$ |
|---|---|---|---|---|---|---|
| 25 | 45 | −20 | −20 | 400 | 400 | 400 |
| 30 | 48 | −15 | −17 | 225 | 289 | 255 |
| 35 | 50 | −10 | −15 | 100 | 225 | 150 |
| 30 | 55 | −15 | −10 | 225 | 100 | 150 |
| 40 | 65 | −5 | 0 | 25 | 0 | 0 |
| 50 | 70 | 5 | 5 | 25 | 25 | 25 |
| 45 | 75 | 0 | 10 | 0 | 100 | 0 |
| 55 | 72 | 10 | 7 | 100 | 49 | 70 |
| 60 | 80 | 15 | 15 | 225 | 225 | 225 |
| 65 | 85 | 20 | 20 | 400 | 400 | 400 |
| 435 | 645 | −15 | −5 | 1725 | 1813 | 1675 |

www.Padasalai.Net www.CBSEtips.in



$N = 10$

$\bar{X} = \Sigma X / N = 435 / 10 = 43.5$

$\bar{Y} = \Sigma Y / N = 645 / 10 = 64.5$

$$b_{yx} = \frac{N\ \Sigma d_X d_Y - (\Sigma d_X)(\Sigma d_Y)}{N\ \Sigma d_Y^2 - (\Sigma d_Y)^2}$$

$$= \frac{(10)(1675) - (-15)(-5)}{(10)(1813) - (-5)^2}$$

$$= \frac{16750 - 75}{18130 - 25}$$

$$= \frac{16675}{18105}$$

$$= \mathbf{0.92}$$

X மீது Y

$X - \bar{X} = b_{YX}(Y - \bar{Y})$

$X - 43.5 = 0.92(Y - 64.5)$

$X - 43.5 = 0.92Y - 59.34$

$\mathbf{X = 0.92Y - 15.84}$

$$b_{xy} = \frac{N\ \Sigma d_X d_Y - (\Sigma d_X)(\Sigma d_Y)}{N\ \Sigma d_X^2 - (\Sigma d_X)^2}$$

$$= \frac{(10)(1675) - (-15)(-5)}{(10)(1725) - (-15)^2}$$

$$= \frac{16750 - 75}{17250 - 225}$$

$$= \frac{16675}{17025}$$

$$= 0.98$$

Y மீது X

$Y - \bar{Y} = b_{yx}(X - \bar{X})$

$Y - 64.5 = 0.98(X - 43.5)$

$Y = 0.98X - 42.63 + 64.5$

$\mathbf{Y = 0.98X + 21.87}$



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com